www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

පිටු 20 / பக்கம் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

செப்.10- 16,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 118



## புலிகளின் பார்வையில் தொண்டா

## சந்திரிக்கா அரசுக்கு இந்தியாவின்



# இரகசியச் செய்தி



ரஜனியின் மூன்று முகம்

ஒரு வித்தியாசமான வீராங்கனை

ரசிகனின் இலக்கிய நயம்

## பிரபுவின் புது முடிவு

## உச்சி முதல் உள்ளங்கால் வரை



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## இறுதிவரை வேகம் வேண்டும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வாவிகளில் மிதந்த பிணங்கள்
பாராளுமன்ற வாவிவரை வந்து
எட்டிப்பார்த்த போதுதான்
அரசு விழித்துக் கொண்டது.

முன்பும் விசாரணைகள் பற்றி
பேசப்பட்டபோதும்,
செயலளவில் எதுவும் நடக்கவில்லை.

முதலாவது பிணம் மிதந்தபோதே
உஷாராகியிருந்தால்
குற்றவாளிகளை முன்கூட்டியே
மடக்கியிருக்கலாம்.

மந்தகதியில் விசாரணைகள்
நடந்து கொண்டிருந்தமையால்
கொலையாளிகள் சுதந்திரமாக
நடமாடித்திரியவும் - பலர்
பிணமாகவும் காரணமாகிவிட்டது.

துரிதமாகச் செயற்பட்டால்
குற்றவாளிகளைக் கண்டறிந்துவிடலாம்
என்பதற்கு-
பாராளுமன்ற வாவியில் பிணங்கள்
மிதந்ததையடுத்து
மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்
தக்க சான்றாகும்.

வெள்ளம் வருவது தெரிந்தும்-அது
தலைக்கு மேல் வரும்வரை
தாமதிப்பதுதான்-
தொடரும் துரதிஷ்டம்.

இப்போதுகூட ஜனாதிபதியே
முன்வந்து முடுக்கிவிட்டிருக்காவிட்டால்
துரித கதியில் குற்றவாளிகளுக்கு
வலை வீசப்பட்டிருக்குமா
என்பது சந்தேகம்தான்!

நடவடிக்கைக்கு உத்தரவிட்டதற்காகவும்
படைகள் மத்தியிலேயே
களைகள் இருந்தமையை
மூடிமறைக்க முயலாமைக்காவும்
ஜனாதிபதியைப் பராட்டலாம்!

ஆனால், முழுமையான பாராட்டை
விசாரணைகள் முடிவடைந்து
குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட
பின்னர்தான் தெரிவிக்க வேண்டும்.

மாட்டிக்கொண்டது
வெறும் அம்புகள்தானா?
எய்தவர்கள் வேறு யாரோவா?
அரசுக்கே தெரியாமல்
தொடர் கொலைகளைச் செய்யும்
துணிச்சல் எப்படி வந்தது?
ஆகவே, எய்தவர்கள்
லேசுப்பட்டவர்களல்ல என்றும்
நம்பக்கூடியதாக இருக்கிறது.

அம்புகளை மட்டுமே
முறித்துப் போடுவதால் பயனில்லை:
எய்தவர்கள் -
இனம் காணப்படாவிட்டால்
புதிய அம்புகளை ஏவுவது
எதிர்காலத்திலும் தொடரலாம்.

எனவே-முழுமையான விசாரணையும்
அதன் விபரங்கள்
வெளிப்படையாக வேண்டியதும்
மிக முக்கியமானதாகும்.

வழக்கமாக-இவ்வாறான
விசாரணைகள்-
ஆரம்பத்தில் சூடாக இருக்கும்:
பரபரப்பும் அதிகமாக இருக்கும்:
பின்னர் மெல்ல மெல்ல
சப்தமே இல்லாமல் அடங்கிவிடும்.
மக்களும் மறந்து விடுவார்கள்.

பொதுஜன முன்னணி அரசு
கடந்தகால வழக்கத்தை
மாற்றுமேயானால்-
பொது மக்களின் நம்பிக்கையில்
அது உயர்ந்து நிற்கும்.

கைது செய்யப்பட்டிருப்பவர்களில்
ஒரு சிலருக்கு
கடந்த கால மனித வேட்டைகளிலும்
தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக, மட்டக்களப்பில்-
வந்தாறுமுலை பல்கலைக்கழகத்தில்
நடந்த மனித வேட்டையில்
தொடர்பிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

வேறு பல சந்தேகங்களும்
எழுந்திருக்கின்றன.
எனவே- அவை குறித்தும்
தீர விசாரிப்பது அவசியம்.

விசாரணைகளில் உள்ள வேகம்
இறுதிவரை தொடர்ந்து-
குற்றவாளிகள் தண்டிக்கப்படும்போதே
திருவாளர் பொதுஜனத்தின்
பாராட்டும், நம்பிக்கையும்
அரசுக்கு திருப்தியோடு கிடைக்கும்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை.

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## ஆடையா—ஆன்மீக வாழ்வா

நவீன உலகில் உடை ஓர் அலங்காரப் பொருளாக மாறியுள்ளது. உடை மானத்தை மறைப்பதற்காக ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இன்று சுயமதிப்பை விளம்பரப்படுத்துவதற்குரிய ஒரு சாதனமாக மாற்றப்பட்டுள்ளது. முதலிற் கூறியதே பரமபிதாவின் நோக்கமாக இருந்தது.



"தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்" -(ஆதி. 3-21)

குற்றம் புரிந்தபின் மானத்தை மறைப்பதற்கு ஒரு சாதனமாகவே தோல் உடை உபயோகிக்கப்பட்டது.

காலமாற்றம் கருத்து மாற்றத்தைக் கொண்டுவந்து இருந்தாலும், பேதுரு கூறுவதைச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

"மனைவிகளே! மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாக இருக்கிற சாந்தமும் அமைதியுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கும் குணமே உங்களுக்கு அலங்காரமாய் இருக்கக் கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது." (1 பேது: 3: 1-4)

அலங்கார உடைகளில் மனத்தை செலுத்துவதைவிட ஆன்மீக விடயங்களில் மனத்தைச் செலுத்துவது மேன்மையானதல்லவா?

ஏ.பி.வி.கோமஸ்.

## குர்ஆன் ஓதுவதனால் கிடைப்பவை:

* குர்ஆனை தாமும் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுப்பவர் 'மேலானவர்' என்ற தகுதியை அடைகிறார்.
* குர்ஆனை மனப்பூர்வமாக நேசிப்பது அல்லாஹ்வின் மீது அன்பு இருப்பதின் அடையாளமாகும்.
* மறுமை நாளில் அல்லாஹ்விடம் நல்லடியார்களுக்காக மன்றாடும்.
* குர்ஆன் மஜீதின் ஞானங்கள் கரைகாண முடியாத சமுத்திரத்தைப் போன்றதாகும்.
* மறுமையில் மேலான பதவியை அடைய எண்ணமுள்ளவர்கள் குர்ஆன் மஜீதை ஓதவேண்டும்.
* குர்ஆனை ஓதக்கூடியவருக்கு ஒவ்வோர் எழுத்துக்கும் ஒரு நன்மைவீதம் கொடுக்கப்படும்.
* குர்ஆனை மனனம் செய்து அதிலுள்ளபடி ஹலால் ஹராமைப் பேணி நடப்பவர் மறுமையில் அவரின் குடும்பத்தினரில் நரகத்திற்கு தகுதியான பத்துப்பேருக்கு (அல்லாஹ்விடம்) மன்றாட அனுமதிக்கப்படும்.
* குர்ஆனிலிருந்து சிறிதளவாவது மனனம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாதவர் 'பாழடைந்த மனை போன்றவர்' என்ற சொல்லுக்கு ஆளாகிறார்.
* மனதிலுள்ள துருவை அகற்றிவைக்கும். குர்ஆனை ஓதுவதுடன் மவுத்தையும் நினைவு கொள்ள வேண்டும்.
* இந்த உம்மத்துடைய சிறப்பும் பெருமையும் குர்ஆனைக் கொண்டே கிடைக்கும்.
* பல ஆயிரம் தடவை ஓதினாலும் அலுப்போ, வெறுப்போ ஏற்படாது.
* குர்ஆன் ஓதுபவருடைய சப்தத்தை அல்லாஹ் மகிழ்ச்சியுடன் கேட்கிறான்.

காத்தநகர் மசூத் அஹமத்-காத்தான்குடி 03

## கவிதைப்போட்டி இல—115

### பரிசுக்குரிய கவிதை

#### என் துன்பம் பாரீர்!

நீடித்த போர்இங்கே நிம்மதியைக் குடிக்கும்
நித்தமிங்கே பஞ்சம் வந்து பட்டினியை விதைக்கும்
உலர் உணவு பெறுவதற்காய் வரிசையிலே நிற்க
நிலச் சூடும் சேர்ந்து இங்கே மேனியை வதைக்க
இல்லம் வந்து ஆசையுடன் அதை சமைத்து உண்ண
கல்லொன்று பல்லினிலே சிக்கி விட்டதையோ!
கைவிட்டும் பார்க்கின்றேன் எடுக்க முடியவில்லை
பையப்பைய சூழும் எந்தன் துன்பமதைப் பாரீர்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**யாருமில்லை**

அம்மாவும், அப்பாவும்
அழிந்தார்கள் யுத்தத்தால்!
வாய்திறந்து கத்துகிறேன்
வருவோர் யாருமில்லை!
என்னையும் அழித்து விடு
மேலோகம் சென்றிடலாம்!

முஸம்மது பஸ்லான்-
மல்வானஹின்னை.

**ஹீரோ நான்!**

அணுகுண்டு வீச்சின்
அழியாத அவலத்தால்
அரை குறையாய்ப் பிறந்து
கருவறைக் குறை சொல்லும்
கறுப்புச் சின்னம்
ஹிரோஸிமாவின்
ஹீரோ நான்!

செல்வி.நஜீமா அஹமட்-கல்முனை-04

**குண்டின் மகிமை**

யப்பானில் போட்ட குண்டில்,
தலை-தப்பியதும் ஒருசிலர்தான்,
அச்சிலரின் வாரிசு நான்
அதிசயமா இருக்கேனோ?

நஸபியா பஹுர்தீன்-புத்தளம்

**பல்வலி**

பல் வலியால் பதறுகின்ற
பாலகனின் துயர் துடைக்க
நல்ல வைத்தியரும்
நாடி வந்து சேர்வதெப்போ?

முஸ்தபா இஸ்ஸத்-ஏறாவூர்

**ஏமாற்றம்**

விருந்து உபசாரத்திற்கு
விருப்புடனே வந்துவிட்டு
அன்னம் கிடைக்குமென்று
அமைதியாக இருந்துவிட்டு
எதிர்பார்த்து எதிர்பார்த்து
ஏமாந்த நிலையினிலே:
கொட்டாவி விடுகின்ற
கொடுஞ் சோகக் கோலமிதோ?

வாசுகி சிவப்பிரகாசம்-களுவாஞ்சிக்குடி.

**ஆழியிலே அசையுமா கப்பல்?**

இப்போது வெளியேறியது,
கொட்டாவி மட்டும்தான்!
எப்போது போகிறதோ,
எம்மாவி தெரியாது!
அப்போதாவது ஆழியிலே
அசையுமா உணவுக்கப்பல்?

ம.அமுதா-மட்/கல்லடி

**முனைவது யார்?**

படிக்க முடியவில்லை....
வழி நெடுகக் கொட்டாவி:
காலைப் பசி தீர்க்க
கைநிறையத் தேவை பணம்!
வடக்கின் நிலை யாரறிவார்?
இருள் துடைக்க யார் முனைவார்?

ஏ.அஹ்மது ஜுனைது-ஏறாவூர்-06.

**சின்னத்தம்பி!**

சின்னத்தம்பி குட்டித்தம்பி!
வெள்ளைக்காரப் பெரிய தம்பி!
நாலு சொல்லுப் படித்த தம்பி!
கோட்டுச் சூட்டுப் போட்ட தம்பி!
நான் என்ன சொல்லத் தம்பி,
அன்பான செல்லத் தம்பி,
கொட்டாவி வந்து விட்டால்
எல்லாமே போச்சுத் தம்பி!

கே.எஸ் கயிலாயநாதன்-வவுனியா.

**ஆ?**

ஆ— ஆ— ஆ—
விண்ணில் இடி முழக்கம்
மண்ணில் வெடி முழக்கம்
மடிவதோ மக்கள்!
நாட்டில் பெருவழக்கம்

க.சுரேஸ்-குருக்கள்மடம்.

**பாவமிதோ?**

விண் முட்டும் வெடிச்சத்தம்
விடியும் வரை ஓயாதோ?
பண் பாடித் தாலாட்ட
பாவி எந்தன் அன்னையில்லை
கண் உறங்க பத்திரமாய் இடமுமில்லை
மண்மீது பிறந்துவிட்ட பாவமிதோ?

ருத்திரா சின்னத்துரை-மட்டக்களப்பு

**சுதந்திரம்**

"வாயை மூடுடா
தமிழ்வானா"

ச.கிறிஸ்டீன் குட்ராயர்-
அட்டன்

**ஏன் மறந்தார்?**

சோம்பல் கெடுதி என்று
சொன்னாரே பாரதியார்
தேன் கவியை உன் தந்தை
போதிக்க மறந்தாரோ!

ச.மகாலிங்கம்-வெளிமடை



பொய்யுடல் முகத்தே பொதிந்துள்ள மாயம்
புரியாத புதிர் புகுந்து விளையாடும் காலம்
அடையாள அட்டைக்கு அணியான சின்னமே-ஓர்நாளில்
அடையாளமே தெரியா நிலையாகும் திண்ணமே..!"

அமிர்த சந்திரபாலன்-திருகோணமலை

**பங்கரில் பாலகன்**

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிட
பங்கர்கள் ஈந்த படை
போருக்குத் தந்திரம் புதுப்புதுப் பாய்ச்சல்கள்
புண்ணிய திருத்தலத்துள்
பாரினில் அகதிகள் வாழ்கின்ற கோலம்
சற்றும் பலமே இல்லாமல்
பாரிய நட்டம்படைத்தவனுக்கல்லோ-அமைதி
பல்லாண்டு சென்றிடுமோ

கே.தேவதாசன்-அக்கரைப்பற்று-07

## கவிதைப் போட்டி இல-118



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 16.09.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 118
தினமுரசு வாரமலர்
த.பெ.இல—1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

இரு தரப்பின் பலம், பலவீனங்களை துல்லியமாய் எடைபோடுகிறது எக்ஸ்ரே ரிப்போர்ட்.

ஏ.எல்.நஜிமுதீன்-அக்கரைப்பற்று.

ராஜதந்திரியின் அலசல் நன்று. கடந்த கால சம்பவங்களையும் நினைவூட்டி தற்போதைய நடப்புக்களை வெளிக்கொண்டுவருகிறார்.

கு.பாலச்சந்திரன்-கலஹா

இலக்கிய நயம் இனித்தது. ராஜேஸ்குமார் தரும் தொடர் பிரமாதம்.

ஸியாவீர் குட்டி-கிண்ணியா

வரவர சினிவிசிட் சூப்பராக இருக்கிறதப்பா. சினிவிசிட் தயாரிப்பாளர் ஜொள்ளுப் பார்ட்டியா இருப்பாரோ?

வி.கனகராஜன்-நுவரெலியா

'தாய்' நாவல் காலத்திற்கு ஏற்ப முரசில் மலர்ந்த காவியம். ஒவ்வொர் அங்கமும் எங்கள் வீட்டில் பத்திரமாக சேகரிக்கப்படுகிறது.

ஆர்.பூர்ணிமா-கண்டி

யோவ்! எக்ஸ்ரே ரிப்போர்ட் ஏற்கனவே சூடு அதிகம். இதில் வேறு சமையல், சாதம் என்றெல்லாம் பிசைந்து தீர்வுத் திட்டத்திற்கு ஏனய்யா தீய்ந்த வாசனை உண்டுபண்ணுகிறீர்? (அ...ஹ.ஹ்ஹ)

து.சர்மிளாதேவி-கலஹா

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிக்கப்படுபவர்கள்:

எம்.ஐ.ஏ.ஹலீம், ரனீஸ்,
ஆலங்குடா.
தினேஸ், ஜென்சி,
அக்கரைப்பற்று-8.
மரினா நியாஸ்,
கண்டி.
பா.பிரதீபன்,
அக்கரைப்பற்று-8.
ஏ.எம்.கலீல்,
நிந்தவூர்.
எம்.எம்.லன்பர்,
கிண்ணியா-06.
ஏ.எஸ்.எம்.இம்ரான்,
தர்காநகர்.
கே.வின்சன்,
மட்/சத்துருக்கொண்டான்.
செல்வி.நியாசா சித்தீக்,
அக்குறணை.
கரீமா ராஷிக்,
நாரம்மல.
செல்விகள்.என்.எம்.றஜீனா,
என்.எம். பஹீனா
ஹொரவ்பொதானை.
திருமதி.ஜெ.ஜெகதீஸ்வரி,
திருகோணமலை.
ஆ.பிரசாத்,
இருதயபுரம், மட்டக்களப்பு.
சுபாவரன்,
கண்டி.
ஏ.சி.எம். ராபி,
உக்குவலை.

லேடிஸ் ஸ்பெசல் அசத்துகிறது. ஹலோ டாக்டர் தருவதும் பயனுள்ள தகவல்களே!

மும்தாஜ் அன்வர், ஸரீஹாஷியாட் -
வெளிமடை

முரசைக் கண்டவுடன் எதை முதலில் படிப்பது என்று திண்டாட்டம். ஒரு நிமிஷ நிசப்தம் சூடாகிவிட்டது.

திருமதி.இராஜேஸ்வரி சிவநிதன்,
சிவரூபன், துஷாந்தினி, மங்கேஸ்-செங்கலடி

யார் குற்றவாளி? உண்மைக் கதையில் முதல் வாரமே ரசிக முத்திரை.

எல்.ஆர்.பர்சானா-ஏறாவூர்.

தேன்கிண்ணம் வெரி சூப்பர். அரசியல் தொடர் வெரி வெரி சூப்பர்.

என்.எம்.றபாய்தீன்-நிகவெவ

கவிதைப் போட்டிக் குட்டிக் கவிதைகள் நாட்டு நடப்பை 'நச்' என்று குத்திக்காட்டுகின்றன. சபாஷ்

வ.சங்கர்லால்-திருகோணமலை.

ரசிகன் தனது பாணியில் தந்த ஜிகாத், ஜிகாத், அபுஜிகாத் என் கண்களில் கண்ணீரை வரவழைத்துவிட்டது.

பி.எம்.முஹம்மதுஅனீஸ்-
கொழும்பு 12






படிப்பகம்

www.padippakam.com

# நீண்டதூரத் தாக்குதலுக்கு புலிகளிடம் பீரங்கி!

# பலாலி படைத்தள தாக்குதலையடுத்து சந்தேகம்?

## மூன்று மாத காலத்தில் 75 இலட்சம் திரட்டல்

(அரசியல் செய்தியாளர்)

**பாதுகாப்புப் படைகளின் பாரிய தாக்குதலை எதிர்கொள்ள பிரபாகரன் முன்னேற்பாடுகளை செய்து வருகிறார் என்று புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' தெரிவித்துள்ளது. நூறு கோடி ரூபாய் திரட்டும் புலிகளின் திட்டப்படி கடந்த மூன்றுமாத காலத்துக்குள் 75 இலட்சம் ரூபாய் வரை பொதுமக்களிடமும், வர்த்தகர்களிடமும் திரட்டப்பட்டுள்ளது.**

**4.09.95** அன்று பலாலியில் உள்ள படைத்தளம் மீது புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

பலாலி படைத்தளத்தில் உள்ள விமான ஓடுபாதைக்கு சமீபமாக புலிகளது ஷெல்கள் விழுந்து வெடித்துள்ளன.

விமான ஓடுபாதையில் ஷெல்கள் விழுந்து வெடித்தமையால் நீண்டதூரம் ஷெல்களை ஏவக்கூடிய புதிய பீரங்கிகளை புலிகள் பெற்றுள்ளார்கள் என்று நம்பப்படுகிறது.

பலாலி படைத்தளத்தை அண்டியுள்ள பகுதிகளும் படைத்தரப்பின் கட்டுப்பாட்டில் இருப்பதால் புலிகள் உள்ளே அதிகதூரம் ஊடுருவிச் செல்லும் வாய்ப்பில்லை.

குறைந்தது 7 கிலோமீற்றர் தூரத்தில் இருந்து புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

இதுவரை புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல்களையே நடத்திவந்தனர். மோட்டார் ஷெல் தாக்குதல் நீண்டதூரம் செல்ல முடியாது. 'களப் பீரங்கிகள்' (Field Gun) என்றழைக்கப்படும் பீரங்கி வகைகளில் ஒன்று மூலமே புலிகள் தாக்கியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் புலிகள் வெளியிட்ட செய்திக்குறிப்பில், தம்மால் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று மட்டுமே புலிகள் அறிவித்துள்ளனர். மோட்டார் ஷெல் தாக்குதலா, பீரங்கி மூலமான ஷெல் தாக்குதலா என்பதைப் புலிகள் தெரிவிக்க வில்லை.

நீண்ட தூரப்பீரங்கிகள் ஒன்று அல்லது இரண்டு புலிகளிடம் இருந்தால் பலாலி விமானத்தளத்தில் விமானங்களை இறக்கு வது கடினமாகிவிடும்.



நிதியைப் பெறுபவர், புலிகளது நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி

படையினரின் பாரிய நடவடிக்கையை எதிர்கொள்ள பிரபாகரன் நேரடியாக யுத்த தயாரிப்பில் ஈடுபட்டுள்ளார் என்று புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' தெரிவித்துள்ளது.

எனவே- படையினரின் நடவடிக்கையின் போது பயன்படுத்துவதற்கான ஒரு பரீட் சார்த்த தாக்குதலை புலிகள் நடத்திப் பார்த்திருக்கலாம் என்று இராணுவ ஆய் வாளர்கள் கூறுகின்றனர்.

மழைக்காலத்துக்கு முன்னர் நடத்த திட்டமிடப்பட்டுள்ள வடக்கில் பாரிய படை நடவடிக்கையை தடுத்து நிறுத்தும் அச்சுறுத்தல் முயற்சியாக தமது பீரங்கிப் பலத்தை புலிகள் காட்டியிருக்கலாம் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

அவசரமாக டோராப் படகுகள் தாக்கப் பட்டமையும், விமான ஓடுபாதை குறிவைக் கப்பட்டமையும் படையினரின் வியூகத்தை தளரச்செய்யும் நடவடிக்கைகள் என்று சொல்லப்படுகிறது.

பலாலி தளம் ஷெல்வீச்சுக்கு உள்ளான தையடுத்து, படையினரும் பதிலுக்கு பீரங்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் பொதுமக்கள் நால்வர் காயமடைந்தனர்.

இதேவேளை நூறு கோடி ரூபாய்கள் திரட்டும் இலக்கை நோக்கிய நிதி திரட்டல் நடவடிக்கைகளிலும் புலிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தமது பலியான உறுப்பினர்களின் குடும்பங்கள், மற்றும் தமது உறுப்பினர்களின் குடும்பங்கள் போன்றவற்றுக்கு 'தமிழீழ பாதுகாப்பு நிதி' செலுத்துவதில் இருந்து புலிகள் முன்பு விலக்களித்திருந்தனர். தற்போது அக்குடும்பங்களும் நிதி வழங்க லாம் என்று அறிவித்துள்ளனர்.

கடந்த மூன்று மாதகாலத்துக்குள் 75 இலட்சம் ரூபாய்கள் வரை தமிழீழ பாதுகாப்பு நிதியாக புலிகள் பெற்றுள்ளனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் நீர்வேலியில் இருந்து மட்டும் 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், இணுவில் பகுதியில் இருந்து 6 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் பெற்றுக் கொண்டதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

நிதிக் கையளிப்புக் கூட்டங்கள் யாழ் குடாநாட்டில் பரவலாக நடைபெற்று வருகின்றன.

## தேடுதல் என்ற பெயரில் காமவேட்டை

## வெள்ளை வேன் கோஷ்டியின் வெறியாட்டம்!

(சஞ்சீவன்)

**தி**ருக்கோணமலையில் 'வெள்ளை வேன்' குழுவினர் மேற்கொண்டுவரும் அத்து மீறல்கள் குறித்து பல்வேறு செய்திகள் ஏற்கனவே வெளியாகி இருந்தன.

கடந்த மூன்றுவருட காலமாக 'வெள்ளை வேன்' கோஷ்டியினர் பல நூறு தமிழ் இளைஞர்களை கைது செய்தனர். புலிகள் என்று உள்ளே போட்டுவிடுவோம் என்று மிரட்டி பணம் பறித்து வந்தனர்.

வீதிகளில் செல்லும் பெண்களோடு சேஷ்டைகள் செய்வது, சந்தேகம் என்று கூறி சோதனை என்ற பெயரில் வரம்பு மீறுவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தனர். பல பெண்கள் இவர்களால் பலாத்காரம் செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியானபோதும், பயம் காரணமாக யாரும் புகார் செய்ய முன்வரவில்லை.

புலிகள் இயக்கத்தில் இருந்து பின்னர் இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களும் வெள்ளைவேனில் திரிகிறார்கள். புலிகளை அடையாளம் காண இவர்களை இராணுவ புலனாய்வுப் பிரிவினர் பயன்படுத்தி வருகின்றனர்.

புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர் களான கான், பைசால் என்னும் இருவர் 28.8.95 அன்று பட்டப்பகலில் திருமலையில் உவர்மலைப்பகுதியில் உள்ள வீடொன்றுக் குள் புகுந்தனர். அங்கு 39 வயதுடைய லட்சுமிப்பிள்ளை என்னும் பெண் மட்டுமே இருந்தார். வீட்டை சோதனையிட வேண்டும் என்று கூறிக்கொண்டு புகுந்த கானும், பைசாலும் அப் பெண்ணைப் பலாத்காரம் செய்து தமது காம இச்சையைத் தீர்த்துக் கொண்டனர். வெளியே சொன்னால் கொலை செய்துவிடுவோம் என்றும் மிரட்டிவிட்டுச் சென்றுவிட்டனர்.

மிரட்டலுக்கு அஞ்சாமல் லட்சுமிப் பிள்ளை திருக்கோணமலையில் உள்ள மனித உரிமைகள் பணிக்குழுவிடம் புகார் செய்துள்ளார். மனித உரிமைப் பணிக்குழு வினரால் அப்பெண் திருமலை தள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பொலி சாரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து கானும் பைசாலும் கைது செய்யப்பட்டனர். கானும், பைசாலும் கைது செய்யப்பட்டதால் ஆத்திரம் அடைந்த வெள்ளை வேன் கோஷ்டியினர், பாதிக்கப் பட்ட பெண் குடியிருந்த வீட்டின் அயலவர் களை மிரட்டியுள்ளனர். அப் பெண் நடத்தை சரியில்லாதவர் என்று விசாரணைக்கு வரும் அதிகாரிகளிடம் கூற வேண்டும் என்று எச்சரித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்மணியான லட்சுமிப் பிள்ளைக்கு 5 பிள்ளைகள் இருக்கின்றனர். புலிகளுக்கு சாப்பாடு கொடுத்ததாகக் கூறி கைது செய்யப்பட்டு ஏற்கனவே ஒன்றரை வருட காலம் சிறையில் இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் புலிகளுக்குள் மோதல்

## மர்மக் குண்டு வெடிப்புக்கள்- ஒருவர் பலி!

(மட்டக்களப்பு விசேட நிருபர்)

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மத்தியில் கடந்த வாரம் மோதல்கள் சில இடம்பெற்றுள்ளன.

இது பற்றி முரசுக்கு கிடைத்துள்ள தகவல்கள் கூறுவதாவது:

கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனையில் உள்ள பொண்டுகள் சேனை என்னும் பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவருக்கிடையே வாய்த்தர்க் கம் ஏற்பட்டது. தர்க்கத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். மற்றவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர். இருவருக்கும் இடையில் நடந்த வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது.

திருமலை மாவட்ட உறுப்பினரை மட்டக் களப்பு மாவட்ட உறுப்பினர் தாக்கிவிட்டார். இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள திருமலை மாவட்ட புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் ஆத்திரம் அடைந்தனர். இதனையடுத்து மோதல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் திருமலை மாவட்டத் தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கைது செய்யப் பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

தமது மாவட்ட உறுப்பினர்கள் மட்டக் களப்பு மாவட்ட உறுப்பினர்களால் கைது செய்யப்பட்டதை அடுத்து, திருமலை மாவட்டத்தில் இருந்து புலிகளது படையணி யொன்று மட்டக்களப்புக்கு விரைந்தது.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு குழுவினருக்கும் இடையே சிறு மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத் தில் உள்ள வவுணதீவு, ஏறாவூர் பிரதேச செயலக பிரிவுகளிலும் புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள பகுதிகளில் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றன. உழவு இயந் திரங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவை குண்டு வெடிப்பில் சிக்கிக்கொண்டன.

1.9.95 வெள்ளிக்கிழமை கிளைமோர் கண்ணிவெடித்தாக்குதலில் அருள் என்னும் புலிகள் அமைப்பு உறுப்பினர் பலியானார்.

மட்டக்களப்பு மாவட்ட புலிகள் அமைப்பு முக்கியஸ்தர் ஒருவருக்கு குறிவைத்து திருமலை மாவட்ட உறுப்பினர்கள் நடத்திய கிளைமோர் தாக்குதலில்தான் அருள் என்னும் உறுப்பினர் சிக்கிக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

குண்டுகள்வெடித்த பகுதிகள் புலிகளது பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாக்கு நீரிணைக்கு வேறு பெயர்

**யா**ழ்ப்பாணத்தில் "கச்சதீவு அன்றும், இன்றும்" என்னும் ஆய்வு நூலொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. யாழ்பல்கலை கழக கலை பீடாதிபதி போ.பாலசுந்தரம் பிள்ளை எழுதியுள்ளார். நூல் வெளியீட்டு விழாவில் அவர் உரையாற்றும் போது "'பாக்கு நீரிணை' என்னும் பெயரை 'தமிழ் நீரிணை' என்று மாற்ற வேண்டும்" என்று தெரிவித்தார். உலகில் உள்ள கடல்கள் எல்லாம் அதன் அருகில் வாழும் இனங்களின் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன. இரு பக்கமும் தமிழர்கள் வாழ்வதால் பாக்கு நீரிணையை தமிழ் நீரிணை என்று அழைக்க வேண்டும்" என்று அவர் தெரிவித்தார். நூல் வெளியீட்டு விழாவில் புலிகள் இயக்க பிரமுகர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

## பயணிகள் விடுவிக்கப்படுவர்

ஐரிஸ்மோனா கப்பலில் பயணம் செய்த பயணிகள் தமது பராமரிப்பில் இருப்பதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

6.9.95 அன்று பயணிகள் அனைவரும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளனர். அவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிடப் பிரதிநிதி பார்வையிட்டுள்ளார்.

'பயணிகள் அனைவரும் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார் கள். கப்பல் பயணிகளின் விடுதலை குறித்து சீறிலங்கா அரசுடன் பேச வேண்டிய அவசியம் இல்லை.' என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளனர்.

கப்பலையும், மாலுமிகளையும் விடுவிக்க வேண்டுமானால், கொழும்பில் கைது செய்யப் பட்ட தமது உறுப்பினர்கள் சிலரை விடுதலை செய்யவேண்டும் என்று புலிகள் கேட்கவுள்ளதாக யாழ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தபால்கள் உடைக்கப்பட்டதாக புகார்

**யா**ழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களுடன் சென்ற லங்கா கல்யாணி கப்பலில் 60 தபால் பொதிகளும் சென்றிருந்தன. கடந்த 4 மாதத்தின் பின்னர் தபால் பொதிகள் யாழ் சென் றுள்ளன.

உள்ளூர் தபால்கள் மட்டுமே பொதிகளில் வந்துள்ளன. 1500 தபால் பொதிகள் வரை வெளிநாட்டுக் கடிதங்களோடு கொழும்பில் தேங்கி யுள்ளன என்று யாழ் தபாலதிபர் தெரிவித் துள்ளார். உள்ளூர் கடிதங்கள் பல உடைக்கப்பட்ட நிலையில் வந்துள்ளன என்றும் அவர் புகார் தெரிவித்துள்ளார்.

## மூன்றாவது டோரா தாக்கப்பட்டதாக புலிகள் தெரிவிப்பு

## இரண்டு கடற் கரும்புலிகள் பலி என்றும் அறிவிப்பு

(யாழ் நிருபர் வர்மா)

**க**டந்த மாதம் 28ம் திகதி முல்லைத்தீவுக் கடலில் கடற்படை ரோந்துப் படகுகளான இரண்டு டோரா படகுகள் கடற்புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டன. இத் தாக்குதலில் கடற்புலிகள் தரப்பில் எவரும் பலியாக வில்லை. இதனையடுத்து இம்மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் திருமலை புல்மோட்டைக் கடலில் வைத்து மற்றொரு டோராப் படகை தாக்கும் முயற்சி கடற்கரும்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

டோராப் படகு தாக்கப்பட்டதாகவும், ஒரே வாரத்தில் நடந்த மூன்றாவது டோரா மீதான தாக்குதல் இதுவாகும் என்றும் புலிகள் யாழ்ப்பாணத்தில் உரிமைகோரி யுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில், புல்மோட்டை கடலில் சென்று கொண்டிருந்த புலிகளின் இரு படகுகள் கடற்படையால் தாக்கி அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டி ருக்கிறது. கடற்கரும்புலிகள் தாக்குதல் நடத்தியதாகவோ, டோரா தாக்கப்பட்ட தாகவோ கூறப்படவில்லை.

ஆனால், புலிகள் தமது செய்திக் குறிப்பில், மூன்றாவது டோராத் தாக்குதலில் இரண்டு கடற்கரும்புலிகள் பலியானதாகவும் தெரிவித்துள்ளனர். மேஜர் நகுலன், மேஜர் கண்ணாளன் ஆகிய கடற்கரும்புலிகள் பலியான தாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேஜர் நகுலன் யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்தவர். மேஜர் கண்ணாளன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

பலியாகியுள்ள மேஜர் நகுலன் என்பவர் தொடர்பாக புலிகள் வெளியிட்டுள்ள மற் றொரு தகவல் பின்வருமாறு:

விடுதலைப்புலிகளால் தயாரிக்கப்பட்ட 'உயிர்ப்பு' என்னும் குறும் திரைப்படத்தில் மேஜர் நகுலனும் நடித்துள்ளார். கடற்கரும்புலியாக சென்று டோரா பட கொன்றை தாக்குவது போன்ற காட்சியில் அவர் நடித்தார். இப்போது உண்மையாகவே ஒரு டோராப் படகை தாக்கிவிட்டு பலியாகி விட்டார் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

திருமலைக் கடலில் கடற் கரும்புலிகள் தாக்குவதற்கிடையில் கடற்படையினர் உஷாராகி தாக்குதல் நடத்தியிருக்கலாம். கரும்புலிப் படகு என்றோ, தாக்குதலுக்கு வருகிறதென்றோ தெரியாதநிலையிலும் படகைக் கண்ட கடற்படையினர் தாக்குதல் நடத்தியிருக்கலாம். அதனால் கடற்கரும்புலித் தாக்குதல் தோல்வியில் முடிந்திருக்கலாம் என்று ஒரு தகவல் தெரிவிக்கிறது. இது பற்றிய உறுதியான தகவல் கிடைத்ததும் முரசு வெளியிடும்.

## பிரபாவின் நேரடி உத்தரவில் திருமலை தாக்குதல்கள்

## சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவிடம் பொறுப்பு ஒப்படைப்பு

(அலுவலக நிருபர்)

**பு**லிகள் அமைப்பில் நிரந்தர இராணு வத்திற்குரிய கட்டமைப்போடு முதன் முதலில் உருவாக்கப்பட்ட படைப்பிரிவு சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவாகும். 1991 இல் ஆனையிறவு இராணுவ முகாம் மீதான தாக்குதலில் இப் படைப்பிரிவு தனது நடவடிக்கையை ஆரம்பித்தது.

'மூன்றாம் கட்ட ஈழப்போர்' திருமலையில் இருந்து புலிகளால் ஆரம்பிக்கப்பட்டது. சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவும் திருமலைக்கு அனுப்பப்பட்டது. யாழ்மாவட்ட புலிகளின் முன்னாள் தளபதியான செல்வராசா தலைமையில் அனுப்பப்பட்டுள்ள அப்படைப் பிரிவே திருமலையில் முக்கிய தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

28.8.95 அன்று திருமலை 6ம் கட்டையில் இருந்த பொலிஸ் நிலையத்தாக்குதலுக்கு சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியே பொறுப்பாகும் என்று புலிகள் யாழ்ப் பாணத்தில் அறிவித்துள்ளனர்.

திருமலையில் நிலக்கண்ணிவெடிகளை புதைப்பதில் ஈடுபட்டிருந்த சாள்ஸ் படை யணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் ஹில்மன் உட்பட 4 புலிகள் நிலக்கண்ணி வெடிவிபத்தில் பலியானார்கள். ஜூலை 28ம் திகதியே அவர்கள் பலியானார் கள். அவர்கள் பலியான ஒரு மாத நினைவை முன்னிட்டே ஆகஸ்ட் 28 இல் 6ம் கட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடவடிக்கையில் ஏழு புலிகள் பலியானார்கள். அவர்களில் ஆறு பேர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மட்டுமே மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

ஏ.கே.47 ரக துப்பாக்கிகள் 17, ரி.81.எல்.எம்.ஜி. ரக துப்பாக்கிகள் 2, 40 எம்.எம். எறிகணைகள் (மோட்டார் ஷெல்) 43, கைக்குண்டுகள் 24, தொலைத் தொடர்பு சாதனம் 2 போன்ற ஆயுதங்கள் தம்மால் கைப்பற்றப்பட்டதாகப் புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

திருமலையில் தங்கியுள்ள சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு பிரபாகரனின் நேரடி உத்தரவின் கீழ் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது. மேலும் பாரிய தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று நம்பப்படுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# அமைச்சர் தொண்டா மீது யாழில் விமர்சனம்!

## புலிகள் தரப்பிலிருந்து இரு வேறு கருத்துக்கள்

(யாழ் நிருபர் வர்மா)

புலிகள் அமைப்பிடம் ஐந்து வருட காலத்திற்கு நிருவாகத்தை ஒப்படைக்க வேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் யோசனை தெரிவித்துள்ளார் அல்லவா? இது தொடர்பாக புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவித்துள்ளார்:

விடுதலைப் புலிகள் இயக்கம் 10 வருட காலமாக இங்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தொண்டமான் கூறினால் என்ன, அரசு சொன்னால் என்ன எமது ஆட்சி தொடரும். விடுதலைப் புலிகள் இல்லாமல் ஒன்றுமே செய்ய முடியாது என்பது தொண்டமானுக்குப் புரிகிறது" என்று அன்ரன் பாலசிங்கம் கூறியிருக்கிறார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து புலிகளால் வெளியிடப்படும் ஈழநாதம் பத்திரிகையில் தொண்டமான் மீது விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது.

சர்ச்சைக்குரிய தொண்டமான் என்ற தலைப்பில் வெளியாகியுள்ள அந்த விமர்சனக் கட்டுரையில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது:

"தாங்கள் கூவுவதால்தான் பொழுது விடிகிறதென்று சேவல்கள் சில சமயம் நினைத்துக்கொள்ளக் கூடும். ஆனால், அதில் உண்மை இருப்பதில்லை.

அவ்வாறே சேவல் சின்னத்தில் போட்டியிட்டு 1977ல் நுவரெலியா-மஸ்கெலியா என்ற மூன்று அங்கத்தவர் தொகுதியில் மூன்றாவது இடத்தைப் பிடித்ததன் மூலம் மீண்டும் பாராளுமன்றத்திற்குள் புகுந்தது மூலம் தொண்டமான் தன்னை ஒரு அத்த துணிச்சல்காரர் போலவும், எவருக்கும் எதுக்கும் கட்டுப்படாத தன்னிச்சையான தலைவர் போலவும் காட்டிக்கொண்டு வருகிறார்.

பொதுஜன முன்னணி அமைச்சரவையில் தொண்டமான் விருப்பத்துக்குரியவர் அல்ல என்ற நிலையை அடைந்துள்ளார்.

ஆளும் கட்சிக்குத் தாவியது முதல் தொண்டமானுக்கு எதிரான போக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சூடு பிடித்திருக்கிறது.

இவ்வாறான நிலையில் இ.தொ.காவுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுவருகின்றன. இ.தொ.காவின் உறுப்பினர் பலம் 60,ஆயிரத்தையும் விட குறைந்துவிட்டது.

'அவதந்திரம் தனக்கு அந்தரம்' என்ற நிலையை நோக்கி தொண்டமானும், அவரது இ.தொ.காவும் சென்றுகொண்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடும் மேலோங்கத் தொடங்கியுள்ளது. இவ்வாறு புலிகளின் ஈழநாதம் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# காட்டூண் மூலை



நன்றி – லங்காதீப

# ஆறு மாதகாலமாக சம்பளமில்லாத உத்தியோகம்

## சுகாதார சேவைகள் பாதிப்படையும் அவலம்

(திருமலை நிருபர்)

ஆட்பற்றாக்குறை காரணமாக ஓய்வு பெற்றவர்களிலிருந்து மீளச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமல் வடக்கு-கிழக்கு சுகாதார சேவைகள் அமைச்சு திண்டாடுகிறது. சில உத்தியோகத்தர்கள் ஆறு மாதகாலமாகக் கூடச் சம்பளம் பெறாமல் வேலை செய்து வருகிறார்களாம்.

இந்தநிலை தொடருமாயின் தாங்கள் வெளியேறப்போவதாக மேற்படி ஊழியர்கள் தினமுரசுக்குத் தெரிவித்தனர். இவ்வாறு இவர்கள் வெளியேறும் பட்சத்தில் சகல தரத்திலும் ஆட்பற்றாக்குறை ஏற்பட்டு வடக்கு-கிழக்கு சுகாதார சேவைகள் பாதிப்படையலாம் என அஞ்சப் படுகிறது. சம்பளம் வழங்கப்படாமை காரணமாக மன்னார் ஆஸ்பத்திரி மருந்தாளர் ஒருவரும் ஆய்வுகூட உத்தியோகத்தர் ஒருவரும் வெளியேறிவிட்டதால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னார் ஆஸ்பத்திரி மேற்பார்வைக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் வருடா வருடம் ஆளுநரின் ஒப்புதல் பெற்றே வழங்கப்பட வேண்டும் என்றும் இம்முறை ஒப்புதல் பெறுவதில் ஏற்பட்ட தாமதமே இந்த நிலைக்கு காரணம் என்றும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். கொழும்பில் ஒப்புதல் பெற்று சில தரத்தைச் சார்ந்தோருக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. அவர்கள் நிலையில் எந்த ஸ்தம்பிதமும் இல்லை. ஆனால் மாகாண நிர்வாகத்துக்குள்ளேயே ஒப்புதல் பெறவேண்டிய விடயத்தில் ஸ்தம்பிதம் ஏற்பட்டுள்ளது. இவர்களுடைய அதிகாரத்தால் யாருக்கு என்ன லாபம் என்றும் அந்த ஊழியர் கவலையோடு கேட்டார்.

இது நிற்க, வடக்கு-கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு மாற்றலாகி வந்த பொறியியலாளர் ஒருவர் இருந்து கடமை புரிவதற்கு ஒரு கதிரை கூட வழங்கப் படாத நிலையில் வருவதும், புத்தகத்தில் கையெழுத்து இட்டு வீட்டுக்குச் சென்று விடுவதுமாக இருக்கிறார். முரசு நிருபர் இதுபற்றி அவரிடம் கேட்டபோது "நான் என்ன செய்வது? ஆணையாளரைக் கேளுங்கள். ஏன் என்னைப் பயன்படுத்தாமல் இருக்கிறார் என்று. மாற்றலாகி வந்து ஒருமாதமாகியும் எனக்கு கதிரை, மேசை கூட வழங்கப்படவில்லை. ஏன் இந்தமாதச் சம்பளமே எனக்கு இன்னும் வழங்கப் படவில்லை. இந்த லட்சணத்தில் தான் உள்ளூராட்சி நிருவாகம் நடக்கிறது" என்றார் கவலையோடு.

# ஆசிரியர்கள் நியமனத்தில் அரசியல் தலையீடு

## கிழக்கு அரசியல் வாதிகளின் பிடிவாதம்

தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் பற்றாக்குறை பற்றி பலரும் முறையிட்டதையிட்டு புதிய அரசு தமிழ் மொழி மூல ஆசிரியர்களை நியமிப்பதாக உறுதியளித்திருந்தது. உடனடியாக 1000 ஆசிரியர்களையும், மேலும் 4000 ஆசிரியர்களை வருட இறுதிக்குள் நியமிப்பதாகவும் உறுதியளித்திருந்தது.

கடந்த 31.12.94 அன்று புதிதாக ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கென தமிழ் மொழி மூல பயிற்சி ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. அதன் மூலம் தகுதி அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

மேற்படி பரீட்சை முடிவுகள் அறிவிக்கப் பட்டு நீண்ட நாட்களாகியும் வடக்கு-கிழக்கில் இந்நியமனங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. ஏனைய மாகாணங்களில் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டுவிட்டதாக அறிகின்றோம்.

அரசு உடனடியாக நியமிப்பதாகக் கூறிய 1000 ஆசிரியர்களில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 370 பேருக்கு வடக்கு-கிழக்கில் ஆசிரியர் நியமனம் வழங்குவது என முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். இதில் மாவட்ட ரீதியில் நியமனம் வழங்கப்படவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை விபரம் வருமாறு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 85 பேர் |
| கிளிநொச்சி | 30 |
| மட்டக்களப்பு | 70 |
| அம்பாறை | 40 |
| திருகோணமலை | 55 |
| வவுனியா | 30 |
| முல்லைத்தீவு | 30 |
| மன்னார் | 30 |

31.12.94 அன்று நடத்தப்பட்ட மேற்படி பரீட்சையின் முடிவுகள் இன்றுவரை வடபகுதிக்கு (யாழ்ப்பாணம்) அனுப்பிவைக்கப் படவில்லை. மேலும் ஏன் இந்நியமனங்கள் வழங்க தாமதம் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரித்த போது சில கிழக்கு அரசியல் வாதிகளின் தலையீடு எனச்சொல்லப்படுகிறது. சில அரசியல்வாதிகள் தமது சிபார்சுக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என முரண்டு பிடிப்பதால் நியமனங்கள் செய்ய காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லப் படுகின்றது.

எந்த புதிய நியமனங்களும் போட்டிப் பரீட்சைகள் மூலம் தகுதி அடிப்படையில் வழங்கப்படுவதே மக்களுக்கும், மாணவர்களுக்கும் நன்மை பயக்கும். அதிலும் ஆசிரியர் நியமனம் தகுதி உள்ளோர்க்கு கிடைத்தால் மட்டுமே அவர்கள் மாணவர்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும். அதைவிடுத்து அரசியல்வாதிகளின் சிபார்சின்பேரில் தகுதி அற்றவர்கள் ஆசிரியர் நியமனம் பெற்று வருவதால் மாணவர்களின் நிலமை பரிதாபமாக மாறிவிடும்.

ஆகவே, தமது சிபார்சுகளுக்காக, நல்ல விடயங்களில் தடையாக இருக்கும் அரசியல்வாதிகள் தமது பிடிவாதக்கரங்களை தளர்த்தி மக்களுக்கு பிரயோசனமான விடயங்களில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும்.

சிபார்சுகள் என்ற பெயரில் தமது உறவினர்களுக்கும் தனக்கு வேண்டியவர்களுக்கும் உதவி செய்வதை, உதவி செய்ய முற்படுவதை தவிர்க்க வேண்டும் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.


**ஜோதிடம்**

எத்தகைய தீராத பிரச்சனைகளுக்கும் தீர ஆலோசனைகள் வழங்கப்படும். சாதகத்து டன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

**விவாக சேவை**

உள்நாட்டிலோ வெளி நாட்டிலோ வசிக்கும் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த மணமக்கள் சாதகங்கள் கைவசமுண்டு-பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யலாம்.

V.S.S GURUKKAL
18,STATION ROAD,
WELLAWATTA COLOMBO-06.



**தபால் மூலம் கல்வி ஆங்கிலம் (English)**

வெளிவாரிபபட்டப்படிப்புகள் நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ள பின்வரும் தபால் மூல பாடநெறிகளைப் பயில விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆங்கில இலக்கணம் (English Grammar)**

ஆங்கில இலக்கணம் முழுவதும் 60 நாட்களில் தபால் மூலம் கற்பிக்கப்படுகின்றது. தமிழில் போதியளவு விளக்கம் தரப் படுகிறது. முழுக் கட்டணம் - ரூபா 350/-

**ஆங்கில கடிதம் எழுதுதல் (English Letter - Writing)**

சாதாரண குடும்ப கடிதங்கள் முதல் உத்தியோக பூர்வ கடிதங்கள் வரை இலக்கண முறைப்படி ஆங்கிலத்தில் எழுத தபால் மூலம் 60 நாட்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. தமிழில் போதியளவு விளக்கம் தரப்படுகிறது. முழுக்கட்டணம் ரூபா 350/-

**ஆங்கில பேச்சு பயிற்சி (English speaking Course)**

உங்களுக்கு தெரிந்த ஆங்கிலத்தில் இலக்கண முறைப் படி சுலபமாக எந்த இடத்திலும் உரையாடுவதற்கு 3 மாத காலத்தில் தபால் மூலம் பயிற்சியளிக்கப்படுகிறது. தமிழில் போதியளவு விளக்கம் தரப்படுகிறது. முழுக் கட்டணம் ரூபா 350/-

விபரங்களுக்கு : உங்கள் சொந்த முகவரி எழுதப்பட்ட, இரண்டு ரூபா முத்திரை ஒட்டப்பட்ட நீள கடிதவுறையை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். "கடிதவுறையின் இடது புறத்தில்" விண்ணப்பிக்கும் பாடநெறியைக் குறிப்பிடவும்.

விண்ணப்ப முடிவு திகதி: **1995. 09. 30**

EXTERNAL STUDIES ACADEMY
( Correspondence School )
P. O. Box : 660, COLOMBO



இலங்கைக் குடியரசின் தொழில் வாய்ப்பு கல்வி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது R/NO. W/A 3596

**DIPLOMA IN FINANCIAL TECHNIQUES**

FTB

**நிதித்துறையில் டிப்ளோமா பயிற்சிப் பாடநெறி**

**யாருக்கு?**

1. தொழில் தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு. பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு
2. சுய தொழில் பார்ப்பவர்களுக்கு அல்லது சுயதொழிலில் ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு.
3. தொழில் செய்து கொண்டிருப்பவர் எனினும் முன்னேற வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு தமிழ் மொழி மூலம் முதன் முறையாக இப்படியான ஒரு பாடத்திட்டத்தை வகுத்து இதுவரையில் 9 தொகுதியினர்களை வெற்றிகரமாகப் பயிற்றுவித்த, அனுபவமிக்க பட்டயக் கணக்கறிஞர்களால் ( CHARTERED ACCUNTANTS) இந்த 06 மாதகாலப்பயிற்சிப்பாடநெறி மீண்டும் 24.09.95 இல் ஆரம்பமாகின்றது. ஆகக் குறைந்த கல்வித் தகைமை G.C.E. O/L உயர்தர வகுப்பில் கற்போருக்கான உசாத்துணை பாடநெறி.

மாணவர் பதிவும் புலமைப்பரிசில் பரீட்சையும் 24.09.95 அன்று காலை 9.00 மணியளவில்
இடம்:- பிரின்ஸ் கல்லூரி (கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தையடுத்து)

**500 புலமைப் பரிசில்கள்** | **இலவச ஆங்கில பாடநெறி Business English**

பொது விவேகம், எளிய கணிதம் கொண்டமைந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு இலவசமாகவும், அரை கட்டணத்திலும் இப்பயிற்சி பாடநெறியினை பின்பற்றலாம்.

பின்வரும் தொழில்களைப் பெறவும் பதவி உயர்வு பெறவும் இப்பயிற்சி நெறி பெரிதும் உதவும் | **கற்பிக்கப்படும் பாடங்கள்**

| | | |
|---|---|---|
| Accounts Clerks | Tax Assistants | Accounts Executives |
| Bank Clerks | Wages Clerks | Accounts Assistants |
| Cost Clerks | Store Keepers | Audit Clerks |
| Stores Clerks | Book Keepers | General Clerks |

| | |
|---|---|
| நிதிக்கணக்கியல் | Financial Accounting |
| கணக்காய்வு | Auditing |
| வரி விதிப்பு | Taxation |
| கிரயக் கணக்கியல் | Cost Accounting |
| ஆங்கிலம் | Business English |

- ஞாயிறு தினங்களில் மட்டும் வகுப்புக்கள் நடைபெறுவதால், தூர இடங்களில் இருப்பவர்களும் இலகுவில் பங்குபற்றலாம்.
- பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வோருக்கு (பெறுமதியான) சான்றிதழ்.
- செயன்முறை பயிற்சியும் வழங்கப்படும்.
- தமிழ் மொழி மூலமான பூரண விளக்கம்.

இலவசமாக ETF., EPF., GRN, PRO, MRF, INVENTORY RECORD, LEDGER SHEETS, VOUCHERS, CASH MEMOS, CREDIT INVOICE போன்றவை வழங்கப்படும். இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவோர் இடையில் வேறு ஏதேனும் பரீட்சைக்குத் தோற்ற விரும்பினால் (உ+ம்) GOVERNMENT CLERICAL EXAM, GOVT., TEACHERS EXAM, BANKERS ENTRANCE EXAM etc. எவ்வித கட்டணமும் இன்றிப் பயிற்சி அளிக்கப்படும்.

**DIRECTOR OF STUDIES,**
**FINANCIAL TRAINING BASE**
S-71, 3rd Floor, (Central Super Market Complex)
Colombo - 11.

விபரங்களைக் கொண்ட கையேட்டினைப் பெற விரும்புவோர் தெளிவாக சுயமுகவரியை எழுதி ரூபா 12/- முத்திரையுடன் தொடர்பு கொள்ளவும். (நேரில் பெற விரும்புவோர் ஞாயிறு தினங்களில் மட்டும் பிரின்ஸ் கல்லூரிக்கு வருகை தரவும்)

* முக்கிய கவனிப்பு : இலங்கையில் எமக்கு வேறு எந்த இடத்திலும் கிளைகள் கிடையாது.




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்



தான் யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு தெரிந்தது என்று நம்பலாமா? அப்படி நம்பமுடியாது.

முல்லைத்தீவு நந்திக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவரை படையினர் சுட்டனர். அவர் படுகாயம் அடைந்தார். இன்னொரு மீனவரைக் காணவில்லை. இது நடந்தது வியாழக்கிழமை. அதாவது 1.09.95. இச் செய்தி வெளியே தெரியாது. ஆனால், மறுநாளே காலையில் புலிகளின் குரல் வானொலி அச் செய்தியை அறிவித்தது. காயமடைந்தவர் சதாசிவம் சிவராசா என்றும் 5 பிள்ளைகளின் தந்தை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர் என்றும் விலாவாரியான விபரங்களோடு செய்தி சொல்லப்பட்டது.

ஆக, முல்லைத்தீவிற்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையே புலிகளின் செய்தித் தொடர்பு தடங்கலின்றி நடந்து கொண்டே இருந்திருக்கிறது.

ஆனால், புலிகளோ சுப்பர் டோராப் படகுகள் தாக்கப்பட்டதை முதலில் தெரிவித்து இருந்து வருகிறது என்பதை தூரத்தில் இருந்தே கவனித்துவிட்டு, நீரடி நீச்சல் பிரிவினர் டோரா வரக்கூடிய பாதையில் கடற்கண்ணிகளை விதைத்துவிட்டு நீருக்கடியில் நழுவிச் சென்றிருக்கலாம்.

மூன்றாவது முறை, சற்று நவீனமானது. கடலில் அமிழ்ந்தும் மிதந்தும் செல்லக்கூடியவாறு வெடி பொருட்கள் கொண்ட ஒரு சிறு மிதவையைத் தயாரிக்க வேண்டும். ரிமோட் கொன்ட்றோல் மூலம் இது இயங்கும். தாக்க வேண்டிய இலக்குக்கு அருகில் சென்றவுடன் ரிமோட் கொன்ட்றோலை அமுக்கிவிடலாம். வெடித்துவிடும். இதனை 'டோபி டோப்' என்று அழைப்பார்கள். இலக்கு சரியாக தெரிந்தால் தான் ரிமோட் கொன்ட்ரோல் மூலம் மிதவையை சரியான குறிக்கு அனுப்ப முடியும். உதாரணமாக கப்பலை தகர்த்தது அல்லவா? கப்பலில் உள்ள படையினர் விழிப்பாக இருந்திருந்தால் ராடர்கள் மூலம் தாக்குதல் முயற்சியைக் கண்டுபிடித்திருக்கலாம்.

அன்று நடந்த விருந்துக் களியாட்டத்தில் கடற்படையினர் மூழ்கியிருந்தமையால் புலிகளுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாகிவிட்டது.

ஆனால், இப்போது கடற்புலிகளின் தந்திரம் அனைத்தையும் கடற்படையினர் அனுபவம் மூலமாக அறிந்துகொண்டுவிட்டனர்.

எனவே-பழைய தந்திரங்களை புலிகள் கையாள்வது கடினமாகும்.

16.07.95 அன்று புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் ஒரு கட்டமாக கடற்சமரில் ஈடுபட்டார்கள் புலிகள்.

அதில் ஒரு புது உத்தியை புலிகள் கையாண்டு பார்த்தனர். கடற்புலிகள் முதலில்

இதைவிட முக்கியமான ஒரு விஷயம்தான் புலிகளின் கூற்றுக்களை பலவீனமாக்கி விடுகிறது. யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் செல்லும் பயணிகளுக்கும் ஈ.பி.டி.பி.தான் ஒரு வருடகாலமாக பயணச்சீட்டுக்களை வழங்கிக் கொண்டிருந்தது. ஈ.பி.டி.பியிடம் பயணச்சீட்டு வாங்கிக்கொண்டு, புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள பருத்தித்துறைக்கு செல்லும் பயணிகளையும் கப்பலையும் புலிகள் தான் வரவேற்றுக்கொண்டிருந்தார்கள்.

எனவே, கப்பல் யாருடையது என்பதோ கப்பலுக்கு ஈ.பி.டி.பி. பயணச்சீட்டு வழங்குவதோ புலிகளுக்கு ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை.

தமது கட்டுப்பாட்டில் இல்லாத தீவுப் பகுதிக்கு கப்பல் போக்குவரத்து நடப்பதை

# சந்திரிக்கா அரசுக்கு இந்தியாவின் இரகசியச் செய்தி

முல்லைத்தீவு கடலில் வைத்து இரண்டு டோரா படகுகளை ஒரே நாளில் தாக்கி யழித்தார்கள் புலிகள்.

வழக்கமாக இவ்வாறான தாக்குதல் நடந்தவுடன் யாழ்ப்பாணத்தில் புலிகளின் பிரசார சாதனங்களில் அதுதான் தலைப்புச் செய்தியாக இருக்கும்.

ஆனால், இம்முறை வழக்கத்திற்கு மாறாக புலிகளின் பிரசாரம் அமைந்திருந்தது.

"டோரா படகுகள் இரண்டு கடற்புலிகளால் அழிக்கப்பட்டன" என்ற சுருக்கமான தகவலை மட்டும் புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

செவ்வாய்க்கிழமை-29.08.95 அன்று முல்லைக் கடலில் டோராப் படகுகள் தாக்கப்பட்டன. செவ்வாய்க்கிழமை இரவு புலிகளின் குரல் வானொலி தாக்குதல் குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

மறுநாள் புதன்கிழமை யாழ்ப்பாணப் பத்திரிகைகளிலும் விபரங்கள் வெளியிடப்படவில்லை. புதன்கிழமை காலையில் ஒளிபரப்பான புலிகளின் குரல் செய்தியிலும் எந்தத் தகவலுமில்லை.

புதன்கிழமை இரவு ஒளிபரப்பான புலிகளின் குரல் செய்தியில்தான் இரண்டு சுப்பர் டோராப் படகுகள் புலிகளால் மூழ்கடிப்பு. மேலதிக விபரங்கள் புலிகளை வந்தடையவில்லை என்று சொல்லப்பட்டது.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு உடனடியாக விபரங்களை அனுப்பும் வசதி புலிகளுக்கு இருக்கவில்லை என்று கூறுவது நம்புவதற்கு இயலாத விடயமாகும்.

அது மட்டுமல்ல, இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது தாக்குதல் நடந்து ஒருவாரமாகிறது. இதுவரை தாக்குதல் எப்படி நடந்தது என்ற விபரங்களை புலிகள் உத்தியோகபூர்வமாக வெளியிடவில்லை.

'ஐரிஸ் மோனா' என்னும் பயணிகள் கப்பல் விடயத்திலும் வியாழக்கிழமைவரை புலிகள் மௌனம் சாதித்தார்கள். அதிலும் தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்பதை தெரிவிக்கவில்லை. டோராப் படகுகள் தாக்கப்பட்ட செய்தி அறிவிக்கப்பட்ட பின்னர் இரண்டு நாட்கள் தள்ளியே ஐரிஸ் மோனாக் கப்பல் தம்மிடம் உள்ளதாக ஒப்புக்கொண்டார்கள்.

அதாவது டோராப் படகுகள் தாக்கப்பட்டதையும், ஐரிஸ் மோனாக் கப்பல் கடத்தப்பட்டதையும் ஒன்றோடு ஒன்று தொடர்பற்ற இரு வேறு சம்பவங்கள் போல காட்டுவதே புலிகளது நோக்கம்.

புலிகள் நினைத்ததைப் போலவே சில செய்தி நிறுவனங்களும் குழம்பிவிட்டன.

ஒரு டோராப் படகுக்கு இரண்டு கடற்கரும் புலிகள் என்ற விகிதத்தில் கணக்குப் பார்த்து நான்கு கடற்கரும்புலிகள் பலி என்றெல்லாம் செய்திகள் வெளியாகியிருந்தன.

**நாரதர்**

ஆனால், உண்மையில் நடந்தது என்ன? 28.09.95 அன்று ஐரிஸ் மோனா பயணிகள் கப்பலை கடற்புலிகள் வழிமறித்தார்கள்.

ஐரிஸ் மோனா கப்பலுக்கு பாதுகாப்பு வழங்குவது கடற்படையினரின் பொறுப்பு. கப்பலுக்குள் கடற்படையினர் இருக்க மாட்டார்கள்.

கப்பலில் இருந்து கடற்படையினருடன் தொலைத் தொடர்பு கருவி மூலம் தொடர்பு கொள்ள முடியும். உதவி தேவை என்று அறிவித்தால், கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கடற்படை படகுகள் உதவிக்கு வரும்.

முல்லைத்தீவு கடலில் வைத்து புலிகளை கட்டுப்படுத்தும் கப்பல் கொண்டுவரப்பட்டது. அதனையடுத்தே நாடகம் ஆரம்பமானது.

கப்பலைக் கரைக்கு கொண்டு சென்று பயணிகளை இறக்கிவிட்டு, கப்பல் கப்ரனோடும், சிப்பந்திகளோடும் மீண்டும் நடுக்கடலுக்கு

ஐரிஸ் மோனா கப்பலின் மேல் தளத்தில் இருந்து ரிமோட் கொன்ட்ரோல் மூலம் இயக்குவது வசதியாக இருந்திருக்கும். (சிறு விளையாட்டுக் கார்களை ரிமோட் கொன்ட்ரோல் மூலம் இயக்குவது போன்ற தொழில் நுட்ப அடிப் படையை 'டோபி டோப்' ஒத்திருக்கும்.)

கடற்பரப்பில் தாக்குதலை நடத்துவதற்கு பயணிகள் கப்பலை ஏன் புலிகள் கடத்த வேண்டும்?

அதற்கும் காரணம் இருக்கிறது. கடற்தாக்குதல் நடத்த மூன்று வகையான முறைகளை புலிகள் கையாளுகின்றனர்.

ஒன்று கடற்கண்ணித் தாக்குதல், இரண்டாவது கடற்கரும்புலிகள் வெடிமருந்து நிரப்பிய படகுகளில் சென்று நடத்தும் தற்கொலைத் தாக்குதல். மூன்று, நீராடி நீச்சல் மூலமாக கடற்கரும்புலிகள் தமது உடலில் வெடிமருந்துகளை தாங்கிச் சென்று நடத்தும் தற்கொலைத் தாக்குதல்.

இந்த மூன்று தாக்குதல் முறைகளையும் கடற்படையினர் விழிப்பாக இருந்தால் தடுத்துவிடலாம்.

கடற்கரும்புலிப் படகுகள் தமது படகுகளை அல்லது கப்பலை நெருங்க முன்னரே கடற்படையினர் தாக்கியழித்து விடலாம்.

கடற்கண்ணிகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகித்தால் அவற்றை கண்டறியும்

ஐரிஸ் மோனா



ஒரு மோதலை ஆரம்பித்து கடற்படையினரோடு சண்டை நடத்திக்கொண்டிருப்பார்கள். அந்த நேரத்தில் கடற்படையினரது வியூகம் பலவீனமாக உள்ள ஒரு முனையை ஊடறுத்து கடற்கரும் புலிகளின் படகுகள் பாயும். பாய்ந்து மோதும்.

அப்படித்தான் எடித்தாரா கட்டளைக் கப்பல் தாக்கப்பட்டது. மற்றொரு படகையும் அவ்வாறு தாக்க முற்பட்ட கரும்புலிப் படகு கடற்படையினரால் அழிக்கப்பட்டது. அதிலிருந்த கரும்புலிகள் இருவரில் ஒருவர் தப்பிக் கொண்டார்.

ஆனால், அந்த உத்தி பெரிய வெற்றி அளிக்கவில்லை. ஒரு எடித்தாரா கப்பலுக்காக தமது தரப்பில் இரண்டு லெப்டினட் கேணல்கள் உட்பட 16 பேரை புலிகள் விலையாகக் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

நீரடி நீச்சல் மூலமோ, நேரடியாக கரும்புலிப் படகுத் தாக்குதல் மூலமாகவோ காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்துநின்ற கடற்படையை நெருங்க முடியாது என்பதால்தான் கடற்சமர் உத்தியைப் புலிகள் கையாண்டனர்.

யாழ் குடாநாட்டுக்கு கடற்படைக் கப்பல்கள் மூலமாக ஆயுதங்களும், படையினரும் கொண்டு சென்று குவிக்கப்படுவதை புலிகளால் தடுக்க முடியாமல் இருக்கிறது. தடுக்க வேண்டுமானால் மாபொரும் கடல்சமர் நடத்த வேண்டும். கடற்படையினரிடம் உள்ள நவீன போர்க் கப்பல்களை, அவர்கள் தயாராக உள்ள போது தடுத்துநிறுத்தி மோதுவது என்பது சாத்தியமல்ல.

எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத தந்திரங்கள் மூலமாகவே கடற்போரிலும் புலிகளது வெற்றி தங்கியுள்ளது.

அதன் ஒரு கட்டம்தான், பயணிகள் கப்பலை வைத்து புலிகள் மேற்கொண்ட புதிய தந்திரமாகும்.

ஆனால், இதனைப் புலிகள் வெளியே சொல்ல முடியாது. பயணிகள் கப்பலை வைத்து தாக்குதல் நடத்தும் தந்திரம் போர் விதிகளுக்கு முரண்பட்டதாகும். அவ்வாறு தாக்குதல் நடத்திவிட்டு, நாளை அரச படையினர் போர் விதிகளை மீறும்போது புலிகள்



தடுக்கப் புலிகள் நினைத்திருந்தால் கூட கப்பலை கடத்தும் தேவை இருந்திருக்காது. ஒரு எச்சரிக்கை விட்டிருந்தாலே போதும். கப்பலைப் செலுத்த எந்தவொரு மாலுமியும் முன்வந்திருக்க மாட்டார். பயணிகளும் செல்ல மாட்டார்கள்.

அதுதவிர, அரசு அனுப்பும் உணவுக் கப்பலுக்கு பாதுகாப்பு கொடுக்க முன்வரும் புலிகள், அரசு அனுப்பும் பயணிகள் கப்பலை மட்டும் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்ல நினைத்தால் முரண்பாடான கூற்றாகிவிடும். எனவே தான் கப்பல் கடத்தல் குறித்தும் இதுவரை உத்தியோகபூர்வமாக எதுவும் கூறாமல், ஊகங்களுக்கு விட்டிருக்கிறார்கள் புலிகள்.

மக்களே புலிகள், புலிகளே மக்கள் என்று புலிகள் அடிக்கடி கூறுவது வழக்கம். தீவுப்பகுதியில் உள்ள மக்களும் தமிழ் மக்கள்தான். அவர்களை பணயமாக்கியது மூலம் புலிகளின் வழக்கமான கூற்றுப்படி தங்களைத் தாங்களே கடத்தி விட்டார்கள் புலிகள். அதனை உறுதிசெய்வது போலவோ என்னவோ அரசும் பயணிகள் விவகாரம் குறித்து அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

□□

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்கள் மீதான அனுதாப அலை மறுபடியும் எழத் தொடங்கியிருப்பது இந்திய மத்திய அரசுக்கு கவலையளித்துள்ளது.

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் இலங்கை அரசுக்கு ஆதரவளித்து வருகிறது இந்திய அரசு.

# கடத்தல் நாடகம்- கடற்புலிகளின் புதிய தந்திரம்

புதன்கிழமை இரவு புலிகளின் குரல் வானொலி ஐரிஸ் மோனா பற்றி தெரிவித்த செய்திதான் வேடிக்கையானது.

"திருமலையிலிருந்து காரைநகர் நோக்கி வந்துகொண்டிருந்த ஈ.பி.டி.பியின் பயன்பாட்டில் உள்ள கப்பல் ஒன்று காணாமல் போயுள்ளது. இக்கப்பலை மீட்க சிறீலங்கா கடற்படை முயற்சிப்பதாகக் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன" என்று அறிவித்தது புலிகளின் குரல் வானொலி.

வியாழக்கிழமை இரவுச் செய்தியில், "ஐரிஸ் மோனா கப்பலைக் கண்டுபிடித்துத் தருமாறு சிறீலங்கா அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது" என்று கூறியது புலிகளின் குரல் வானொலி.

இறுதியாக 2.9.95 அன்று சனிக்கிழமை காலையில் தான் "ஐரிஸ் மோனா கப்பல் தற்போது புலிகளின் பராமரிப்பில் இருக்கிறது. கப்பலின் பயணிகள் விரும்பினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர்" என்று புலிகளின் குரல் வானொலியில் தெரிவிக்கப்பட்டது.

பயணிகள் கப்பல் தமது பராமரிப்பில் உள்ள விஷயமே நான்கு நாட்களின் பின்னர் கப்பலைக் கொண்டுவந்தனர் புலிகள்.

கப்பல் கப்ரன் மூலமாக, அல்லது புலிகளே கப்ரன் பேசுவது போல கடற்படை ரோந்துப் படகோடு தொடர்பு கொண்டுள்ளனர்.

கப்பலில் இயந்திரக் கோளாறு உதவி தேவை என்று கடற்படைப்படகுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

தமக்கு வலைவிரிக்கப்பட்டிருக்கும் விஷயம் தெரியாமல், டோரா ரோந்துப் படகு கப்பலை நோக்கி விரைந்திருக்கிறது.

புலிகளின் வலைக்குள் சென்ற டோரா தாக்குதலில் சிக்கியது.

முதலாவது டோராவைத் தேடிப் புறப்பட்டது இன்னொரு டோரா.

தேடுதலின் போது நடுக்கடலில் ஐரிஸ் மோனா கப்பலைக் கண்டிருக்கிறது. கப்பலின் மேல் தளத்தில் பயணிகள் போல நின்றுகொண்டு உதவி கேட்டு சைகை காட்டியிருக்கிறார்கள் புலிகள்.

கப்பலை நோக்கிச் சென்ற இரண்டாவது டோராவும் புலிகளின் வலையில் மாட்டிக் கொண்டது.

புலிகள் தமது வலையை மூன்று விதமாக விரித்திருக்கலாம். கப்பலைச் சுற்றியுள்ள பாதையில் முன்கூட்டியே கடற்கண்ணிகளை வைத்துவிட்டுப் புலிகள் காத்திருந்திருக்கலாம்.

அல்லது, டோரா படகு எந்தத் திசையில் கருவிகள் இருக்கின்றன. நீருக்கடியில் நீந்திச் சென்றாலும் ராடர்கள் கண்டுபிடித்துச் சொல்லி விடும்.

இவ்வளவு வசதியிருந்தும் விழிப்பின்மை, மற்றும் சில பலவீனங்கள் காரணமாக கடற்படையினரை புலிகள் தமது வலைக்குள் வீழ்த்தியிருக்கிறார்கள்.

மீனவர்களிடம் மீன் வாங்குவதற்காக அவர்களது படகுகளை நெருங்கும் கடற்படையினரை மீனவர்கள் போலவே காத்திருந்து கரும்புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

சாகரவர்த்தனா கப்பல் தாக்கப்பட்டபோதும், கடலில் நடக்கும் இரகசிய எரிபொருள் வியாபாரம் ஒன்று புலிகளின் வலைவிரிப்புக்கு காரணமாக இருந்தது.

சாகரவர்த்தனா கப்பலில் இருந்து கடலில் வைத்து யாழ் குடாநாட்டு மீனவர்களுடன் எரிபொருள் வியாபாரம் நடப்பதுண்டு. இது மேலதிகாரிகளுக்கு தெரியாது. கப்பல் தாக்கப்பட்ட தினத்தன்று கரும்புலிப் படகு கடலில் நின்றது. தமது வாடிக்கையாளர்கள் தான் காத்திருக்கிறார்கள் என்று நினைத்து சாகரவர்த்தனா கப்பல் கரும்புலிப் படகை நெருங்கியபோது கரும்புலிப் படகுவந்து மோதியது.

திருமலையில் கடற்படைத் தளத்தில் வைத்து இந்த ஆண்டு நீரடி நீச்சல் பிரிவு கடற்படைக் குற்றம்சாட்ட முடியாமல் போய்விடும்.

அதனால்தான் தாக்குதல் விபரங்களை புலிகள் கூறவில்லை. தாக்குதல் விபரங்களை தெரிவித்தால், பயணிகள் கப்பலை வைத்தே வலை விரிக்கப்பட்டது என்பது உடனடியாகத் தெரிந்துவிடும்.

இதனால்தான் கப்பல் கடத்தலையும், டோரா தாக்குதலையும் இருவேறு சம்பவங்கள் போல சித்தரிக்கப் புலிகள் முற்படுகிறார்கள்.

ஆனால், ஐரிஸ் மோனா கப்பல் கடத்தல் தொடர்பாக புலிகள் கூறமுயலும் காரணங்கள் பலவீனமானவையாகவே உள்ளன.

கப்பல் ஈ.பி.டி.பி. அமைப்பின் பாவனையில் இருந்தது என்று புலிகள் கூறியிருந்தனர். உண்மையில், இலங்கை கப்பல் கூட்டுத் தாபனத்தால் வாடகைக்கு பெறப்பட்ட கப்பலே அதுவாகும்.

கப்பல் பயணிகளுக்கான பயணச்சீட்டுக்களை வழங்குவதை மட்டுமே ஈ.பி.டி.பி. செய்து வந்தது. முன்னர் நரோமா கப்பல் சேவையில் இருந்தது. தற்போது 'ஐரிஸ் மோனா' கப்பல் சேவைக்கு விடப்பட்டது.

கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக ஈ.பி.டி.பி. பயணச்சீட்டுக்களை வழங்கிவருகிறது. அதற்காக அறவிடப்படும் பணம் புனர்வாழ்வு அமைச்சுக்குச் செல்கிறது.

முன்னேறிப்பாய்ச்சல் நடவடிக்கையின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்து இந்தியா மூச்சேவிடவில்லை. ஆனால், தமிழகத்தில் அனுதாப அலை எழுந்துவிட்டது.

எனவே இந்திய அரசிடம் இருந்து இலங்கை அரசுக்கு ஒரு முக்கிய செய்தி இரகசியமாக அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்தச் செய்தி அனுப்பப்பட்டதாக தகவல் ஒன்று கூறுகிறது.

**"புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் இந்தியா இடையூறாக இருக்காது. ஆனால், பொது மக்களின் உயிரிழப்புக்கள் அதிகமாக இருந்தால் தமிழ் நாட்டில் அதன் எதிரொலி கேட்கும். தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவான நிலை ஏற்படுவது இந்தியாவின் பாதுகாப்புக்கும் பாதகமான விசயம். எனவே, பொதுமக்களது உயிரிழப்புக்களை முடிந்தளவு தவிர்ப்பது நல்லது"** என்று இந்தியா தெரிவித்திருக்கிறதாம்.

அடுத்த வருடம் இந்தியப் பொதுத் தேர்தலும் நடைபெறவுள்ளதால், தமிழக மக்களின் உணர்வுகள் குறித்து இந்திய மத்திய அரசு கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது. அதுவும் இந்தியாவின் இரகசியச் செய்திக்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது.

## அதிரடி அய்யாத்துரை



திருவானமலையில் தினமும் ஒரு பிரச்சனை. முகாம்கள் மூடப்பட்டாலும் பிரச்சனை. முகாம்கள் தாக்கப்பட்டாலும் பிரச்சனை. மூடப்பட்டால் என்ன, தாக்கப்பட்டால் என்ன, சனம் மூட்டை முடிச்சோடை வெளியேறிக் கொண்டிருக்குதுகள். தொண்டர் ஸ்தாபனங்கள் எண்டு சொல்லி வெளிநாட்டுலை உதவிவாங்கிக் கொண்டு இருக்கிற நிறுவனங்கள் அகதிகளுக்கு உதவிற விடயத்திலை கைவிரிக்கினமாம். தங்கமான வெகுஜன பிரதிநிதி தலைநகரிலேயே மாதத்திலை 25 நாள் தங்கியிருக்கிறாராம். ஆக வேண்டியதை பார்த்துக்கொள்ளுறாராக்கும்!

கிழக்கின் தனித்துவ கட்சிக்குள் ஒருசிலர் தனித்துவமாக விடும் அறிக்கைகள் கட்சியின் கருத்துக்கள் அல்ல என்று சொல்லிவருகிறாராம் தலைவர். மலையகத் தனித்துவ தலைவரின் பேட்டி ஒன்று குறித்து அவசரப்பட்டு அறிக்கை விட்டவரின் கதையும் அப்படித்தானாம்.

மலையுள்ள பகுதியின் தனித்துவக் கட்சியின் தலைநகர அலுவலக திறப்பு விழாவில் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த கட்சிப் பிரதிநிதிகளை உரையாற்ற வாய்ப்புக் கொடுக்க மறந்து போச்சினமாம். ஜனநாயகக் கட்சித் தலைவர் அதனைச் சுட்டிக்காட்டியபிறகு தவறுக்கு வருத்தப்பட்டு, வாய்ப்புக் கொடுக்கப்பட்டதாம். மறந்தது ஏனோ?

தலைநகரில் கடப்பட்ட கலைஞர் கனடா போய் நாடகங்கள் நடத்திப்போட்டு திரும்பிவந்திருந்தவரல்லோ, ரெண்டு எழுத்தாருக்கு போட்டியாக கனடாவில் நிகழ்ச்சிகள் நடத்திற கலைக்குழுவினர்தான் அவரை அழைத்து நாடகம் நடத்தினவையாம். வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்புற விவகாரத்திலும் அவருக்குச் சம்பந்தம் இருந்ததாகவும் ஒரு தகவல்.

அதிகாரமுள்ள முன்னணிக்குள் முக்கிய அதிகாரமுள்ள ஆட்களை அவசரத்துக்கு தொடர்புகொள்ள முடியேல்லை எண்டு முன்னணிக்குள்ளேயே முணுமுணுப்புக் கேட்குது பாருங்கோ. கடத்தப்பட்ட கப்பல் விடயமாக ஆக வேண்டியதைச் செய்ய சர்வதேச தொண்டர் நிறுவனம் மேல் மட்டத்தோடு தொடர்புகொள்ள படாதபாடுபட வேண்டியிருந்ததாம். வார இறுதி நாள் எண்டால் பொறுப்புள்ளவையைப் பிடிக்க வலைவீசித் தேடவேண்டியிருக்குதாம்.

தலைநகரில் இருந்து இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வெளிவரும் தமிழ் பத்திரிகை அது. அதன் ஆசிரியரும், சகாக்களும் மதுபான விடுதி ஒன்றில் உற்சாக பான மயக்கத்திலை ஓவராய் நடந்து போட்டினமாம். விடுதி உரிமையாளர்கள் தர்ம அடி கொடுத்துப் போட்டினமாம். கவிஞருக்கு அடி கொஞ்சம் பலமாம். 'சரிநிகர்' சமானமாக அடிக்காமல் கூட்டிக் குறைச்சு அடி விழுந்து போச்சு. குடிக்கிறது பிழையில்லை; கூத்தடிக்கிறது பிழைதானே? உபதேசம் செய்யிறவைக்கு சொல்லியோ தெரியவேணும்....!

வன்னியில் ரெண்டு எழுத்தாரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பள்ளிக்கூடப் பிரசாரங்கள் கலாதியா நடந்துகொண்டிருக்கிறதாம். பள்ளிக்கூடம் ஆரம்பித்த கையோடை உள்ளே பிரவேசித்த ரெண்டு எழுத்தார் ஆசிரியர்களை வகுப்பறைக்கு வெளியே செல்லுமாறு கூறிவிட்டு, வகுப்பு நடத்தினவையாம். முதல் சுற்றிலேயே நல்ல பலன் கிடைச்சிருக்காம். வாத்திமார் வகுப்பெடுக்கிறது பரீட்சைக்கு. ரெண்டு எழுத்தார் வகுப்பு எடுக்கிறது பயிற்சிக்கு.

கப்பல் கடத்தல் விவகாரத்திலை ரெண்டு எழுத்தார் சொல்லாத விஷயங்களையெல்லாம் தேசிய வானொலியும், தொலைக்காட்சியும் விழுந்தடிச்சு சொல்லிக் கொண்டிருந்தன. பயணிகள் விடுதலை பற்றி பேச்சு நடத்து முடியுமுன்னரே பயணிகள் விடுதலையாகீட்டினம் எண்டு செய்திகள். அதெல்லாம் கிடக்க, கப்பல் குளோஸ் எண்டு செய்தி சொல்லி, பயணிகளின் குடும்பங்களின் வயிற்றிலை நெருப்பள்ளிப் போட்டவைக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குதாம்?

வெளிநாடுகளிலை, குறிப்பாக கனடாவிலை துவக்கு வாங்குறது சுலபம் காதிலை தோடு, கையிலை துவக்கென்று அலையிற பள்ளிக்கூட மாணவர்களுக்குள் நம்நாட்டு மாணவர் கோஷ்டியும் இருக்குதாம். இதுவும் டேக் இட் ஈஸி பொலிசிதானோ?

'தேடல்' என்னும் கனடா சஞ்சிகையில் மனதைக் கௌவிய ஒரு கவிதையில் இருந்து சில வரிகள். எழுதியது, மைக்கேல் கொலின்.

*ஆயுதங்கள்*
*மனிதனைவிட போற்றப்படுகையில்*
*ஆட்களின் அடையாளங்கள்*
*அறியாமல்*
*துப்பாக்கிகள் வெடிக்கையில்*
*நண்பா!*
*நீயும் என்ன, நானும் என்ன,*
*நீதியும் சேர்ந்தே மௌனிப்போம்.*
*சிலவேளை மரணிப்போம்!*


படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# 43

# பொட்டம்மானைக் கடத்திச் சென்ற புளொட்

## கூட்டணித் தலைவர் வீட்டில் புலி உறுப்பினருக்கு அடி

## அரசியல் தொடர்

### இந்தியா மறுப்பு

சென்னை மீனம்பாக்கம் விமான நிலைய குண்டுவெடிப்பு இந்திய மத்திய அரசை தர்மசங்கடத்தில் மாட்டிவிட்டது.

ஈழப் போராளிகளின் பயிற்சி முகாம்கள் எதுவும் தமிழ்நாட்டில் இல்லை யென்று இந்திய அரசு மறுத்து வந்தது.

'இந்திய ருடே' சஞ்சிகையில் தமிழ் நாட்டில் இருந்த ஈழப்போராளிகளின் பயிற்சி முகாம்கள் பற்றிய புகைப்படம் வெளியாகிய பின்பும், இந்தியா தொடர்ந்து மறுப்புத் தெரிவித்தே வந்தது.

அப்போது இலங்கைப் பிரதமராக இருந்தவர் பிரேமதாசா. 'இந்திய ருடே' சஞ்சிகையில் புகைப்படங்கள் வெளியானதையடுத்து பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றினார்.

"இந்தியாவில் பயிற்சி முகாம்கள் இயங்குகின்றன. பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் பிரதமராக இதனைக் கூறுகிறேன். இது தொடர்பாக இந்திய அரசு பொறுப்புடன் கவனிக்க வேண்டும். இந்தியா எங்களை அற்பத்தனமாக நினைக்கக் கூடாது. எமக்கும் சுய கௌரவம் இருக்கிறது. எந்தச் சவாலையும் சந்திக்க நாம் தயார்."

என்று பேசினார் பிரேமதாசா. அப்போது குறுக்கிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பா.உ. லக்ஷ்மன் ஜெயக்கொடி ஒரு கேள்வி தொடுத்தார்.

"பிரிவினைவாதிகளுக்கு பயிற்சியளிப்பதாக வந்துள்ள செய்திகள் தவறானவை என்று இந்தியத் தூதர் மறுத்துள்ளாரே?" என்று அவர் கேட்டார்.

பிரதமர் பிரேமதாசாவுக்கு கோபம் வந்துவிட்டது.

"நீங்கள் என்னை நம்புகிறீர்களா? இந்தியத் தூதரை நம்புகிறீர்களா?" என்று காரசாரமாகக் கேட்டார்.

### அநுராவின் பேச்சு

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் திரு.அநுரா பண்டாரநாயக்கா. பிரதமர் பிரேமதாசாவின் பேச்சுக்கு பதிலளிப்பதுபோல, அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். அவர் சொன்னது இது:

"இந்தியாவில் தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிக்கப்படுவது தொடர்பான தகவலில் உண்மை இல்லை என்று இந்தியத் தூதர் திரு.எஸ்.ஜே.சத்வால் என்னிடம் கூறினார். இந்திய அரசு சார்பிலான அவரது கூற்றினை நாம் ஏற்கவேண்டும்.

திரு.சத்வால் திறமைமிக்க ஒரு தூதுவர். இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியினதும், இந்திய அரசின் சார்பிலும் அவர் பதிலளித்துள்ளார். இதனை நாம் மறுக்க முடியாது. அணி சேரா இயக்கத்தின் தலைவியான திருமதி இந்திரா காந்தியின் உறுதிமொழியை நாம் சந்தேகிக்கக்கூடாது." என்றார் அநுரா பண்டாரநாயக்கா.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவரே வடக்கு-கிழக்குப் பிரச்சனையின் வளர்ச்சி, அதன் விரிவுகள், தொடர்புகள் குறித்து சரியான தகவல்கள் இல்லாமல் எந்தளவுக்கு அப்பாவித்தனமாக பேசியிருக்கிறார் என்று தெரிகிறதல்லவா.

தற்போதும் பெரும்பான்மை இனக் கட்சித் தலைவர்கள் பலர் இப்படித்தான் இருக்கிறார்கள். அதுதான் இனப் பிரச்சனையின் வடிவத்தை அவர்களால் சரிவரப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இலங்கையில்கூட இந்தியாவின் மறுப்பை ஒரு சாரார் நம்பிக்கொண்டிருந்தனர். இந்த நிலையில் மீனம்பாக்கம் குண்டுவெடிப்புக்கு ஈழப்போராளிகளே காரணம் என்று வெளியே தெரிந்தால் தமது மறுப்பு பொய்யாகிவிடும் என்று இந்திய மத்திய அரசு நினைத்தது.

விமானத்தில் குண்டை ஏற்றி, கொழும்பு விமான நிலையத்தில் வெடிக்க வைப்பதே தமிழீழ இராணுவத்தின் நோக்கம் என்பதையும் இந்திய அரசு தெளிவாக அறிந்து கொண்டது.



பொட்டு அம்மான்

தமிழீழ இராணுவத்தின் இந்த நோக்கம் வெளியானாலும் அதனால் ஒரு பிரச்சனை இந்தியாவுக்கு ஏற்படலாம்.

இலங்கையில் வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு தளமாக பாவிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துவிடும்.

எனவே-குண்டுவெடிப்புக்கு ஈழப் போராளி அமைப்பு ஒன்றுதான் காரணம் என்ற உண்மையை அப்படியே அமுக்கி விடவே இந்திய மத்திய அரசு தீர்மானித்தது.

ஆனால், இதற்கிடையே தமிழக பொலிஸ் தீவிரமாகச் செயற்பட்டு தமிழ்ஈழ இராணுவத்தின் உறுப்பினர்கள் சிலரைக் கைது செய்தது.

அவர்கள் கொடுத்த தகவலை வைத்து குண்டு தயாரிக்கப்பட்ட இடமும் கண்டு பிடிக்கப்பட்டது.



எம்.ஜி.ஆர்

### எம்.ஜி.ஆரின் குழப்பம்.

இந்த நேரத்தில்தான் இந்திய மத்திய அரசு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரோடு தொடர்புகொண்டது. விசாரணைகளை தீவிரப்படுத்துவதையும், அது பற்றிய செய்திகள் உள்ளூர் பத்திரிகைகளில் வெளியாவதையும் மத்திய அரசு விரும்பவில்லை என்று எம்.ஜி.ஆருக்கு சூசகமாகச் சொல்லப்பட்டது.

எம்.ஜி.ஆர். குழம்பிப் போனார். தமிழக இரகசியப் பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த மோகனதாசை அழைத்தார் எம்.ஜி.ஆர்.

அழைத்து என்ன சொன்னார் எம்.ஜி.ஆர்? அதனை மோகனதாஸ் தனது எம்.ஜி.ஆர் நிழலும், நிஜமும் என்ற நூலில் கூறுகிறார். அது இதுதான்;

"அவர் ஒரு குழப்பத்தில் இருந்தார். வெடிகுண்டு சம்பவத்தில் 'மொஸாத்' தொடர்பு இருக்கிறதா என்பது பற்றி மீண்டும், மீண்டும் கேட்டார்.

அதை நாம் ஏற்றுக்கொண்டால் உலக உளவுத்துறையினர் நம்மைக் கண்டு சிரிப்பார்கள் என்றேன். இதுவரை செய்யப்பட்ட குற்றப்புலனாய்வில் எம்.ஜி. ஆருக்கு திருப்தி இல்லையென்றால், என்னை உளவுத்துறைப் பதவியில் இருந்து அவர் விடுவித்துவிடலாம் என்றேன்.

ஒரு நிமிடம் யோசித்தார். பிறகு புன்முறுவல் பூத்தபடியே, "புது டெல்லி அவர்கள் விரும்பியபடியே செய்து கொள்ளட்டும்; நீங்கள் உங்கள் விசாரணையைத் தொடருங்கள் என்றார் எம்.ஜி.ஆர்." என்று மோகனதாஸ் தனது நூலில் குறிப்பிடுகிறார்.

ஆனாலும், குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகள் அடக்கமாகவே பின்னர் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

### தடையில்லை

தமிழ் ஈழ இராணுவத் தலைவர் தம்பாபிள்ளை மகேஸ்வரன் தலைமறைவாக இருந்தார். ஆயினும் தமிழ் ஈழ இராணுவம் தொடர்ந்தும் தமிழ் நாட்டில் இயங்குவதற்கு எவ்வித தடையும் இருக்கவில்லை.

விக்னேஸ்வரராஜா (இலங்கையில் சுங்க இலாகா அதிகாரியாக இருந்தவர்) சந்திரகுமார் (தமிழ்நாடு பொலிஸ் கான்ஸ்டபிள்) மற்றும் ஏர்லங்காவில் பணியாற்றிய இந்தியாவைச் சேர்ந்த இரு தமிழர்கள் ஆகியோர் உடனடியாகக் கைதுசெய்யப் பட்டனர்.

'த வீக்' என்னும் இந்திய ஆங்கில சஞ்சிகை பின்வருமாறு எழுதியிருந்தது:

"தமிழ் நாட்டு குற்றப்புலனாய்வுத்துறை பாராட்டப்படும் விதத்தில் செயற்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச் சம்பவம் முழுமைக்கும் அரசியல் - சாயம் பூச அரசியல்வாதிகள் களத்தில் இறங்கியிருக்கிறார்கள். காவல்துறையின் கண்டுபிடிப்புகள் அடுத்து பல கேள்விகள் எழுப்பப் பட்டுள்ளன.

தமிழ் நாட்டிலிருந்து செயற்படும் ஈழப் போராளிகள் குழுக்களுக்கு அரசு ஏன் ஆதரவு தரவேண்டும் என்று சிலர் கேட்கிறார்கள். நம் பகுதியில் அவர்களால் ஏன் சட்டம், ஒழுங்கு நிலைமை கெட்டுப்போக வேண்டும் என்றும் பிரச்சனை கேட்கிறார்கள்."

ஆனாலும் இத்தகைய கேள்விகள் எல்லாம் தமிழ் நாட்டின் சாதாரண மக்களின் செல்ல முடியவில்லை.

ஈழப் போராளிகளுக்கு தமிழக மக்கள் வழங்கும் ஆதரவு துளியும் குறைவின்றித் தொடர்ந்து செய்தது.

### கலைஞரின் ரெசோ

இக்காலகட்டத்தில் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கினார். 'ரெசோ' என்று அது சுருக்கமாக அழைக்கப்பட்டது.

"இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்படவேண்டும்" என்று கருணாநிதி குரல் கொடுக்கத் தொடங்கினார்.

முக்கியமான மூன்று கோரிக்கைகள் கலைஞர் கருணாநிதியால் முன்வைக்கப் பட்டன.

01. இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட வேண்டும்.

02. இலங்கையுடன் இந்தியா தனது இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ள வேண்டும்.

03. தனித் தமிழ் ஈழம் உருவாக மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும்.

கோரிக்கைகளை வலியுறுத்த போராட்டமும் நடத்தினார் கலைஞர்.

கைது செய்யுமாறு கட்டளையிட்டார் எம்.ஜி.ஆர். எட்டாயிரம் தொண்டர்களோடு சிறைபுகுந்தார் கலைஞர்.

"உலகத் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞரை விடுதலை செய்" என்று குரல் எழுப்பினார்கள் தி.மு.க. தொண்டர்கள்.

இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தால் எம்.ஜி.ஆர். அரசு ஏன் கைது செய்ய வேண்டும்?

ஆகவே, எம்.ஜி.ஆருக்கு தமிழ்ப் பற்று கிடையாது என்று தி.மு.க சொல்லிக்கொள்ள அதுவும் ஒரு வாய்ப்பானது.

தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு (ரெசோ) மூலமாக கலைஞர் கருணாநிதி 'ரெலோ' இயக்கத்திற்கு மட்டுமே முக்கியத்துவமளிக்க முற்பட்டார்.

இதனால் ஏனைய போராளி அமைப்புக்கள் 'ரெசோ', 'ரெலோ'வை வளர்க்கும் அமைப்பு என்று கூறி அதனிடமிருந்து விலகியே இருந்து கொண்டனர்.

### ரெசோவுக்குள் முரண்பாடு

கலைஞர் கருணாநிதியோடு திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி, நெடுமாறன் ஆகியோரும் இலங்கைத் தமிழர் பிரச்னையில் இணைந்து செயற்பட்டு வந்தனர்.

கி.வீரமணியும், நெடுமாறனும் புலிகள் இயக்கத்தையே ஆதரித்து வந்தனர். அதனால் ரெசோவுக்குள், ரெலோவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதை அவர்களும் விரும்பவில்லை. இக்காலகட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சனை குறித்து ஆவேசமாக குரல் கொடுத்தபடி ஒருவர் களத்தில் இறங்கினார். அனைவரது கவனமும் அவர் மீது திரும்பியது.

அவர்தான் மதுரை ஆதீனம்.

கடவுளே இல்லையென்று மறுத்துவரும் வீரமணி போன்றவர்களோடு, மடாலயபதி ஏன் இணைந்துகொண்டார் என்றும் சிலர் கேள்வி எழுப்பினார்கள். கேள்வியில் கேலியுமிருப்பதை புரிந்துகொண்டவராக மதுரை ஆதீனம் பதில் சொன்னார்.

"தமிழர்கள் என்ற இன உணர்வு நம்மை இணைத்திருக்கிறது."

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு அலை வீசிக்கொண்டிருந்த போது, தமிழ் நாட்டில் தங்கியிருந்த போராளி அமைப்புகள் மத்தியிலான சிறு சிறு உரசல்களும் தொடர்ந்துகொண்டே இருந்தன.

குறிப்பாக புலிகள் அமைப்பினருக்கும், புளொட் அமைப்பினருக்குமிடையே கடும் பிரச்சனை நிலவி வந்தது.

நேரில் சந்தித்துக்கொண்டால் மோதிக் கொள்ளும் அளவுக்கு பிரச்சனை கூர்மை இருந்தது.

### புலிகள் கடத்தல்

15.02.85ல் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவரை புளொட் அமைப்பினர் சென்னையில் வைத்து கடத்திச் சென்றனர். கடத்தப்பட்டவர் எங்கு கொண்டுசெல்லப் பட்டார் என்று தெரிந்தால் ஆச்சரியப் படுவீர்கள்.

தமிழ் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கரியின் சென்னையிலுள்ள வீட்டுக்குத்தான் கடத்தப்பட்டவர் கொண்டு செல்லப்பட்டார்.

கடத்திச் செல்லப்பட்ட உறுப்பினரின் பெயர் ஆதவன்.

அதைத் தொடர்ந்து 05.03.85ல் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினர் ஒருவரையும், இன்னொரு உறுப்பினரையும் புளொட்

### அற்புதன் எழுதுவது



கலைஞர் கருணாநிதி

அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

தமிழ் நாட்டின் கடற்கரைப்பகுதியான முத்துப்பேட்டையில் வைத்தே அவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

அவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட புலிகளது மூத்த உறுப்பினர் வேறு யாருமல்ல, பொட்டம்மான்தான் அவர்.

அப்போது 'பொட்டு' என்று அழைக்கப் பட்டார். (தற்போது புலிகளின் உளவுப் பிரிவுக்கு பொறுப்பாக இருக்கிறார்)

பொட்டம்மானிடம் இருந்த கைத்துப்பாக்கியையும் பறித்துவிட்டு விடுவித்தனர் புளொட் அமைப்பினர்.

இதற்கு முன்னர் யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் வைத்து புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் 06 பேர் புளொட் அமைப்பினரால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர்.

இது நடந்தது 25.11.84ல். புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் கொலை செய்யப் படுவதை கண்டுவிட்டனர் இரு இளைஞர்கள். அதனால் அவர்களும் கொல்லப்பட்டனர்.

இக்கொலைகளைத் தொடர்ந்தே புளொட் அமைப்பினருக்கும், புலிகள் அமைப்புக்குமிடையிலான மோதல் நிலை மேலும் தீவிரம் அடைந்தது.

### கண்ணன் கடத்தல்

பொட்டம்மான் கடத்தப்பட்டதோடு பிரபாகரன் சீற்றம் அடைந்தார்.

தமது அமைப்பின் உறுப்பினர் கடத்தப் பட்டதற்கு பதில் நடவடிக்கை எடுக்க புலிகள் திட்டமிட்டனர்.

சென்னையிலுள்ள மகாலிங்கபுரம் என்னுமிடத்தில் தமிழ் தகவல் நிலைய அலுவலகம் இருந்தது.

07.03.85 காலை 09 மணிக்கு அங்கு வந்தார் புளொட் அமைப்பின் படைத் துறைச் செயலாளர் கண்ணன்.

தமிழ் தகவல் நிலையத்தில் இருந்த ரெலோ உறுப்பினரான குலசிங்கம் என்பவரோடு கண்ணன் பேசிக்கொண்டிருந்தார். திடீரென்று அலுவலகத்தின் வெளியே வெடி ஓசை கேட்டது.

புலிகள் அமைப்பின் முக்கிய உறுப்பினரான சங்கர் என்று அழைக்கப் படும் சொர்ணலிங்கமும், வேறு சில புலிகளும் உள்ளே வந்தனர்.

கண்ணனை தம்மோடு வருமாறு கூறி வேன் ஒன்றில் கொண்டு சென்றனர். கண்ணனோடு வந்திருந்தவர்களில் ஒருவரான ரவி என்னும் புளொட் உறுப்பினருக்கும் காலில் சுட்டுவிட்டு சென்றுவிட்டார்கள்.

தமிழக பொலிஸ் துறையும், உளவுப் பிரிவும் தலையிட்டு கண்ணனை விடுதலை செய்யுமாறு புலிகளிடம் கோரின. இரண்டு மணி நேரத்தின் பின்னர் கண்ணன் விடுவிக்கப்பட்டார்.

இதனை அடுத்து புளொட் அமைப்பினர் விடுத்த அறிக்கையில், கடத்திச் செல்லப்பட்ட கண்ணன், பிரபாகரன் முன்னிலையில் கை, கால்களுக்கு விலங்குகள் பூட்டப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டதாக தெரிவித்திருந்தனர்.

கண்ணன் கடத்தப்பட்ட சம்பவம் குறித்து புலிகள் அமைப்பினரும் ஒரு விரிவான பிரசுரம் வெளியிட்டிருந்தனர்.

"இது ஒரு இறுதி எச்சரிக்கை நடவடிக்கையாகும்." என்று தெரிவித்த புலிகள் அமைப்பினர், தமது உறுப்பினர்கள் கடத்தப்பட்ட நடவடிக்கைகளுக்கு கண்ணனே பொறுப்பாகும் என்றும் கூறியிருந்தனர்.

1985இன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரின் பிரதான மறைவிடம் ஒன்றை நோக்கி இராணுவத்தினர் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

(தொடர்ந்து வரும்)

## யார் அந்த நாயகன்?

சென்றவாரம் அரசியல் தொடரில் திரைப்படக் காட்சி ஒன்று வெளியாகியிருந்தது அல்லவா. விபரம் அறிய ஆவலாக இருப்பீர்கள்.

படத்தில் நடிகை சங்கவியோடு இருப்பவர் சரவணபவன். காட்சி இடம் பெறும் திரைப்படம் 'சின்னக்கிளி, வண்ணக்கிளி' (வெளிவரவில்லை).

கதாநாயகன் சரவணபவன் மீனம்பாக்கம் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் விமானம் செலுத்தும் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த சரவணபவனுக்கு தமிழ் ஈழ இராணுவத்தோடு தொடர்பு ஏற்பட்டது. அவரைப்பயன்படுத்தி விமான நிலைய ஊழியர்கள் சிலரை கைக்குள் போட்டுக் கொண்டார்கள் தமிழ் ஈழ இராணுவத்தினர்.

குண்டுவெடிப்பை அடுத்து சரவணபவனையும் பொலிஸ் தேடியது.

பர்தா அணிந்துகொண்டு சென்னையை விட்டு தப்பியோடிய சரவணபவன், பஞ்சாப் மாநிலம் வழியாக பாகிஸ்தான் செல்லத் திட்டமிட்டார். அவரது கெட்ட நேரம், பஞ்சாப் எல்லையில் வைத்து பிடிக்கப் பட்டார். குண்டுவெடிப்பு வழக்கில் இவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது.

விடுதலையாகி வெளியே வந்த சரவணபவன் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் ஏஜென்சி ஒன்றை சென்னையில் ஆரம்பித்து நடத்திவருகிறார். 'குங்குமப்பூ' என்னும் சஞ்சிகை ஒன்றும் வெளியிட்டார். 'பாக்யா' சஞ்சிகையைப் போலவே வெளியிட முயன்றதால் ஒரு பாக்யாவே போதும் என்று குங்குமப்பூவை வாசகர்கள் நிராகரித்து விட்டனர். அதனால், படத்தயாரிப்பில் இறங்கி, சங்கவியை கதாநாயகியாகப் போட்டு தானே நாயகனாக நடித்து 'டூயட்' பாடிக்கொண்டிருக்கிறார்.

சரவணபவன் பற்றி வெளிவந்த ஒரு சுவாரசியமான செய்தி ஒன்று சொல்கின்றேன். தனது வெளிநாட்டு ஏஜென்சி வேலை தொடர்பாக கடவுச்சீட்டோடு விமானம் மூலமாக கொழும்புக்கு வந்துபோனார் சரவணபவன்.

அவர் வந்துபோய் ஒரு சில மாதத்தின் பின் கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாக ஒரு செய்தியை வெளியிட்டது. அது இதுதான்;



"குண்டு தயாரிப்பதில் நிபுணரான சரவணபவன் கொழும்புக்குள் ஊடுருவியதாக தகவல் கிடைத்துள்ளது."

பாவம், சரவணபவன், அந்தச் செய்தி வெளியானபோது அவர் சென்னையில் இருந்து கொண்டு தனது ஏஜென்சி அலுவல்களில் மூழ்கியிருந்தார்.

அது மட்டுமல்ல, குண்டு தயாரிப்பதிலும் சரவணபவனுக்கு அனுபவம் இருக்கவில்லை.

தமிழ் ஈழ இராணுவ ஆதரவாளராக சரவணபவன் இருந்தார். உறுப்பினர் அல்ல.

தற்போது சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறார்.

இன்னொரு தகவல், சரவணபவன் விடயத்தை அடுத்து இலங்கையர்களுக்கு விமானம் செலுத்தும் பயிற்சியளிப்பதை இந்தியாவில் நிறுத்திவிட்டார்கள்.



படிப்பகம்

# அலசுவது—இராஜதந்திரி



# தொண்டாவை நம்பாத புலிகள் அடக்கிவாசிக்கும் அமைச்சர் சந்திரசேகரன்

அமைச்சர் தொண்டமான் சர்ச்சைக்குரிய ஓர் அரசியல்வாதியாகவே தொடர்ந்து கருதப்பட்டு வருகிறார். மலையகத்தில் முடிசூடா மன்னராக விளங்கிவந்த தொண்டமானின் தலைமைத்துவம் தற்போது பல்வேறு நெருக்கடிகளை சந்திக்கவேண்டியதாகவுள்ளது. வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்னை பற்றி பாராளுமன்றத்தில் முன்னாள் அமைச்சர் தேவராஜ் சுற்றிவளைத்து விளக்கம் சொல்லவேண்டியதாகிவிட்டது.

தனது மனதில் பட்டதை சொல்லிவிட்டு தனது கட்சிக்காரர்களையும் சேர்த்து சங்கடத்தில் மாட்டிவிடும் ஒருவராகவே தொண்டாவின் நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன.

யாழ்ப்பாண பத்திரிகைகள் விமர்சனங்களைத் தொடுப்பதில்லை என்பதும், விடுதலைப் புலிகளது பிரமுகர்களும் அவர் தொடர்பாக இதுவரை பாதகமான கருத்தெதனையும் கூறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாயுள்ளது.

பிரதியமைச்சர் சந்திரசேகரனும்

பிரச்னைகளிலும் தீர்வொன்றைக் காண்பதற்கு முடியாத நிலையே தொடர்கிறது.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி விடயத்தில் அதனை சந்திரசேகரனின் தனிப்பட்ட பிரச்னைகளைப்போல கருதி இ.தொ.கா ஒதுங்கிக் கொண்டது. ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி விடயத்தில் சந்திரசேகரனுக்கும், பொதுஜன முன்னணிக்கும் இடையே ஓர் உடன்பாடு செய்துகொள்ளப்பட்டிருந்தது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் செய்யப்பட்ட அந்த உடன்பாட்டின் அடிப்படையில் சந்திரசேகரனே தீர்த்துக் கொள்ளட்டும் என்றே தொண்டா கூறிவந்தார். இந்த விவகாரத்தில் சந்திரசேகரன் தனித்து நின்று முரண்டுபிடிப்பதன் மூலமாக அவருக்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையே கசப்புணர்வு தோன்றுவதை இ.தொ.கா. விரும்பியிருந்தது போலவே தோன்றுகிறது.

அதனையுணர்ந்தோ என்னவோ சந்திரசேகரன் பிடிவாதத்தை நீட்டாமல், ஒரு சமரச ஏற்பாட்டுக்கு இணங்கிக் கொண்டார்.

சந்திரசேகரனுக்கு இப்போது உள்ள பிரச்னை அவர் முரண்டுபிடித்து, அரசாங்கத்தோடு விரிசல் ஏற்படுத்திக் கொள்வாரேயானால், அந்த விரிசலை இ.தொ.கா. பயன்படுத்திவிடும் என்பதாகவே இருக்கின்றது.

இ.தொ.காவும் அரசாங்கத்தைத் தான் அதிகமாக விரோதித்துக் கொண்டால், அது தனது எதிர்முகமாக வளர்ந்து வரும் சந்திரசேகரன் அணியினருக்கு பயன்பட்டுவிடுமோ என்று நினைக்கவே செய்யும். இதனால், மலையகத்தின் இரு பிரதான அணிகளும் அரசாங்கத்தோடு தமது பலத்தை காட்டி முரண்டுபிடிக்க முடியாத நிலையே தோன்றியிருக்கிறது.

தோட்டங்களை தனியார் மயப்படுத்துவதால் தோன்றும் பிரச்னைகளிலும் இ.தொ.காவும் மலையக மக்கள் முன்னணியும் அரசாங்கத்தோடு மல்லுக்கட்டத் தயாராக இல்லை என்றே தெரிகிறது.

இவ்வாறான நிலையில் ஐ.தே.கட்சியின் தொழிற்சங்கமும், வேறுசில தொழிற்சங்கங்களும் தமது பாத்திரத்தை அழுத்தமாக்க முயன்றுவருவதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் தன்னை ஒரு துணிச்சல்

காரத் தலைவராக வெளிப்படுத்தும் போராட்டங்களில் அமைச்சர் தொண்டா குதிப்பதை, அவர்மீதான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தடுத்துவருவதாவே அவதானிகள் கூறிவருகின்றனர்.

அமைச்சர் தொண்டாமீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எந்தளவு உண்மை இருக்கிறது, சட்டரீதியாக எவ்வாறு நிருபிக்க முடியும் என்பவை ஒருபுறமிருந்தாலும், விசாரணைகள், விளக்கங்கள் என்று பத்திரிகைகளில் செய்திகள் வருவதை அவர் விரும்பமாட்டார். அரசாங்கத்திற்கு ஒரு நெருக்கடியை கொடுக்க தொண்டா துணிவாரேயானால் ஊழல் குற்றச்சாட்டுக்கள் அவர்மீது பாய்வதை தவிர்க்க முடியாதவராகிவிடுவார்.

எனவே-தமிழீழ விடுதலைப் புலிகளைப் பாராட்டி தொண்டா தெரிவித்துவரும் கருத்துக்கள், துணிச்சல் வாய்ந்த தலைவர் என்னும் முத்திரையைப் பாதுகாத்து வருகின்றன. அவர் புலிகள் பற்றிப் பேசுவதையெல்லாம் பெரிதுபடுத்தும் தென்னிலங்கை அரசியல்வாதிகளின் கூச்சல்கள் தொண்டாமீதான தமிழ் மக்களின் அனுதாபத்தையும் வளர்த்து வருவதையும் நோக்கக்கூடியதாகவுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பினரும் தமக்கு சாதகமாக உள்ளபோது தொண்டாவின் கருத்துக்களை மௌனமாக கேட்டவாறே உள்ளனர். அதேவேளை தொண்டாவை நம்புவதற்கோ, வடக்கு-கிழக்குப் பிரச்னையில் அவருக்கு ஒரு பாத்திரம் வழங்குவதற்கோ அவர்கள் தயாராக இல்லை என்பதும் தெளிவான ஒன்றாகவே இருக்கப் பெருகிறது.

தனது 83வது பிறந்தநாளை கொண்டாடியுள்ள அமைச்சர் தொண்டமான் தனது அரசியல் வாழ்க்கையை பாரிய தோல்விகளை எதிர்கொள்ளாமல் பூர்த்திசெய்யக்கூடியதாக இருந்தாலும், அவருக்குப்பின்னர் இ.தொ.கா. மலையகத்தில் எதிர்கொள்ளப்போகும் தடை அரண்களுக்கான அடிக்கற்கள் தற்போதே நாட்டப்பட்டு விட்டதையும் அறிந்தவராகவே இருக்கிறார்.

அடிக்கடி பிரஸ்தாபித்துவரும் தொண்டமான் அதனாலேயே பல தடவைகள் பெரும் சர்ச்சைகளுக்குள் சிக்கிக்கொள்பவராக விளங்கிவருகிறார்.

மலையக அரசியல் தொடர்பாக அமைச்சர் தொண்டமான் தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்பாக எழும் விமர்சனங்களை விடவும், வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக அவரது கருத்துக்களுக்கே கண்டனக்கணைகள் பாய்ந்த வண்ணமுள்ளன. வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பான அவரது கருத்துக்கள் சிங்கள அரசியல்வாதிகள் மத்தியிலும் ஜீரணிக்கப்படாதவையாகவே இருந்து வருகின்றன.

அமைச்சர் தொண்டமான் குறித்தும், அவரது திடீர் அறிக்கைகள், பேச்சுக்கள் குறித்தும் பல்வேறு கசப்புக்கள் உள்ளபோதும், அவரது வாக்கு வங்கியின் பலம் புறக்கணிக்கப்பட முடியாத ஒன்றாகவே இருந்து வருகிறது.

இதன் காரணமாகவே தொண்டமான்மீது அவநம்பிக்கை கொண்டிருந்த பொதுஜன முன்னணியும் அவரது உறவை நாடவேண்டியதாகியது.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டமையானது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அனுதாப வாக்குகளை அறுவடை செய்துவிடக்கூடும் என்னும் கருத்தின் அடிப்படையிலேயே தொண்டமானின் உறவை பொதுஜன முன்னணி நாடியிருந்தது.

வேறொரு சந்தர்ப்பமாக இருந்திருப்பின்

தொண்டமானோடு கைகோர்க்கும் முயற்சிக்கு பொதுஜன முன்னணிக்குள் எதிர்ப்புக் கணைகள் கிளம்பியிருக்கும். ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி தோல்வியிலேயே பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் எதிர்காலம் தங்கியிருந்த சூழ்நிலையில் தொண்டமானையும் கூட்டுச் சேர்த்துக் கொள்வதற்கு எதிர்ப்பில்லாமல் போயிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியோடு அதன் 17 வருடகால ஆட்சியில் முக்கிய பங்காளிகளில் ஒருவராக இருந்த நிலையில் இருந்து, பொதுஜன முன்னணிக்கு சென்றது மூலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் கடும் வெறுப்பையும் அவர் தேடிக்கொள்ள வேண்டியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் ஒரு பிரிக்க முடியாத அங்கமாகவே நோக்கப்பட்ட தொண்டமானை தங்களில் ஒருவராக நினைத்துப் பார்க்கவே முடியாதவர்களாகவே பொதுஜன முன்னணியினர் இருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் தன்னை தயார் படுத்திக்கொண்டு எழுமானால், அமைச்சர் தொண்டாவும், அவரது கட்சியினரும் அந்தப் பக்கம் சென்று விடுவார்கள் என்பதில் ஜனாதிபதிக்குக் கூட சந்தேகமிருப்பதாகத் தெரியவில்லை. இ.தொ.காவுக்குள்ளும் பொதுஜன முன்னணியோடு ஒட்டாத போக்கே காணப்படுகிறது. தங்களுக்குரிய மரியாதை தரப்படுவதில்லை; தங்கள் புகார்கள் கவனிக்கப்படுவதில்லையென்று இ.தொ.காவின் முக்கிய பிரமுகர்களே அரசாங்கம் தொடர்பாக அதிருப்தியோடு பேசுவதைக் கேட்க முடிகிறது.

சமீபத்தில் வழங்கப்பட்ட மதுக்கடை அனுமதிப் பத்திரங்கள் இ.தொ.காவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது புகைச்சலை சற்றே தணித்திருப்பதாகத் தெரிகிறது.

ஆனாலும், ஐ.தே.கட்சியோடு கடுமையாக மோதினால் தமது பதவிக்கே உலைவைப்பதாகிவிடும் என்ற எண்ணமும் இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரிடம் மேலோங்கியிருப்பதை அறியக்கூடியதாகவுள்ளது.

இ.தொ.காவின் மூத்த தலைவர்கள் வட்டாரத்தில் அமைச்சர் தொண்டமானின் தன்னிச்சையான பேச்சுக்கள், பேட்டிகள் குறித்து முணுமுணுப்புக்களும் எழத்தொடங்கியுள்ளன.

எல்.ரி.ரி.ஈ. தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அமைச்சர் தொண்டமான் இந்திய சுதந்திரப் போராளி பகத்சிங்கோடு ஒப்பிட்டிருந்தார். இது பெரிய சர்ச்சையாக மாறிவிட்ட நிலையில்,

இ.தொ.காவை பொறுத்தவரை வடக்கு-கிழக்குப் பிரச்னையில் அதன் நிலைப்பாடு என்னவென்பது முன்னுக்குப்பின் முரண்பாடாகவே இருந்து வருகிறது.

அவசரகாலச்சட்டத்தையும் இ.தொ.கா பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்தே வருகிறார்கள். முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையின் காரணமாக யாழ் குடாநாட்டில் பொதுமக்கள் பெருவாரியாகக் கொல்லப்பட்டபோது அமைச்சர் தொண்டமானோ, இ.தொ.காவோ மௌனமாகவே இருந்ததையே அவதானிக்க முடிந்தது.

அதன்பின்னர் அவசரகாலச் சட்டப் பிரேரணை வந்த போதும் இ.தொ.க.ஆதரித்தே வாக்களித்திருந்தது.

இவற்றுக்கெல்லாம் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் 5 வருட காலத்திற்கு நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும் என்று அமைச்சர் தொண்டமான் ஒரு யோசனையை முன்வைத்திருந்தார்.

இதனால் ஏற்பட்ட சர்ச்சையின் காரணமாக அப்படியொரு யோசனையை அமைச்சர் தொண்டமான் தன்னிடம் தெரிவிக்கவில்லை என்று ஜனாதிபதி கூறியிருந்தார். அதனை நேரடியாக மறுக்கமுடியாதவராகவே அமைச்சர் தொண்டமான் மௌனம் சாதித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் காரணமாகவே அமுலில் இருப்பதாகக் கூறப்படும் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தவாறு, அவர்களின் போராட்டம்

நீதியானது என்றும் அமைச்சர் தொண்டமான் கூறிக்கொண்டிருப்பதானது பொருத்தமற்றதாகவே காணப்படுகிறது.

பகத்சிங் மீதான தூக்குத் தண்டனையையும் ஆதரித்தவாறு, பகத்சிங் சிறந்த போராளி என்று பாராட்டுவது போன்ற நிலைப்பாடுபோன்றே இதனை எண்ணத் தோன்றுகிறது.

இதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகளும் அமைச்சர் தொண்டமான் குறித்து நல்லபிப்பிராயம் கொண்டிருக்காதவர்களாகவே இருந்துவருகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் அமைச்சர் தொண்டமான் தனது கைப்பட பிரபாகரனுக்கு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்துக்கான பதிலை பிரபாகரன் எழுதவில்லை. அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவராக இருந்த கோபாலசாமி மகேந்திரராஜா என்னும் மாத்தையாவே பதில் எழுதியிருந்தார்.


இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் அமைச்சர் தொண்டமான் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் விதமான எந்தவிதமான சமிக்ஞையையும் விடுதலைப் புலிகள் வெளியிடவில்லை.

அதேசமயம், அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சிகள் தொடர்பாக புலிகளது பிரமுகர் வே.பாலகுமார் கடும் விமர்சனங்களை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் எழுதி வந்தார்.

அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகள் தொடர்பாக வெளியிட்டுவரும் சாதகமான கருத்துக்களையும், பாராட்டுக்களையும் யாழ்ப்பாண பத்திரிகைகள் வெளியிட்டு வருகின்றன. அதே வேளையில், அவர் தொடர்பான கடும் விமர்சனங்களையும் அவை பிரசுரித்தே வருவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் எதுவும் விடுதலைப் புலிகளின் கருத்தோட்டங்களுக்கு மாறான விமர்சனங்களை வெளியிடுவதில்லை என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும். அது மட்டுமில்லாமல், விடுதலைப் புலிகளது தினசரி என்று சொல்லப்படும் 'ஈழநாதம்' பத்திரிகையில்தான் அமைச்சர் தொண்டமான் மீது விமர்சன அம்புகள் ஏவப்பட்டு வருகிறதென்பதையும் அவதானிக்க முடிகிறது.

அமைச்சர் தொண்டாமீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுமளவுக்கு, பிரதி அமைச்சர் பெ. சந்திரசேகரன் மீது



## இ.தொ.கா—மலையக மக்கள் முன்னணி இடையேயான பிரச்னையால் இரு தரப்புக்குமே அரசாங்கத்தோடு முரண்டுபிடிக்க முடியாத நிலை

பாராளுமன்ற அரசியலுக்குள் மூழ்கிப் போயுள்ளவராகவும், அமைச்சுப் பொறுப்புக்களில் ஆழ்ந்துவிட்டவராகவுமே இருந்து வருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணைத்து அடையாளப்படுத்தப்பட்டால் தமது அரசியலுக்கு சேதாரங்கள் ஏற்படும் என்று அவரும், அவரது கட்சியினரும் கருதுவதாகவே தோன்றுகிறது.

எனவே-தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதை சந்திரசேகரனும், மலையக மக்கள் முன்னணியும் தவிர்த்தே வருகின்றன.

மலையக தமிழ் மக்களுக்கு தனியொரு 'பிரதேசசபை'யை கோரிவருகிறது மலையக மக்கள் முன்னணி. இவ்வாறான நேரத்தில் விடுதலைப்புலிகளுக்கும் ஆதரவாகப் பேசினால் பிரதேச சபை கோரிக்கையோடு, தமிழீழக் கோரிக்கையையும் இணைத்து முடிச்சு போடப்படக்கூடும் என்று முன்னணியினர் நினைக்கவே செய்வர்.

வடக்கு-கிழக்கு பிரச்னையின் தீவிரம் மலையகத்திலும் எதிரொலித்தே வருகிறது. வடக்கு-கிழக்குப் பிரச்னையில் புலிகளுக்கு ஆதரவாக அமைச்சர் தொண்டமான் கருத்துத் தெரிவித்து வந்தபோதும், மலையகத்தில் உள்ள இளைஞர்கள் மத்தியில் ஆயுதம் ஏந்தும் நோக்கங்கள் வந்துவிடக் கூடாது என்பதில் கவனமுடையவராகவே இருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவரென நம்பப்பட்ட வரதனுக்கு புகலிடம் கொடுத்தாரெனக்கூறி திரு.சந்திரசேகரன் கடந்த ஆட்சிக் காலத்தில் கைது செய்யப்பட்டிருந்தார்.

நீண்டகாலமாக விசாரணையின்றி சந்திரசேகரனும், அவரது சகாக்களும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதும் அமைச்சர் தொண்டமானும், இ.தொ.காவும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது நியாயமானது என்பது போலவே பேசத் தலைப்பட்டனர்.

மலையகத்தில் வன்முறைகளுக்கு இடம்கொடுக்கலாகாது என்றும் அப்போது இ.தொ.கா மேடைகளில் பேசப்பட்டு வந்தது. சந்திரசேகரன் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்கு இ.தொ.காவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் சந்திரசேகரனின் ஆதரவாளர்கள் சந்தேகம் தெரிவித்து வந்தனர்.

இ.தொ.காவின் பொதுச்செயலாளராக இருக்கும்வரை சந்திரசேகரன் விவகாரத்தை திரும்பியும் பாராமல் இருந்த திரு.செல்லச்சாமி, இ.தொ.காவில்

தனது பதவிக்கு வேட்டுவைக்கப்பட்டபோது சிறையில் இருந்த சந்திரசேகரனை நோக்கி ஓடிச்சென்றார். அவரது விடுதலைக்கும் உதவினார்.

இவ்வாறான நடவடிக்கைகள் மலையக அரசியலிலும் விடுதலைப் புலிகளின் பெயர் பல்வேறு நோக்கங்களோடு பயன்பட்டு வந்திருப்பதையே புலப்படுத்துகின்றன.

ஆனால், தற்போது அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகள் தொடர்பாக வெளியிட்டுவரும் கருத்துக்கள் அவரை ஒரு தீவிர புலி ஆதரவாளராக சிங்கள மக்கள் மத்தியில் நோக்கவைத்துள்ளன.

## புலிகள் தொடர்பாக கருத்துத் தெரிவிப்பதை தவிர்த்து வரும் மலையக மக்கள் முன்னணி

அமைச்சர் தொண்டமானோ அவ்வவப்போது தனக்குத் தோன்றும் கருத்துக்களை கூறிக்கொண்டிருக்கிறார். சில சமயங்களில் மட்டும் அக்கருத்துக்களை அழுத்தமாக தொடர்ந்து வற்புறுத்துபவராக விளங்குகிறார். 'ஈழநாதம்' பத்திரிகையின் விமர்சனத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பது போல, இவற்றின் மூலமாக 'தன்னை ஒரு துணிச்சல்காரராக அவர் பிரகடனம் செய்து கொள்கிறார்.'

இந்தவகையில் துணிச்சல்காரர் என்னும் முத்திரை, அவரை நம்பி வாக்களித்துவரும் மக்களிடம் ஓரளவு பிரமிப்புக்களை தோற்றுவிக்க உதவலாம். தென்னிலங்கை அரசியல்வாதிகளிடமும் விடுதலைப் புலிகளிடமும், அவரது பேச்சுக்கள் 'தந்திரக்காரர்' என்ற பட்டத்தையே தேடிக்கொடுத்திருக்கிறது.

மலையகத்தில் எதிர்நோக்கப்படும் உடனடி பிரச்னைகளில் கூட இ.தொ.காவின் செயற்பாடுகள் மந்தகதியில் சென்றுகொண்டிருப்பதையே அவதானிக்க முடிகிறது.

மலையக தமிழ் பேசும் மாணவர்களுக்கு கல்விபோதிக்க சிங்கள் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோதும் இ.தொ.கா பொறுமையாகவே இருந்தது. அடையாள அட்டைப்பிரச்னைகள் காரணமாக மலையக தமிழ் இளைஞர்-யுவதிகள் எதிர்கொள்ளும் அன்றாடப்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# யார் குற்றவாளி

சென்றவாரம்

1978 இல் காண்டிஸ் வில்லியம்ஸ் என்னும் இளம்பெண் இலண்டன் போமிங்ஹாமில் உள்ள 12 வது மாடிக் கட்டிடத்தில் வைத்து பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்டாள். இலண்டன் உளவுத்துறை கொலையாளியை தேடி வலைவீசியது. பாற்றிக் என்னும் இளைஞனை கைது செய்தது. எனினும் போதிய சாட்சியம் இல்லாமல் அவன் விடுதலையானான். பாற்றிக்கின் காதலி அவன் தொடர்பாக சந்தேகப்பட்டு பொலிசுக்கு தகவல் சொன்னாள்.

பாற்றிக்தான் கொலையாளி என்று தெரிந்ததும், குற்றத்தை நிரூபிக்க பொலிஸ் உளவுத்துறை திண்டியபோதுதான், டி.என்.ஏ.ஆய்வு முறை அறிமுகமாகியது.

இனி...

3

வீட்டுக்கு வந்த பமேலா கதவு திறந்திருப்பதைக் கண்டு சற்றே துணுக் குற்றாள்.

வீட்டுக் கதவின் இன்னொரு சாவியை வெளியே ஒரு மறைவிடத்தில் வைத்திருப் பாள் பமேலா. வெளியே செல்லும்போது ஒரு சாவி தவறிப்போய்விட்டால் தேவைப் படும் என்று ஒரு முன்னேற்பாடு.

சாவி இருக்குமிடம் அவளைத்தவிர பாற்றிக்குக்கு மட்டும்தான் தெரியும்.

"அப்படியானால்.... அப்படியானால்.... ஓ... கோட்.... பாற்றிக் வந்துவிட்டானா? பொலிசில் அவனைப்பற்றிய சாதகத்தை ஒப்புவித்துவிட்டு. இப்போது எப்படி முகம் கொடுத்துப் பேசுவது?"

வாசல் கதவருகே பமேலா தயங்கினாள். அவள் காலடிச் சத்தம் கேட்டு, பாற்றிக் உள்ளேயிருந்து எட்டிப்பார்த்தான். ஒரு துள்ளலுடன் எழுந்து உதடு குவித்து விசில் அடித்தான்.

"வா! பமேலா" என்றான். பமேலா உள்ளே போனதும், கோழிக் குஞ்சைக் கொவிய பருந்துபோல அவளை இழுத்து தன்னோடு அணைத்துக் கொண்டான். தனது உதடுகளால் பமேலாவின் உதடுகளை மூடி மூச்சுத்திணற வைத்தான். மென்மையில்லாத வெறித்தனம். பமேலா மனதுக்குள் சபித்தாள்.

தன்னை விடுவித்துக் கொண்டு, இயல் பாகக் கேட்பது போல, "நீ...நீ எப்போது வந்தாய் பாற்றிக்?"

"சிறைக்கதவு திறந்தவுடன் நேராக இங்கேதான் வந்தேன். கடும்பசி. வந்தால் நீயில்லை."

"சாப்பிடவேயில்லையா நீ?"

"சிறையில் எப்படிச் சாப்பிட முடியும்?"

கண்ணடித்தான். பமேலா மனசுக்குள் வெறுத்து வெளிக்குப் புன்னகைத்தாள்.

♥♥

பமேலாவின் வாக்கு மூலத்தை வைத்து பொலிஸ் உளவுத்துறை மீண்டும் காண்டிஸ் வில்லியம்ஸ் என்னும் இளம்பெண்ணின் கொலையை ஆராயத் தொடங்கியது.

ஏர்னஸ்ட் ரொபின்சன் என்னும் துப் பறியும் அதிகாரியின் பொறுப்பில் விசாரணை கள் ஆரம்பித்தன.

விசாரணைகள் நடந்தபோது உளவுத் துறை பொலிஸ்காரர் ஒருவர் ரொபின்சனிடம் அவசரமாக ஓடிவந்தார்.

"என்ன.... ஏதாவது தகவல் கிடைத்ததா? பாற்றிக்கின் நடவடிக்கைகளில்....."

"அதைத்தானே சொல்ல வந்தேன். பாற்றிக் பொலிசில் மாட்டிக்கொண்டான்."

"என்ன..... பொலிசில் மாட்... ஏன்?"

"மீண்டும் ஒரு பலாத்கார பாலியல் உறவு. வேன் ஒன்றில் இளம் பெண்ணைக் கடத்திக்கொண்டு போய் ...."

"சே..... காமமிருகம்."

▫▫

பாற்றிக்மீது சுமத்தப்பட்ட பலாத்த கார பாலியல் உறவு குற்றம் நிரூபிக்கப் பட்டது. 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சிறையில் வைத்து அவனிடம் காண்டிஸ் கொலை பற்றி விசாரிக்கும் முயற்சிகள் பயனளிக்கவில்லை.


உளவுத்துறை பொறுமையாக காத் திருந்தது.

தண்டனைக்கால கழிவுகளோடு 1991ம் ஆண்டு பெப்ரவரி 20 ம் திகதி சிறையிலிருந்து வெளியே வந்தான்.

கைகளை தலைக்கு மேலே உயர்த்தி சோம்பல் முறித்து சுதந்திரக் காற்றை சுவாசித்தான் பாற்றிக். ஆனால் பாற்றிக்கின் மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

சிறைக்கு வெளியே காத்திருந்த உளவுத் துறை பாற்றிக்கை கைது செய்தது.

••



பாற்றிக்

"எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறீர்கள் மிஸ்டர் ரொபின்சன்? பத்து வருஷம். காண்டிஸ் வில்லியம்ஸ் கொல்லப்பட்டு பத்து வருசங்கள். முடியவே முடியாது என்று பைலை மூடியாகிவிட்டது. இப்போது மீண்டும் தூசுதட்டிக் கொண்டுவந்திருக் கிறீர்கள். முடியுமா?"

என்று கேட்டார் உயரதிகாரி. அவரது தலையில் கால்பந்து விளையாடலாம் போல இருந்தது. அடிக்கடி தனது தலையை இட்டு கரத்தால் வருடிக்கொண்டே பேசினார். ரொபின்சன் உறுதியான குரலில் சொன்னார்:

"முடியும்!"

ரொபின்சனின் குரலில் இருந்த உறுதி உயரதிகாரிக்கு வியப்பாக இருந்திருக்க வேண்டும். அவர் நெற்றியில் ஆச்சரிய ரேகைகள்.

★★

"எப்படி அத்தனை உறுதியாகச் சொல் கிறீர்கள் மிஸ்டர் ரொபின்சன்?"

"காரணம்-புதியதொரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு! அதன் பெயர் டி.என்.ஏ."

"தெரியும். அதனை நீதிமன்றம் தூக்கி எறிந்துவிடுமல்லவா? இதுவரை டி.என்.ஏ. மூலமான ஆதாரத்தை நீதிமன்றம் ஒப்புக் கொள்ளவில்லையே ரொபின்சன்?"

"ஒப்புக்கொள்ளவைப்போம். அதன் மூலம் இந்தக் கொலையாளிகள் சட்டத்தின் கண்ணில் மண்ணைத்தூவ முடியாது. மாட்டுவது சர்வநிச்சயம் என்று புரியவைப்போம்."

உயரதிகாரிக்கு சந்தேகம் மாறவில்லை.

"ஓ.கே. முயலுங்கள். வாழ்த்துக்கள்" என்று முடித்துக் கொண்டார்.

▫▫

பாற்றிக் முரண்டுபிடித்தான். விசா ரணையாளர்களோடு ஒத்துழைக்க மறுத்தான்.

டி.என்.ஏ. முறையில் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் இரத்தம், எச்சில், அல்லது உடலோடு சம்பந்தப்பட்ட தடயம் ஒன்று தேவை.

பாற்றிக் முரண்டுபிடித்தபோது அடி பட்டான். வயிற்றில் ஓங்கிக் குத்த எச்சில் கக்கி ஓவென்று கதறினான். தலைமுடியைக் கொத்தாகப் பற்றி தூக்கியபோது, தலை முடியில் கொஞ்சம் ரொபின்சனின் கையில் சிக்கியது.

பாற்றிக் வேறு ஒரு அறைக்கு கொண்டு செல்லப்பட்டான்.

அவன் எச்சிலும், தலைமுடியும் திரட்டப்பட்டு டி.என்.ஏ. ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டது.

காண்டிஸ் வில்லியம்ஸ் கொலை வழக்கை 10 வருடங்களுக்கு முன்னர் விசாரித்த மாட்டின் ஒரு நல்ல காரியம் செய்திருந்தார்.

கொலைசெய்யப்பட்ட காண்டிஸ் வில்லி யம்ஸ் அருகே கிடந்த எச்சில் தடயத்தையும், கொலையாளியின் தலைமுடியையும் பத்திரமாக ஆய்வறையில் வைத்திருந்தார்.

அந்தத் தடயங்களோடு பாற்றிக்கின் எச்சிலும், தலைமுடியும் ஒப்பிட்டுப்பார்க்கப் பட்டது.

நீண்ட கடினமான முயற்சி.

இறுதியில் ஆய்வாளர் தனது முடிவைத் தெரிவித்தார்.

"பாற்றிக்தான் கொலைகாரப் பாவி".

★★

தருவது
ரசிகன்

நீதிமன்றத்தில் ஜூரிகள் முன்பாக வழக்கு விசாரணை.

டி.என்.ஏ. ஆய்வுகள் மிகத்தெளிவாக, ஒரு நூல் முனை அளவுகூட தடுமாற்றம் இல்லாமல், குற்றவாளி பாற்றிக்தான் என்று சுட்டிக்காட்டுகின்றன,"

என்றார் அரசு தரப்பு சட்டத்தரணி.

ஜூரிகள் குழப்பமடைந்தனர்.

"டி.என்.ஏ. எனப்படும் மரபுக்கூறு ஆராய்ச்சி முறையை எப்படி நம்புவது?"

ஒரு ஜூரர் கேட்டார்.

அது போதுமானதாக இருந்தது பாற்றிக்கின் சட்டத்தரணிக்கு. அவர் தனது தொண்டையைச் செருமி சரிப்படுத்திக் கொண்டு எழுந்தார்.

"நேற்றையக் கண்டுபிடிப்பு இன்று பொய்யாகிறது. இன்றையக் கண்டுபிடிப்பு நாளையே பொய்யாகிவிடலாம். இதனை வைத்துக் கொண்டு நிரபராதியான என் கட்சிக்காரரை தண்டித்துவிடாதீர்கள். காண்டிஸ் வில்லியம்ஸ் கொல்லப்பட்டு 10 வருடங்களுக்கு மேலாகிறது. இன்றுவரை அன்று திரட்டப்பட்ட தடயங்கள் பொலிசிடம் இருந்தது என்று கூறுவது அபத்தமான கற்பனை."

சொல்லிவிட்டு அரச தரப்பு சட்டத் தரணியை ஒரு கேலிப் பார்வையால் தடவிவிட்டுத் தொடர்ந்தார்.

"குற்றவாளிகளை பிடித்து கண்கண்ட சாட்சியங்களை நிறுத்தி, குற்றத்தை அக்கு வேறு, ஆணிவேறாக நிரூபித்து தண்டனை வாங்கிக் கொடுத்தால் பொலிஸ்காரரைப் பாராட்டலாம். அதற்காகத்தான் நமது வரிப் பணத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு மிருக்கிறார்கள். அதைவிடுத்து, துப்பறியும் கதை எழுத்தாளர்கள் போல கற்பனையை நம்பி வழக்குத் தயாரிப்பது அபத்தம். தவிர, என் கட்சிக்காரர் வாழவேண்டிய இளைஞன். முகத்தைப் பாருங்கள் முடி கூட இன்னும் ஒழுங்காக முளைக்கவில்லை. அப்பாவியின் வாழ்க்கையோடு விளையாடப் பார்கிறது பொலிஸ்."

அரச சட்டத்தரணி குறுக்கிட்டார்.

"கற்பனைத் திறனும், பொய்களை ஜோடிக்கும் திறனும் எதிர்த்தரப்பு சட்டத் தரணியிடம் தான் தேங்கிக்கிடக்கின்றன. விட்டால் அள்ளிப் போட்டுக்கொண்டு இருப் பார். அப்பாவியான இந்த வாலிபர் செய்த குற்றங்களும் அதற்காக பெற்ற தண்டனை களும் அடங்கிய பட்டியல் இதோ இருக் கிறது."

பட்டியல் ஜூரிமாரிடம் சமர்ப்பிக்கப் பட்டது.

1983 இல் ஒரு இளம்பெண்ணை மோட்டார்வண்டி ஒன்றுக்குள் இழுத்துச் சென்று பலாத்கார பாலியல் உறவு கொள்ள முற்பட்டான். குற்றம் நிரூபிக்கப்பட்டு பதினெட்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது.

1984 இல் மற்றொரு இளம் பெண்ணை வேன் ஒன்றில் கடத்திச் சென்று பலாத்கார உறவு கொண்டான். 10 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஜூரிகளின் முகங்கள் இறுகிப்போய் இருந்தன.

வழக்கு விசாரணை தொடர்ந்தது. டி.என்.ஏ. ஆய்வு முடிவுகள் துல்லிய மானவைதானா என்று உறுதிசெய்ய மருத்து வர்கள் பலரும், விஞ்ஞானிகள் பலரும் சாட்சியங்களுக்காக அழைக்கப்பட்டனர்.

இறுதியில் டி.என்.ஏ. ஆய்வுகள் துல்லிய மானவை என்று ஜூரிகள் 12 பேரில் 10 பேர் ஒப்புக் கொண்டனர்.

பெண்களை பலாத்காரம் செய்து இருமுறை சிறை சென்றவன் என்பதால் ஜூரிகளுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் விலகியது.

1992 மார்ச் மாதம் 18 திகதிதான் தீர்ப்பு அறிவிக்கும் நாள். டி.என்.ஏ. ஆராய்ச்சி முறை முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட வழக்கு என்பதால் தீர்வை அறிய சட்டத் துறையை சேர்ந்தவர்களும், பொலிஸ் துறை யைச் சேர்ந்தவர்களும் உலகெங்கும் ஆவலோடு காத்திருந்தனர்.

ஜூரிகள் சபையில் 10 பேர் ஏகமனதாக சொன்னார்கள்:

"பாற்றிக்கே கொலைகாரன் என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்."


ஜூரிகள் கூறியதையடுத்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

"பாற்றிக்தான் குற்றவாளி என்பது உறுதியாகிவிட்டது. ஆகவே ஆயுள் தண்டனை வழங்கப்படுகிறது."

தீர்ப்பைக் கேட்ட பாற்றிக் நீதிமன்றத்தில் உள்ளவர்களை நோக்கினான். யாருடைய கண்களிலும் துளியளவும் அனுதாபம் தெரியவில்லை.

பாற்றிக் தன்னை மறந்து தலையில் அடித்துக் கொண்டு கதறத் தொடங்கினான்.

## டி.என்.ஏ



மனித உடல் வளர்ச்சிக்கு தேவையான ஜீவ அணுக்களை உற்பத்தி செய்யும் இயற்கைக் கம்பியூட்டரே டி.என்.ஏ. ஒரு சில வைரஸ் கிருமிகள் தவிர மற்றைய சகலவகை உயிரினங் களிலும் டி.என்.ஏ. இருக்கிறது. உயிரினங்கள் மத்தியில் உள்ள வேறுபாட்டுக்கு காரணம் டி.என்.ஏ. தான். ஒவ்வொரு டி.என்.ஏ. மரபணுவுக்குள்ளும் ஒரு சங்கேத தகவல் இருக்குமாம். அந்தச் சங்கேத தகவல்கள் தான் எச்சிலையோ, அல்லது இரத்தத்தையோ வைத்துக்கொண்டு, அது கண்ணனுடையதா கணேசனுடையதா என்று கண்டறிய உதவுகின்றன. ஆக, நமக்குள் உள்ள டி.என்.ஏ தான் நமது உண்மையான அடையாளச் சீட்டு.

ஒரு மனிதனின் டி.என்.ஏ. இன்னொரு மனிதனின் டி.என்.ஏ.யோடு ஒன்றுபட்டு இருப்பதற்கு வாய்ப்பே இல்லை, என்று அறிவியல் அடித்துச் சொல்கிறது.

இதனை ஏற்றுக்கொண்டு தான் தற்போது டி.என்.ஏ. சட்டத்துறையில் பயன்படுத்தப் படுகிறது.

டி.என்.ஏ.ஆய்வில் சமீபகால சாதனைகளில் ஒன்று-ராஜீவ் கொலை வழக்கில் தானுவின் அங்க அடையாளங்களை உருவாக்கியமையாகும்.

பலாத்கார பாலுறவு, கொலைவழக்கு களில் முடிச்சுக்களை அவிழ்க்க டி.என்.ஏ உதவுகிறது.

முதன் முதலில் டி.என்.ஏ. ஆய்வு பயன்படுத்தப்பட்டது காண்டிஸ் வில்லியம்ஸ் கொலை வழக்கில்தான்.

# ஹலோ டாக்டர்

"வாருங்கள் இப்போதுதான் உங் களை நினைத்துக் கொண்டிருந்தேன்."

"உங்கள் இதயத்தில் என் நினைவு இருக்கிறது என்று தெரிகிறது. சந்தோஷம் டாக்டர்?"

"நினைவுகள் இருப்பது இதயத்தில் அல்ல மூளையில். நாம் எல்லோரும் இதயத்தைத்தான் உடம்பின் முக்கிய பகுதி யாகக் கருதுகிறோம். அது தப்பு. முக்கிய மான பகுதி மூளைதான். நமது உடலின் சக்தி மையமும் அதுதான். அண்ணலும் நோக்க, அவளும் நோக்க காதலிக்கும் 'மூட்' வருவது மூளையில்தான். இதயம் உட்பட அனைத்தையும் மூளைதான் இயக்கி வருகிறது."

"மூளையில் நூறுகோடி செல்களுக்கு மேல் இருப்பதாகச் சொல்வது உண்மை தானா டாக்டர்?"

"உண்மைதான். அவை ஒவ்வொன் றுக்கும் இடையே 50,60 இணைப்புக்களும் உள்ளன. இதிலிருந்து மூளையின் சக்தி என்னவென்று புரிந்திருப்பீர்கள். மூளையில் உள்ள இணைப்புக்களை வரிசைப்படுத்த உலகில் எந்தக் கம்பியூட்டராலும் முடியாது."

"கம்பியூட்டர்களெல்லாம் நம்மிடம் பிச்சை வாங்க வேண்டும் என்கிறீர்கள்?"

"ஆம். ஆனால், மூளையின் அபார சக்தியில் ஒரு சிறிய அளவையே நாம் உபயோகிக்கிறோம். இன்னொரு விஷயம்- மூளையின் நிறை ஆக ஒன்றரைக்கிலோ தான். ஆனால் அதன் சக்தி மாபெரும் மடங்கு."

"ஒன்றரைக்கிலோ மூளையின் திற மைக்கு நம் உடல் கொடுக்கும் கூலி என்ன டாக்டர்?"

"நம் உடலுக்கு பிராணவாயு, குளுக் கோஸ் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் பிராண சக்தியில் மூன்றில் ஒரு பங்கை மூளை எடுத்துக்கொள்ளுகிறது. ஒரு நிமிடத்திற்கு மேல் பிராணவாயுவை அது பெற முடியா விட்டால், கோபித்துக் கொண்டு உயிரை விட்டுவிடும்."

"அய்யய்யோ....அப்படியானால் நமது கதி?"

"அப்போதுதான் பக்கவாதம் (ஸ்ட்ரோக்) ஏற்படுகிறது. அது மட்டுமல்ல, மூளைக்குச்

## காதல் தோன்றுவது எங்கே?



செல்லும் இரத்தக் குழாய்களில் ஏதாவது ஒன்றில் சிறு கட்டி போய் அடைப்பு ஏற்படுத்தினாலும் வம்புதான்!"

"என்னாகும் டாக்டர்?"

"கண்பார்வை, காது கேட்பது, தொண்டை விழுங்குவது, கை, கால் செயற் படுவது, இப்படி ஏதாவது ஒரு செயற்திறன் நின்று போய்விடும்."

"இந்தப் பாதிப்பை எப்படி நிறுத்தலாம் என்று சொல்லுங்கள் டாக்டர்?"

"மூளையில் நூறு தலைமை அலுவல கங்கள் இருக்கின்றன. இவை உடம்பின் ஒவ்வொரு பகுதிக்கும் கட்டளைகளை யிட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு அலு வலகம் கட்டளை கொடுக்க இயலாமல் போனாலும் அந்தப் பகுதி செயலற்றுப் போய்விடும். மூளை நல்ல நிலையில் வைத்திருக்க உடற்பயிற்சி முக்கியம். புகை பிடிப்பதும் மூளைக்கு நல்லதல்ல. மது அருந்துவது மூளையை மழுங்கச் செய்யும். தியானம் செய்வதும் நல்லது. மூளையை வலுப்படுத்தி, சுறுசுறுப்பாக வைத்திருக் கும்."

"மூளையை பாதிக்கும் மூளைக்கட்டி, மூளைப்புற்று நோய் ஆகிய நோய்களை முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியுமா டாக்டர்?"

"உடம்பின் வெளியே கட்டி வந்தால் உடனே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். மூளையில் அவ்விதம் வந்தால், தெரிய நாளாகும். கட்டி வளர்ந்து மூளையைத் தாக்கும். மண்டையோட்டின் மேல் இடித்து வலியை உண்டாக்கும். இது அதிகமானால் பொறுக்க முடியாத தலைவலி உண்டாகும். அந்தப் பகுதியில் பாதிக்கப்படும் மூளைத் திறன் அதற்குரிய உறுப்பை செயற்பட விடாமல் தடுக்கும். கண்பார்வை தடுமாறும், கால்கள் தள்ளாடும், பேச்சுக் குழறிப் போகலாம். ஓர் உறுப்பு உணர்ச்சி மரத்துப் போகலாம். இப்படிப் பலவித அடையாளங் கள் தெரியும்."

"இவற்றைக் கண்டுபிடித்துக் குணமாக்க முடியாதா டாக்டர்?"

"எம்.ஆர்.ஸி, ஸ்கேன் போன்ற நுட்பமான கருவிகள் மூலம் ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துவிட முடியும். அப்படிக் கண்டுபிடித்து பாதிக்கப்பட்ட பகுதியை அறுவைச் சிகிச்சை மூலம் அப்புறப் படுத்திவிடலாம். ஆனால், மிக ஆரம்ப நிலையிலேயே இதைச் செய்ய வேண்டும். தொடர்ந்த தலைவலி, செயலில் தடுமாற்றம் ஆகியவை மூளை நோய் ஓரளவு வளர்ந்த நிலைக்கு அடையாளங்கள். இவை தோன்றும் போதே டாக்டரை அணுகுவது நல்லது."

"நன்றி டாக்டர். மறுபடியும் கண்டிப்பாக வருவேன்."

# சிறை மீண்ட சிங்கம் மீண்டும் களம் புகுந்த டைசன்

1991ம் ஆண்டு அந்தச் சிங்கத்தை சிறையில் பூட்டினார்கள். 1995 மார்ச் மாதம் சிறைக்கதவம் திறந்தது. சிங்கம் வெளியே வந்து இரை தேடியது.

ஆகஸ்ட் 19ம் திகதி இரை கிடைத்தது. ஒரே பாய்ச்சல்.

சிங்கத்தின் இரசிகர்களுக்கு கொள்ளை மகிழ்ச்சி.

அந்தச் சிங்கம் மைக் டைசன். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் தனது பலத்தை மீண்டும் புதுப்பித்துக் கொண்டு களத்தில் இறங்கினார் டைசன்.

டைசனோடு முதலில் மோதுவதற்கு உலகின் முன்னணி குத்துச்சண்டை வீரர்கள் 'நான், நீ' என்று போட்டி போட்டனர்.

வெற்றியோ தோல்வியோ; உலகின் கவனத்தைக் கவரலாம் அல்லவா? அதுதான் போட்டிக்குக் காரணம்.

ஆனால் வாய்ப்புக் கிடைத்தது அமெரிக்க வீரரான பீட்டர் மெக் நீலி என்பவருக்குத் தான்.

மோதலுக்கு முதல் நாள்வரை மெக் நீலி வாயடித்துக் கொண்டிருந்தார். "டைசனை வெல்லப் போகிறேன்," என்று ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்.

டைசன் எதுவும் சொல்லவில்லை. நிருபர்கள் சந்தித்துக் கேட்டனர்:

"நீங்கள் வெற்றிபெறுவீர்களா?"

"போட்டியில் பாருங்கள்" என்று மட்டும் சொல்லிவிட்டார் டைசன்.

ஆகஸ்ட் 19 இல் போட்டி. மேடையில் நின்று மார்தட்டி, தொடை தட்டி ஆர்ப் பரித்துக் கொண்டிருந்தார் மைக் நீலி. டைசன் வந்தார். மேடையில் ஏறினார்.

மோதல் தொடங்கியது.

பாய்ந்து முதல் குத்துவிட்டார் மைக் நீலி. தடுமாறி மேடையில் இருந்த கயிற்றில் சாய்ந்தார் டைசன்.

நீலிக்கு படு உற்சாகம். இன்னொரு இடி கொடுத்தார்.

டைசன் கதி அவ்வளவுதானோ? என்று பார்வையாளர்கள் நினைத்துவிட்டார்கள்.



எழுந்தார் டைசன். முதல் குத்து விட்டார். நீலி சரிந்தார். இப்போது டைசனின் முறை. இரண்டாவது குத்து, தொடர்ந்து நீலியின் தலையில் ஒரு அபாரக்குத்து. வீழ்ந்தார் நீலி. எழவே முடியவில்லை.

நீலியின் மனேஜர் ஓடிவந்து இனி நீலி தாங்கமாட்டார் என்று மன்றாடினார்.

டைசன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டது. கரவொலி அரங்கைப் பிளந்தது.

டைசன் தனது அதிவேகக் குத்துக் களோடு இறங்கிவிட்டார். சிறையில் இருந் தாலும் சிங்கத்தின் பலம் பழுதுபட வில்லை.

இதற்கிடையே டைசன் பெண்சபலம் கொண்டவர் என்று, அவருக்கு எதிராக கொஞ்சம் பெண்கள் அரங்குக்கு வெளியே நின்று கோஷம் போட்டுக் கொண்டிருந் தனர்.

டைசன் சில பெண் களோடு சுற்றுவதாக அவரது எதிராளிகள் கதைகட்டிவிடுவதில் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# ஆஹா... என்ன சுகம்...!

கிளிவளர்ப்பது போன்ற பிரியத்தோடு கரடி வளர்த்து, பயிற்சிகள் அளித்து வைத்திருக்கிறார் மிஸ்டர் மரினோ. அமெரிக்கா வாஷிங்டனில் கரடி சகிதம் வசித்து வருகிறார். படத்தில் உள்ள கரடியாரின் எடை 600 இறாத்தல். பாசமுள்ள கரடியாரோடு கொஞ்சிக்குலாவுவது தான் மிஸ்டர் மரினோவின் பொழுதுபோக்கு. முகம் சுளிக்கக்கூடாது மரினோவுக்கு தன் கரடி பொன் கரடி. பொல்லாத குறும்புக் கரடி.



# குழந்தைக்கு குறும்பழகு!

குழந்தைகளுக்கு குறும்பு அழகு என்பதை இந்தப் புகைப்படம் பொட்டென்று புரியவைக்கிறதல்லவா. குறும்பின் உச்சத்தை கச்சிதமாக படமெடுத்த கமராக்காரரை கைகுலுக்கிப் பாராட்டலாம். தனது நண்பரின் வீட்டுக்குச் சென்ற 'நீயுகாலிங்' என்னும் கமராக்காரருக்கு, அங்கு குறும்பு செய்து குதித்துக் கொண்டிருந்த நண்பரின் குட்டிப் பையன் கண்ணில் பட்டுவிட்டான். உடனே கமராவை எடுத்து 'கிளிக்' 'கிளிக்'! எதிர்பாராத கிளிக் என்பதால் படம் அருமையாக வந்துவிட்டது. மசாசூசெட்டில் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியில் இந்தப்படத்தை இடம்பெறச் செய்தார். பரிசையும் சுலபமாகத் தட்டிக்கொண்டார். பரிசு கொடுத்தது நியாயம்தானே.



**தகவல் பெட்டி**

# குழந்தைக்காக

ஜென்னிக்கு 25 வயது. திருமணம் ஆகவில்லை. ஆகப் போவதுமில்லை. கல்யாணமே வேண்டாம் என்று கண்டிப்பாக அறிவித்துவிட்டார். அதனால் ஜென்னிக்கு பின்னால் வட்டமிட்ட வாலிபர்கள் வாபசாகிவிட்டனர். காரணம் என்ன? கல்யாணமானால் குழந்தைகள் பிறக்கும். இப்போதுள்ள குழந்தைகளை யார் கவனிப்பது. நேரம் போதாதே என்பதுதான் காரணமாம். ஜென்னியின் தனது குழந்தைகள் என்று கூறுவது நாய்க்குட்டிகளை. பிரிக்கமுடியாத பாசம். படத்தைப் பார்த்தாலே தெரிகிறதல்லவா.






# உள்ளங்கையில் உலகம்


உலகிலேயே மிக மிகச் சிறிய டெலிவிஷனை ஜப்பான் நிறுவனம் ஒன்று கண்டுபிடித்துள்ளது. 5.6 சென்றிமீற்றர் அகலமே கொண்ட அந்த டி.வி.நம் கைக்குள் அடங்கிவிடும் அளவில் இருக்கிறது.

சக்தி மிகுந்த இந்தக் குட்டி டி.வியில் வரும் நிகழ்ச்சிகளை சரியாகப் பெறுவதற்காக அன்டெனா வசதிகளும் உள்ளது. நினைத்த இடத்திற்கெல்லாம் இந்த டி.வியை எடுத்துச் செல்ல முடியும் என்பதால், இதற்கு மக்களின் வரவேற்பு நன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். உள்ளங்கையில் உலகம் வந்துகொண்டிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணமல்லவா.

# மணியுமாச்சு போனுமாச்சு!

மினி செலூலர் போன் ஒன்றைக் கைக் கடிகாரத்தில் இணைத்து 'கடிகார போன்' ஒன்றை உருவாக்கி இருக்கின்றனர். தேவைப்படும்போது நாம் யாருடனும் தொடர்பு கொண்டு பேசலாம்.

மற்ற நேரங்களில் அது கைக்கடிகாரமாக இயங்கும். இந்தக் கடிகார போனுக்கு முன்னேறிய நாட்டு இளைய சமுதாயத்தினரிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. குறித்த நேரத்தில் போன் செய்ய மறந்தாலும், மணி பார்க்கும் போது நினைவுக்கு வந்துவிடும்.





# வீட்டுக்குள் ஓடலாம்

உடற்பயிற்சிப் பிரியர்களுக்குப் பிடித்தமான நவீன உடற்பயிற்சி மெஷின் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். நடந்தால், ஓடினால் மற்றும் பயிற்சிகள் செய்தால் எத்தகைய பலன் கிடைக்குமோ அந்தப் பலன்கள் இந்த மெஷினில் பயிற்சி செய்யும் போதும் கிடைக்கும்.

சமீபத்தில் தான் இது மேலை நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் விலை 60 ஆயிரம் ரூபாயில் இருந்து தொடங்குகிறது. சனத்தொகை ரொம்ப அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கடற்கரையில் கூட மூச்சு முட்டும் அளவுக்கு சன நெருக்கம். அதனால் வீடுகளுக் குள்ளேயே ஓடுவது, நடப்பது, துள்ளுவது என்று சகல பயிற்சிகளையும் செய்து முடிக்கும் கருவிகளுக்கு பேய் மரியாதை.

# பாரு... பாரு... கங்காரு



கங்காருவின் குட்டிகள் மிகவும் சிறியவை. வளர்ந்தநிலையில் உள்ள கங்காருவைப் பார்க்கிலும் 5000 மடங்கு சிறியவை. தாய்க்கங்காருவுக்கு குட்டிமீது கொள்ளைப் பிரியம். சமார் ஒரு மாதம்வரை தாய் தனது வயிற்றில் அமைந்துள்ள 'பையில்' குட்டியைக் காவிச் செல்லும். வேகமாக ஓடும்போதும் குட்டி கீழேவிழாதவாறு பிடித்துக் கொள்ளும். கச்சிதமான பிடி.
அவுஸ்திரேலியாவின் தேசிய விலங்கு கங்காருதான். அதனால் அவற்றை அழியவிடாமல் நன்கு பராமரித்து வருகின்றனர்.
தாய்ப்பாசத்துக்கு கங்காருவையும் உதாரணம் காட்டலாம். தப்பேயில்லை.


படிப்பகம்

www.padippakam.com

# ரஜினியின் மற்றொரு அதிரடி 'பாக்ய தேவதா' வங்காளத்தில் ரெடி

தெலுங்கில் 'பெத்தராயுடு' படத்தில் (தமிழில் நாட்டாமை) பெரிய நாட்டாமையாக நடித்து பெரும் வரவேற்பைப் பெற்றார் அல்லவா ரஜினி. இப்போது வங்காள மொழிப் படத்திலும் முக்கிய பாத்திரம் ஒன்றில் நடித்து முடித்துக் கொண்டிருக்கிறார். படத்தின் பெயர் 'பாக்யதேவதா' தமிழில் அதன் அர்த்தம் விதியின் கடவுள்.

'பாக்யதேவதாவில்' ரஜினிக்கு புரட்சிக் கவிஞர் வேஷம். கனல் பறக்கும் வசனங்கள் பேசிக் கலக்கியிருக்கிறார். வங்காளத்தில் நிஜமாகவே வாழ்ந்த சுகந்தாதேவ் என்னும் கவிஞராகவே ரஜினி தோன்றுகிறார்.

தமிழக அரசியல் சூழலை மனதில் வைத்து எழுதப்பட்ட வசனங்கள் தான் படத்தின் நெத்தியடியான சமாச்சாரமாம். 'வன்முறையைக் கண்டு பதுங்காதே. அம்பெனப் புறப்படு' என்று மேடையில் ஏறி ரஜினி பேசுவது போலவும் காட்சிகள் வருகிறதாம்.

படத்தில் கதைச் சுருக்கம் என்ன? முரசுக்கு மட்டுமே கிடைத்த தகவல் இதோ. தனது கவிதைகளாலும், பேச்சாலும் கோழையையும் வீரனாக்கும் கவிஞர் சுகந்தாதேவ் (ரஜினி), அவரது பாராட்டாலும், பேச்சாலும் உணர்ச்சிபெற்று கோழையாக இருந்த மிதுன் சக்கரவர்த்தி புயலாக புறப்படுகிறார். கதைச் சுருக்கம் அதுதான். கவர்ச்சிப் பீரங்கி மம்தா குல்கர்னியும் படத்தில் இருக்கிறார். மிதுன் சக்கரவர்த்திதான் கதாநாயகன்.

# சத்யராஜ்-பிரபு புதுமுடிவு

## இணைந்து தருகிறார்கள் 'சிவசக்தி'

சில வருடங்களுக்கு முன்னர் இரண்டு கதாநாயகர்கள் இணைந்து நடித்த படங்கள் தமிழில் சக்கை போடு போட்டன. ரஜினி, கமல், சத்யராஜ், பிரபு, கார்த்திக், ஆகியோர் இணைந்து நடித்த படங்களுக்கு அமோக வரவேற்பு இருந்தது.

பின்னர் ஒரு இடைவெளி. தற்போது பிரபுவும், சத்யராஜும் மறுபடி இரண்டு கதாநாயகர்கள் உள்ள படங்களில் நடிக்க முடிவு செய்துள்ளனர்.

பிரபு மலையாளத்தில் மோகன்லாலுடன் இணைந்து நடித்த படம் காலாபாணி. அது 'சிறைச்சாலை' என்ற பெயரில் தமிழில் வருகிறது.

சத்யராஜ்-பிரபு நடிக்கும் புதிய படம் ஒன்றும் தயாராகப் போகிறது. நவம்பர் மாதம் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது. படத்தின் பெயர் 'சிவசக்தி'.

ஏற்கனவே சத்யராஜ், பிரபு இணைந்து வழங்கிய 'பாலைவன ரோஜாக்கள்', 'சின்னத்தம்பி பெரிய தம்பி' போன்ற படங்கள் சூப்பர்ஹிட். எனவே சிவசக்தியும் தூள்கிளப்பும் என்கிறார் சுரேஷ் கிருஷ்ணா. அவர்தான் இயக்குநர். 'அண்ணாமலை' 'வீரா' போன்ற படங்களை இயக்கியவர் சுரேஷ் கிருஷ்ணா. 'தாய்மாமன்' 'திருமூர்த்தி' போன்ற படங்களை தயாரித்த நிறுவனம் தான் 'சிவசக்தி' படத்தையும் பெரும் பொருட்செலவில் தயாரிக்கிறது. கதை-வசனம், பாலகுமாரன், இசை, தேவா. முன்னணிக் கதாநாயகிகள் இருவர் நடிக்கவுள்ளனர். என்பது கடைசிச் செய்தி. யார் என்பது விரைவில் தெரியவரும்.




ரஜினிகாந்த்
படம்-பாக்ய தேவதா

# பந்தரே, பந்தரே, சோனாலி பந்தரே

'பம்பாய்' படத்தில் அரபிக்கடலோரம் பாட்டுக்கு வந்து ஆடுவாரே, நெடு நெடுவென்று வளர்ந்திருக்கும் அழகி. (இதெல்லாம் மறக்கக் கூடிய சமாச்சாரமா) அவர் பெயர் சோனாலி பந்தரே என்பதும் தெரிந்த சமாச்சாரம். பம்பாய் படம் இந்தியிலும் பிய்த்துக் கொண்டு ஓடியதால் (தியேட்டரைவிட்டல்ல) இந்தியில் படு பிஸியாகிவிட்டார் சோனாலி பந்தரே. கைவசம் டசின் கணக்காக படங்கள். இன்னொரு விஷயத்திலும் அவர் பிஸியாக இருக்கிறார். அதாகப்பட்டது, இந்தி நடிகர் சுனில் ஷெட்டியை படு சீரியசாகக் காதலித்துக் கொண்டிருக்கிறார் சோனாலி பந்தரே. சுனில் ஷெட்டியின் மனைவியோடு விரைவில் மோதல் நிகழக்கூடும். இது ஒருபுறமிருக்க, ஜொள்ளுப் பிரியர்களுக்கு ஒரு செய்தி. அடுத்தவார சினிவிசிட்டில் சோனாலிபந்தரேயின் லேட்டஸ்ட் அசத்தல் ஒன்று காத்திருக்கிறது.

# மணமகள் தேவை

இளம் நடிகைகள் பலரால் காதலிக்கப்பட்டவர். தானும் காதலித்தவர். இப்போது 'காதல் என்பது கல்யாணம் வரையல்ல குட்பை' என்று சொல்லாமல் சொல்லி விட்டார். 'அம்மா அம்மா, அடக்கமாக ஒரு பெண் பாருங்கள் என்று கூறிவிட்டார். தங்கள் புத்திசாலிப் பிள்ளைக்கு மணமகள் தேடிக்கொண்டிருக் கிறார் அம்மா. யார் அவர் என்று சொல்லவில்லையல்லவா. அவர் ராம்கி. (பாவம் நிரோசா)

# விசித்ர

திரையிடப்பட்டு 50
வழக்கம் போல தாரா
கேளுங்கள். கவர்ச்சி ந
விசித்திராவுக்கு பா
காட்சி. விசித்ரா இறு
சட்டையும் அணிந்திரு
அருண்பாண்டியன் வ
அமைய வேண்டும். இய
படமாக்கப்பட்டதாம். மு
விசித்ராவின் நெஞ்சில்
அவர் அணிந்திருந்
அருண்பாண்டியனுக்கு
சிவந்து போனார். அரு
கழுத்தைச் சுற்றி போட்
அதைச் சுற்றிக் கட்டிக்
விசித்ரா. எப்படித்தான்
வரவில்லையே என்று

# வில்லன

'இந்தியன்' படத்தில் கம
வேடம் ஒருவர் இளம் வாலிபன்
60 வயது முதியவர். அவர்தா
வில்லனாக வித்தியாச
நடிக்கிறார் கமல்.

# முக

பிரபு-மனோரப
படம்-மிஸ்டர் மெட்



# சின்ன வீடு 8-பிள்ளைகள் 22

ராஜ்கிரண்-வனிதா விஜயகுமார் நடித்துவரும் படம் 'மாணிக்கம்'. இதில் ராஜ்கிரணின் தந்தையாக நடிக்கிறார் வினுசக்கரவர்த்தி. அவருக்கு இரு மனைவிகள். போதாக்குறைக்கு 8 சின்னவீடுகள். மொத்தம் 22 பிள்ளைகள். படத்தில் மட்டும்தான்.

# குவைத் நாயகன்

'வர்றாரு சண்டியரு' படத்தில் குஷ்புவின் ஜோடியாக நடித்துவரும் தொழிலதிபர் பிரேமுக்கும், வினிதாவுக்கும் ஒரு விஷயத்தில் ஒற்றுமை உண்டு. இருவரும் பிறந்தது குவைத் நாட்டில்.

# பெயர் புதிது

ஊர்வசி நடிக்கும் புதிய படம் ஒன்றின் பெயர் வித்தியாச ரகம். இதுதான், 'ஏழரைக் கூடம்' நல்லவேளை, அது மலையாளப்படம். இயக்குபவர் கரீம்.

# தெலுங்கில் பானு

வனஜா-கிரிஜா படம் தமிழில் பப்படமான படம். அப்படியிருந்தும் அதை தெலுங்கில் தயாரிக்கிறார்கள். தமிழில் ஊர்வசி செய்த அப்பாவிப் பெண் வேசத்தை, தெலுங்கில் செய்பவர் பானுப்பிரியா. என்றாலும், ஊர்வசி போல வருமா?

# இந்தியில் மவுசு

தனது படங்களின் வெற்றி தோல்வியைப் பற்றி சற்றும் கவலைப்படாத இயக்குநர் பாக்யராஜ். அவரது கதைகளை இந்தியில் தயாரிக்க உரிமைவாங்க இந்திப்பட தயாரிப்பாளர்கள் போட்டி போடுகிறார்கள். இந்தியில் பாக்யராஜுக்கு அத்தனை மரியாதை.

# காதோடு சொல்லுகிறோம்

**பூ**வின் பெயர் கொண்ட நடிகை தனது காதலரான மணியான இயக்குநரை நம்பி இனிமேலும் பணத்தை இழக்கத்தயாராக இல்லையாம். தெலுங்கில் உழைத்து சம்பாதிப்பதை காதலனுக்குத் தெரியாமல் ஆந்திராவிலேயே தொழில் ஒன்றில் மூலதனமிடுகிறாராம்.

**து**ணியின் பெயர் கொண்ட கவர்ச்சி நடிகைமீது கவர்ச்சி சாந்தி கடும் கோபமாக இருக்கிறாராம். "அந்த தெலுங்குக்காரியின் சொக்குப் பொடியில் மயங்கிப்போய் நிற்கிறார்கள் தமிழ்ப்பட தயாரிப்பாளர்கள். இவர்களுக்கு தமிழ்உணர்வு பத்தலே" என்று புலம்புகிறாராம் கவர்ச்சி சாந்தி. தமிழ் உணர்வு குலுங்குதாக்கும்.

**ந**கைச்சுவை நடிகர் ஐ.ராஜ் மீண்டும் ஒரு காதல் திருமணம் செய்த பின்னர் ஆளே மாறி விட்டாராம். காலையில் பார்த்த நபரை மாலையில் பார்த்தால் "யார் நீ?" என்று கேட்கிறாராம். நல்ல சிகிச்சை இல்லாவிட்டால் தேறமாட்டார் என்று வருந்துகிறார்கள் அவரைத் தெரிந்தவர்கள்.

**ர**ஞ்சித நடிகை தனது தங்கைக்கு ஒரு சின்ன மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தாராம். கிடைத்தது சான்ஸ் என்று தங்கையார் போய்பிரண்டுடன் ஜாலியாகச் சுற்றினாராம். விஷயம் அறிந்த நடிகை வாங்கிக் கொடுத்ததை திருப்பி வாங்கிக் கொண்டாராம்.

**ச**கலகலா வல்லவ 'ராஜ' 'இந்திர' இயக்குநர் கண்பார்வைக்கு மூக்குக் கண்ணாடி போடுகிறாராம். வெளியே தெரிந்தால் 'இமேஜ்' கெட்டுவிடும் என்று வீட்டில் தனி அறையில் மட்டும் கண்ணாடி போட்டுக்கொண்டு படிக்கிறாராம்.



அஜித்குமார்-சுவலட்சுமி
படம்- ஆசை
இது மணிரத்னத்தின் சொந்தப் படம்.
இயக்கம்-வசந்த்

செம்பருத்தித் தோட்டம்
பனியில் நீராடும்
தென்னை இளம் தோப்பு
வெயிலில் குளிர்காயும்

கன்னிக் கனவு
கண்ணில் உறங்கும்.

சாரல் விழும் நேரம்
ஈரக் கரை ஓரம்
காதல் வந்ததால்
எழுந்து சிரித்து
கொழுந்து விரிக்கும்
இளைய பூச்செடி

கவிஞர் வைரமுத்து


படிப்பகம்

www.padippakam.com

# ஏற்படுத்திய அதிர்ச்சி

...ளை நெருங்கிக்கொண்டிருக்கும் படம் அசுரன். படத்தில் விசித்திராவும் ... நடித்துள்ளார். அசுரன் படப்பிடிப்பில் நடந்த சம்பவம் ஒன்றைக் ...கள் எந்தளவுக்கு கஷ்டப்படுகிறார்கள் என்று புரியும். ...முதல் கன்னம்வரை அருண்பாண்டியன் முத்தமிடுவது போல ...ன அரைக்கால் சட்டையும், மேலேயும் இறுக்கமான சிறு ... அவரது பாதத்தில் இருந்து ஊர்ந்து கழுத்துவரை முத்தமிடும்போது விசித்ரா அணைப்பது போல காட்சி ...க்கு திருப்தி வராததால் இக் காட்சி மூன்று முறை ...வது முறை அருண்பாண்டியன் நெருங்கும்போது ...து 'பட்' டென்று ஒரு சத்தம். அதாகப்பட்டது ...ட்டை பட்டன்கள் தெரித்துவிட்டன. ... அதிர்ச்சி. விசித்ரா வெட்கத்தில் முகம் ...ண்டியன் சமாளித்துக்கொண்டு தனது ...த மப்ளரை எடுத்துக் கொடுத்தார். ...ண்டு மேக்கப் ரூமுக்கு ஓடினார் ...ப்பட்டும் படம் ஓஹோ என்று ...துகிறார் விசித்ரா.

## ...க கமல்

... இரண்டு ...னொருவர் ...வில்லன். ...ப்பில்



பிரபு
படம்-பெரிய குடும்பம்

## பிரபுவின் மற்றொரு படம் மலையாள நாயகனுடன் கூட்டணி

## முதலில் பெரிய குடும்பம்

# குஷ்புவுக்கு கல்வீச்சு

ஒரு காலத்தில் கோயில் கட்டப்பட்ட நடிகை குஷ்பு. இப்போது பாருங்கள், குஷ்புவுக்கே கல்வீச்சு நடந்துவிட்டது. 'நாட்டுப்புறப்பாட்டு' என்னும் படத்தில் சிவகுமாரின் ஜோடியாக நடித்துவருகிறார் குஷ்பு. அந்தப் படத்தின் படப்பிடிப்பு சென்னையில் நடந்துகொண்டிருந்தது. நேரமோ இரவு பன்னிரண்டு மணி. படப்பிடிப்பு இடைவேளையில் குஷ்பு தனது உதவியாளருடன் ஒரு இடத்தில் அமர்ந்திருந்தார். திடீரென்று குஷ்பு இருந்த இடத்தை நோக்கி கற்கள் பறந்துவந்தன. படப்பிடிப்புக் குழுவினர் உஷாராகிவிட, கற்களை வீசியவர்கள் இருளில் மறைந்துவிட்டனர். காயமின்றித் தப்பித்துக் கொண்டார் குஷ்பு. நெருங்க வந்தது நெருங்காமல் போச்.

# சிம்மாசனத்தில் முத்து

'முத்து' படத்தில் ஒரு காட்சி. ரஜினி ஒரு சண்டைக் காட்சியில் அடியாட்களை நொருக்கித் தள்ளிவிட்டு, ஸ்ரைலாக ஒரு ஆசனத்தில் அமர்ந்து கால் மேல் கால் போட்டுக் கொண்டிருக்கிறார். அது ஒரு சிம்மாசனம். தமிழக அரசியலில் ரஜினி குதிப்பாரா மாட்டாரா என்று சர்ச்சைகள் கிளப்பியுள்ள நேரத்தில் இப்படியொரு காட்சியில் ரஜினி நடித்தது ஏன்? இக் காட்சியை விளக்கிய இயக்குநர் ரவிக்குமார் ரஜினிமிடம் 'ஓ.கே' கேட்டாராம். இக்காட்சியை எடுக்கலாம். பின்னர் தேவைப்பட்டால் மாற்றிவிடலாம் என்று சொல்லிவிட்டு நடித்துள்ளாராம் ரஜினி. புதிர் போட்டு ரொம்பத்தான் குழப்புகிறார் ரஜினி.

# 50 வது படம்

விஜய்-சங்கவி நடித்த 'விஷ்ணு' திரைக்கு வந்து 25 நாட்களை எட்டப்போகிறது. அடுத்து வசந்த வாசல் வரப்போகிறது. சந்திரலேகா ரெடியாகிறது. 'கோயம்முத்தூர் மாப்பிள்ளை' வளருகிறது. இதற்கிடையே 'புதுவசந்தம்' புகழ் விக்கிரமன் இயக்கும் 'பூவே உனக்காக' படத்திலும் நடித்துக்கொண்டிருக்கிறார் விஜய். நாகேஷ், சின்னிஜெயந்த், சார்லி, ஆகியோரும் நடித்துவருகின்றனர். இசை அமைப்பாளர் எஸ்.ஏ.ராஜ்குமாருக்கு 50 வது படம் 'பூவே உனக்காக'.

# இப்போது ஐம்பது லட்சம்

சல்மான்கான்-மாதுரி டிக்ஷித் நடித்த 'ஹம் ஆப் கே ஹெயின் கோன்' மகா வசூலை அறுவடை செய்திருக்கிறதல்லவா. விடுவாரா மாதுரி டிக்ஷித். தனது சம்பளத்தை 50 இலட்சமாக உயர்த்திவிட்டார். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்கிறார்.



பிரபு தேவா-ஷில்பாஷெட்டி
படம்-மிஸ்டர் ரோமியோ

# மினி சினி

* ரஜினியின் 'பாட்ஷா', 'பெத்தராயுடு' போன்ற படங்கள் தெலுங்கில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருப்பதால், ரஜினி தமிழில் நடித்த 'பாண்டியன்', 'வீரா' ஆகிய படங்கள் தெலுங்கிற்கு மொழி மாற்றப்படுகின்றன.

* கமல் தயாரித்து நடித்து வரும் 'குருதிப்புனல்' படத்திற்கு முதலில் 'துரோகி' என்று பெயரிடப்பட்டது என்பது தெரிந்ததே இப்போது அந்தப் பெயரையும் மாற்றி விட்டு 'ரத்தத்திலகம்' எனப் பெயரிட முடிவு செய்திருக்கிறார் கமல்.

* கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் 'காதல்தேசம்' படத்தின்மூலம் தமிழில் அறிமுகமாகிறார் இந்தி நடிகை தபு. 'காதல் தேசம்' வருவதற்கு முன் தபு நடித்துள்ள மலையாளப் படமான 'காலாபாணி' தமிழில் 'சிறைச்சாலை' என்ற பெயரில் வருகிறது.

* பிரபு-சங்கீதா ஜோடியாக நடிக்க, டி.சிவா தயாரிக்கும் புதிய படத்திற்கு 'சீதனம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. 'பசும்பொன்' படத்திற்கு கதை-வசனம் எழுதியுள்ள சீமான் இந்தப்படத்தை இயக்குகின்றார்.

* தமிழ், தெலுங்கு மொழிப்படங்களில் நடித்து வந்த ரோஜா, 'தி எம்பரர்' என்ற படத்தின் மூலம் மோகன்லாலுக்கு ஜோடியாக மலையாளப் படவுலகில் காலடி எடுத்து வைத்துள்ளார். இப்படத்தை பிரபல மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷ் இயக்குகிறார்.

* ராம்கோபால் வர்மாவின் 'ரங்கீலா' படத்தைத் தொடர்ந்து சுபாஷ்கய்யின் ஷிகார் பிரியதர்ஷனின் 'கபிநாகபி' ஆகிய இந்திப் படங்களுக்கு இசையமைத்து வரும் ஏ.ஆர்.ரகுமான், புதிதாக இரண்டு இந்திப் படங்களுக்கு இசையமைக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

* சரத்குமார் தற்போது நடித்து வரும் 'ரகசிய பொலிஸ்' படத்திற்கு முதலில் வைக்கப்பட்ட பெயர்களில் ஒன்று 'எச்சரிக்கை'. இந்தப் பெயரில் தற்போது ஒரு கிரைம் கலந்த படமொன்று தயாரிக்கப்படுகிறது. கதாநாயகனாக விக்னேஷ் நடிக்கிறார்.

* கன்னட சுப்பர் ஸ்டாரினி மாலாஸ்ரீ கன்னடத்தில் நடித்து தமிழில் மொழி மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் 'லேடி கமிஷனர்' படத்தில், 'தாய்க்குலமே தாய்க்குலமே' படத்தின் இரண்டாவது கதாநாயகியாக அறிமுகமாகும் வினய் பிரசாத் நடித்துள்ளார்.

* 'வில்லாதி வில்லன்' படத்தில் 'எடிசன்' என்ற பெயரில் ஒரு வேடத்தில் நடித்திருந்த சத்யராஜ், தற்போது புதிதாக அவர் தொடங்கவிருக்கும் பட நிறுவனத்திற்கு 'எடிசன் ஆர்ட்ஸ்' என்று பெயர் வைத்திருக்கிறார்.

* 'தேடி வந்த ராசா' படத்தைத் தொடர்ந்து இரண்டு படங்களைத் தயாரித்து நடிக்க இருக்கிறார் ராமராஜன். அவற்றில் ஒன்றைத் தானே இயக்கவும் திட்டமிட்டிருக்கிறார்.



மீராபக்ஷி

# ராஜாவுக்கு சான்ஸ்

இயக்குநர் பாரதிராஜாவால் அறிமுகம் செய்யப்பட்டவர் ராஜா. அழகிருந்தும், திறமையிருந்தும் பிரபல ஹீரோவாக மாறமுடியவில்லை.

தற்போது புதிய படம் ஒன்றில் கதாநாயகனாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ஜோடியாக நடிப்பவர் சங்கீதா. படத்தின் பெயர் 'நிலம் பார்க்கும் நிலவு' ஆனந்தராஜ், சாருஹாசன் ஆகியோரும் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். 'வைகறைப் பூக்கள்' என்னும் படத்தில் ராஜா கதாநாயகனாக நடித்து வருகிறார். ஜோடி 'கருத்தம்மா' புகழ் ராஜஸ்ரீ.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

## அன்புள்ள அம்மாக்களுக்கு

### உங்கள் குழந்தை நலமா?

குழந்தை பிறந்த அரை மணி நேரத்திற்குள் கொடுக்கும் தாய்ப்பால் தான் சகல விதமான தொற்றுநோய்களுக்கும், வியாதிகளுக்கும் மிகச் சிறந்த எதிர்ப்புப் பொருள். குழந்தை பிறந்த பின் சில நாட்கள் மட்டுமே உருவாகும் சீம்பாலில் தான் விட்டமின்கள், நோய் எதிர்ப்பு வினையூக்கிகள் போன்றவை அதிக அளவில் இருக்கின்றன.



இவை குழந்தைகளைத் தாக்கும் தொற்று நோய்கள் மற்றும் வியாதிகளில் இருந்து பாதுகாக்கின்றன. சீம்பால் குழந்தைகளுக்கு ஏற்படும் மஞ்சள் காமாலை நோயையும் தடுக்கிறது.

தாய்ப்பால் மாதத்திற்கு மாதம் மாறுபடுகிறது. மேலும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு முறை பாலூட்டும் போதும் குழந்தைக்குத் தேவையான போஷாக்குகளைத் தரும் அளவுக்கு நிறைவுடையதாக மாறுகிறது. தாய்ப்பாலில் தான் புரதம், கொழுப்பு அமிலங்கள், மூளை வளர்ச்சிக்குத் தேவையான பல பொருட்கள் அதிகமாகக் கிடைக்கின்றன.

தாய்ப்பால் அல்லாத ஊட்டச்சத்து முறையில் (புட்டிப்பால்) வளரும் குழந்தைகளின் நுண்ணறிவுத் திறமையை விட, தாய்ப்பால் குடிக்கும் குழந்தையின் நுண்ணறிவுத்திறன் அபாரமாக இருக்கும்.

குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தை கூட தாய்ப்பாலினால் அதிக அளவு நன்மையடைகிறது. இயற்கையிலேயே அந்தக் குழந்தையின் வளர்ச்சிக்கும், குறைப் பிரசவத்தை ஈடுசெய்யும் வகையில் துரிதமான போசாக்குகளைத் தரும் வகையிலும் அதிக அளவு புரதமும், முக்கிய சத்துப் பொருட்களும் தாய்ப்பாலில் அடங்கியுள்ளன.

தாய்ப்பால் குடிக்க இயலாத நிலையில் இருக்கும் குறைப் பிரசவக் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலை, சிறிய கப் அல்லது கரண்டி மூலம் ஊட்டலாம்.

குழந்தையின் முதல் ஆறுமாதகால வாழ்க்கையில் அவைகளுக்குத் தாய்ப்பாலைத் தவிர வேறு உணவுகள் அல்லது குடிப்பதற்கான பொருட்கள் எதுவும் தேவைப்படாது. குழந்தைகளுக்குச் சூடான அல்லது வறட்சியான சமயங்களில் கூடத் தண்ணீர் தேவைப்படாது. ஏனெனில் தாய்ப்பாலில் 80 சதவிகிதம் தண்ணீர் இருக்கிறது.

கருவில் குழந்தை சற்றுப்பாதுகாப்பாகவும், கதகதப்பாகவும் இருக்கும். ஆரம்ப காலத்தில் தொடுவுணர்ச்சிகளும், பாலூட்டும் போதும், தாயைப் பார்க்கும் போதும் அதிகமான நெருக்கம் ஏற்படுவதோடு குழந்தைக்குப் பாதுகாப்பான உணர்வையும் அந்த நெருக்கம் ஏற்படுத்துகிறது.

சிசேரியன் சிகிச்சைக்குப் பிறகும் ஒரு பெண், தன் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டலாம்.

குழந்தை பிறந்த 4 முதல் 6 மணி நேரத்திற்குள் அறுவைசெய்து முடித்த உடனேயே குழந்தைக்குப் பால் ஊட்டலாம்.

பிரத்தியேகமாக, பாலூட்டும் தாய்மார்களுக்கு மாதவிடாய்களும், கருத்தரிக்கும் சூழ்நிலையும் தள்ளிப்போடப்படுகிறது. இது இயற்கையான ஒரு கருத்தடை முறையாகும். குழந்தை பிறப்பதற்கு இடைவெளியையும் இது ஏற்படுத்துகிறது. அதிகம் பால் கொடுப்பதால், அடுத்தமுறை கருத்தரிப்பதற்கு முன் இழந்த சத்துக்களை தாயால் திரும்பப் பெற முடிகிறது. பாலூட்டும் தாய்மார்களுக்கு மார்பு புற்றுநோய்களும், கருப்பைப்புற்றுநோய்களும் வாழ்வில் பெரும்பாலும் ஏற்படாது.

# டேக் இட் ஈஸி அன்னாசி

அன்னாசிப் பழம் என்றாலே அநேகருக்குப் பிடிக்காத ஒன்று. இது அதிக உஷ்ணத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்று: இதனால் உடலுக்கு ஊறுவிளைவிக்கும் என்ற கருத்தை மக்கள் கொண்டுள்ளனர். உண்மையில் இது உடலுக்கு அதிக உஷ்ணத்தை ஏற்படுத்தக்கூடியது அல்ல.

அன்னாசிப் பழத்தில் விட்டமின் 'பி' உயிர்ச்சத்து அதிக அளவில் உள்ளது. இது உடலில் இரத்தத்தை விருத்தி செய்வதாகவும், உடலுக்குப் பலத்தைத் தருவதாகவும் இருப்பதோடு பலவியாதிகளைக் குணப்படுத்தும் அரிய மருந்தாகவும் பயன்படுகிறது.

தேகத்தில் போதுமான இரத்தம் இல்லாமல் இருப்பவர்களுக்கு அன்னாசிப் பழம் ஒரு சிறந்த டொனிக். நன்றாகப் பழுத்த அன்னாசிப் பழத்தை சிறு சிறுதுண்டுகளாக வெட்டி, வெய்யிலில் தூசி படாமல்



உலர்த்தி, வற்றலகலாக செய்து வைத்துக் கொள்ளவும்.

தினமும் படுக்கச் செல்வதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாக ஒரு டம்ளர் பாலில் 5 அன்னாசி வற்றல்களை ஊற வைத்து, பின் படுக்கச் செல்லும் போது ஊறிய வற்றல்களை சாப்பிட்டு முடித்து, பாலையும் குடித்து விட வேண்டும்.

இவ்வாறு சுமார் 40 நாட்கள் தொடர்ந்து செய்தால் உடலில் நல்ல இரத்தம் உற்பத்தியாகும். உடல் சக்தி பெறும். பித்த சம்பந்தமான கோளாறுகள் நீங்கும். அன்னாசிப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை நோய் குணமாகும். கோடை காலங்களில் அன்னாசிப் பழத்தினை சர்பத் போட்டுக் குடித்தால் நாவரட்சி அகன்று தாகம் தணியும். இவ்வளவு பயனுள்ள அன்னாசிப் பழத்தினை முடிந்த அளவு உணவாகப் பயன்படுத்திப் பலன் பெறுவோம்.

## சர்ச்சைக்குரிய பெண்மணிகள்



# டயானாவின் புது நண்பர்கள்

இளவரசி டயானாவும், இளவரசர் சார்ள்சும் மனக்கசப்பை மறந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்தன.

அந்தச் செய்திகளை நெத்தியடியாக மறுப்பதுபோலப் புதுச் செய்திகள் கிளம்பியிருக்கின்றன.

தற்போது டயானாவின் வாழ்க்கையில் இரண்டு ஆண் நண்பர்கள் மூக்கை நுழைத்திருக்கிறார்களாம்.

ஒருவர், இங்கிலாந்தின் 'ரக்பி' விளையாட்டு அணித் தலைவர் வில் கர்லின்.

இவர்தான் டயானாவுக்கு உடற் பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்து வருகிறாராம். எனவே, நெருக்கம் அதிகம் என்கிறது ஒரு செய்தி.

மற்றொரு புதிய நண்பர் டங். ஹொங் ஹொங் நாட்டு கோடிசுவரர். வெளிநாடுகளுக்கு டயானா போனால் அவரோடு தான் சுற்றுகிறார் என்கிறது ஒரு செய்தி.

இந்த இரண்டு பேர் தவிர, ஸ்டார் ரி.வி உரிமையாளர் ரூபர்ட் முர்டோசும் டயானாவின் நட்பைப் பெற்றிருக்கிறாராம்.

# பொறுத்திருக்கும் சோனியா பூமியாள்வாரா?

சர்ச்சைக்குரிய மற்றொரு பெண்மணி சோனியா காந்தி.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட பின்னர் சோகம் என்ற கூட்டுக்குள் தன்னை அடைத்துக் கொண்டவர் சோனியா.

பின்னர் மெல்ல, மெல்ல வெளியே வந்து, ராஜீவ்காந்தியின் நினைவை நிலைநிறுத்தும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

அவரை அரசியலுக்கு இழுக்க காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்கள் பலர் ஒற்றைக் காலில் நிற்கிறார்கள்.



பிடிகொடாமல் இருந்துவரும் சோனியா அண்மையில் ராஜீவ் காந்தியின் சொந்தத் தொகுதிக்கு 'விசிட்' அடித்தார்.

ராஜீவ் கொலை விசாரணையில் வேகம் சுத்தமாக இல்லை என்று கூட்டத்தில் பேசினார்.

அவ்வளவுதான் ஆடிப்போனார் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ். "விசாரணை ஒழுங்காக நடக்கிறது; இந்த வருட இறுதிக்குள் ஒரு முடிவு கண்டுவிடுவோம்" என்று அறிக்கை விட்டார்.

ராஜீவ் கொலை விசாரணை குறித்து சோனியா பகிரங்கமாக கருத்துச் சொன்னது நரசிம்மராவின் எதிரிகள் முகாமில் பலத்த சந்தோசத்தைக் கொடுத்திருக்கிறது.

சோனியா அரசியலுக்கு வரும் அறிகுறி தெரிவதாக அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

சோனியாவோ தென்னாபிரிக்காவுக்கு பிரியங்கா, ராகுல் சகிதம் பறந்து போய் விட்டார்.

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவின் அழைப்பை ஏற்றுச் சென்ற சோனியா அங்கும் கூட்டங்களில் உரையாற்றியிருக்கிறார்.

"ஜனநாயகம் வந்தபின்னர் எப்படியிருக்கிறீர்கள் என்று காண வந்தேன்" என்று தென்னாபிரிக்க மக்கள் மத்தியில் உரையாற்றியிருக்கிறார்.

ஒரு தலைவிக்குரிய ஆளுமையை சோனியா பெற்றுவருவது, அரசியல் பிரவேசத்துக்கு அவர் மெல்ல மெல்லத் தயாராகிறாரோ என்ற சந்தேகத்தை தூண்டிவிட்டிருக்கிறது.

சோனியா அரசியலுக்கு வந்தால் செல்வாக்கு நிச்சயம் என்று கருத்துக் கணிப்புக்கள் கூறிக்கொண்டிருக்கின்றன.

வாய்ப்பு வந்து வாசல் கதவைத் தட்டும் போதும், புன்னகையோடு பொறுமைசாதிக்க எல்லோராலும் முடியாது. சோனியாவால் முடிகிறது என்பதுதான் ஆச்சரியம். அதுதான் அவரது பலமும். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்பதை சோனியா நிரூபித்து விடுவாரோ?

# கனவுகளின் பலன்கள்



கனவுகளை வைத்து சில முடிவுகளுக்கு வரலாம் என்று ஓர் ஆராய்ச்சி கூறுகிறது. உதாரணமாகச் சில தகவல்கள்:

**சினிமா பார்ப்பதுபோல கனவு கண்டால்:**

வாழ்க்கைப் பிரச்சனையில் இருந்து தப்பிக்க முயல்பவர் என்று அர்த்தம்.

**நிர்வாணமாக பிறர் முன் நிற்பது போல கனவு கண்டால்:**

நிஜ வாழ்க்கையில் வெளிவேசங்களை வெறுப்பவர் என்று அர்த்தம்.

**உயரமான இடத்தில் ஏறமுயல்வது போல கனவு கண்டால்:**

வாழ்க்கையில் முன்னேறும் வெறி வந்துவிட்டது என்று பொருள். தோல்விக்கான காரணங்களை அலசிப்பார்க்க மறைமுகமான கனவுக் கட்டளை என்றும் சொல்லலாம்.

**திருடுவதுபோலக் கனவு கண்டால்:**

தனிமனித நியாயப்படி சரி என்று நினைத்துக் கொண்டு குற்றமுள்ள காரியத்தை செய்ய நினைக்கிறீர்கள் என்று அர்த்தம்.

**எவருடனாவது சண்டை போடுவதாகக் கனவு கண்டால்:**

அன்றாட வாழ்கையில் போராடி வருகிறீர்கள் என்று பொருள்.

## சாதனைப் பெண்

### இது மூன்றாவது முறை



அமெரிக்காவைச் சேர்ந்த ஷிர்லே-ஜேம்ஸ் தம்பதியினர் இரட்டைக் குழந்தைகளைப் பெறும் விஷயத்தில் சாதனை படைக்கப் போகிறார்கள்.

இந்தத் தம்பதி ஏற்கனவே இரண்டு தடவை இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுள்ளனர்.

தற்போது மூன்றாவது முறையாக கர்ப்பமாக இருக்கிறார் ஷிர்லே. இரட்டைக் குழந்தைகள்தான் தற்போதும் கருவறையில் இருப்பதாக சொல்லி விட்டார்கள் டாக்டர்கள். மூன்று தடவை தொடர்ச்சியாக இரட்டைக் குழந்தைகளைப் பெறுவது அபூர்வ சாதனையாகும். இதனால் ஷிர்லே உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம்பிடிக்கப் போகிறார். சரி, நாலாவது தடவை எப்படி? "இனி அந்த முயற்சியே கிடையாது. கருத்தடை செய்யப் போகிறேன்" என்கிறார் ஷிர்லே.

## அழகம்மா அழகம்மா

பீட்ரூட்டை துண்டாக வெட்டி, அன்றாடம் உதடுகளில் தேய்த்து வந்தால் உதடுகள் ஒரு வித சாயமும் பூசாமலேயே கவர்ச்சிகரமான இயற்கை வண்ணத்தைப் பெறும்.

வேக வைத்த உருளைக்கிழங்கை மாவாக அரைத்து காலையில் குளிக்கச் செல்லுமுன் அப்பிவைத்திருந்து, 20 நிமிடங்களுக்குப்



பிறகு தேய்த்துக் குளித்து விட்டால் முகம் பளபளக்கும்.

கண்களில் சுருக்கம் விழுந்து அழகு கெடாமல் இருக்க ஒரு எளிய வழி...... வாரத்திற்கு ஒரு தடவை கண்களில் இரண்டொரு துளி சுத்தமான தேங்காய் எண்ணையை விட்டுக்கொள்ளுங்கள்.

## ஸ்போட்ஸ்

# ஒரு வித்தியாசமான வீராங்கனை

## நம்பிக்கையை தும்பிகையாக்கும் மோனிகா

டென்னிஸ் போட்டிகளில் மோனிகா செலஸ் களத்தில் இறங்கினால் போதும், எதிர்த்து ஆடுபவருக்கு வயிற்றில் புளிகரைத்தது போலாகிவிடும்.

13 கிரான்ட்சிலாம் போட்டிகளில் விளையாடிய மோனிகா அதில் 8 போட்டிகளில் வெற்றிபெற்றார்.

வெற்றிப் படிகளில் விரைந்தேறிய மோனிகாவை இரண்டு வருடங்களுக்கு முன்னர் கத்தியால் முதுகில் குத்தினார் ஒரு வெறியர். அவர் ஸ்டெபி கிராப்பின் பரமரசிகர்.

இரண்டு வருடமாக கத்திக்குத்துப்பட்ட காயம் ஒருபுறம், அதனால் ஏற்பட்ட மனக்காயம் மறுபுறம் என்று இரண்டுக்கும் சேர்த்து ஓய்வெடுத்தார் மோனிகா செலஸ்.

மோனிகா மீண்டும் ஆட வருவாரா? வந்தாலும் முன்பு போல தூள் கிளப்ப முடியுமா? என்றெல்லாம் டென்னிஸ் ரசிகர்கள் மத்தியில் கேள்விகள்! கேள்விகள்! கேள்விகள்!

வந்தார் மோனிகா. முன்பைவிட உடம்பில் சதைபோட்டு குஷ்பு மாதிரி இருந்தார்.

கனடாவில் ரொரண்டோ மைதானத்தில் இறங்கினார். எதிர்த்து ஆடியவர் டென்னிஸ் உலக கவர்ச்சிப்புயல் சபாட்டினி. மோனிகாவின் ஆட்டத்தால் சபாட்டினி வெற்றியை நழுவவிட்டார். இறுதி ஆட்டத்திலும் மோனிகாவே வென்றார்.

டென்னிஸ் இரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி. மோனிகாவால் முடியுமா? என்ற கேள்விக்கு 'முயன்றால் முடியும்!' என்று பதில் கிடைத்து விட்டது.

அடுத்து யூ.எஸ். ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடி வருகிறார் மோனிகா.



அனைவரது பார்வையும் அவர் மீது திரும்பியிருக்கிறது. இத்தனைக்கும் கத்திக் குத்துக்குப் பின்னர் 'தன்னால் முடியாது' என்று தனிமையில் அழுது கொண்டிருந்தாராம் மோனிகா. அவரது பயிற்சியாளர்தான் தன்னம்பிக்கை ஊட்டினாராம். மனநல மருத்துவரிடம் அழைத்துச் சென்று, "உன்னால் முடியும் மோனிகா" என்று மூளையில் பதியவைத்தார்களாம்.

விளைவு, தன்னம்பிக்கையே வெற்றியின் முதல்படி என்பதற்கு மற்றொரு உதாரணமாக மாறிக்கொண்டிருக்கிறார் மோனிகா செலஸ்.

ஸ்டெபி கிப்புக்கும், மோனிகாவுக்கும்தான் இனிப் போட்டி! டென்னிஸ் பிரியர்களுக்கு விறு விறுப்பான காட்சிகள் காத்திருக்கின்றன.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 03

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும்

தங்கமாலை பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

# தேன் கிண்ணம்

## எனக்குப் பிடித்தது?

மங்கைக்கு
மடல்
பிடிக்கும்!
▫▫
விண்ணுக்கு
விண்மீன்
பிடிக்கும்!
▫▫
சிரிப்புக்கு
சிறுநகை
பிடிக்கும்!
▫▫
சிற்றெறும்புக்கு
சிறுபாறை
பிடிக்கும்!
▫▫
சில்வண்டுக்கு
சிற்றின்பம்
பிடிக்கும்!
▫▫
இளங்காற்றுக்கு
இளங்கொடி
பிடிக்கும்!
▫▫
இளம் பிறைக்கு
உறைந்த பனி
பிடிக்கும்!
▫▫
முதுமைக்கு
வெண்மயிர்
பிடிக்கும்!
▫▫
மேகவண்ண
நிலவுக்கு
சாய வர்ணம்
பிடிக்கும்!
▫▫
இன்பம் துயிலும்
இரவுக்கு
மயில் தோகை
பிடிக்கும்!
▫▫
பௌர்ணமிக்கு
பொன்னாடை
பிடிக்கும்!
▫▫
நிறைமதிக்கு
நிழலற்ற
வெளி ஆகாயம்
பிடிக்கும்!
▫▫
கோடை மழைக்கு
தெரு மேடை
பிடிக்கும்!
▫▫
அன்னப் பறவைக்கு
பொய்கை மலர்
பிடிக்கும்!
▫▫
எனக்கு அவள்
இடை வெட்டு
நடை பிடிக்கும்!

**ஷஹிர்ஷா தாஸிம்**
**தர்கா நகர்.**

## மௌனம்!

தனிமையின்
'நிழல்'
**
சம்மதத்துக்கு அறிகுறியாக
இருக்கலாம்.....
தர்க்கத்தை வளர்க்க வைக்காத
தன்னையும் காட்டிக் கொடுக்காத
மகத்தான மருந்து!
**
காதல்
கண்கள்....
பேசிக்கொள்ள
இலக்கணம் வகுக்கப்படாத
அற்புதமான மொழி!
**
ஊடலிலிருந்து
கூடல் வரை
பொய்க் கோபம்....
நடந்து வந்த பாதை!
**
கண்ணீர் நதியின்
ஒப்பாரியை
சில நேரம்
கவிதைக்குள் கொண்டுவரும்
ஊடகம்!
**
ஏன்...
நிலா கூட
மௌனத்தின்
வடிவம் தானே!
**
என்னைப் பொறுத்தவரையில்
மௌனத்தின் மறு பெயர்
'அவள்'!

**கதிர்-பிட்டியகந்தை**

## தொலைதல்



சில யுகங்களின் பின்
இத்தேசம் பற்றிய
நெருடல்கள்
எனக்குள் காணமத்துப் போகும்!

நிரம்பி வழியும் அகதிகளும்
பின்னொரு நாளில்
கவனிப்பாரற்று
எங்கேயாயினும் செத்து மடியலாம்...!

பிணங்களை சுமந்து வரும்
என் கிராமத்து ஏரியில்
நானும் ஒரு மிதப்புக்கட்டையாய்
அன்றில்-
ஒரு சிறு வாழை மரமாய்
மிதந்து வரலாம்!

மினக் கெட்டு
இந்த யுத்தம் கூட
இறப்பெய்தி; பின் உயிர்க்கலாம்.

உயிர்களின் பெறுமதிக்கான
பற்றுச் சீட்டை
ஒரு கருங்குழவி
கிழித்துக் கொடுக்கலாம்!

என் தோழர்கள்
காம் பற்றிக் குலுக்கலில்
நகங்கள் உதிர்ந்து
பின் விரல்களும் பிடுங்கப்படலாம்.

நண்பனைக் கொல்வதற்கு
முன்னேறும்-
என் சிரிப்பினூடே
அவனும்
என்னைக் கொல்லும்
முடிவுபற்றி தீர்மானித்திருப்பான்!

**கன்ஸியா**

## முகவரி



பெயர்: வி.சுதாகர்
பிறந்தது: அக்கரைப்பற்று-அம்பாறை மாவட்டம்.
வயது: புகைப்படத்தைப் பார்த்துக் கணித்துக் கொள்ளலாம். (அதற்காக பரிசு எதுவும் எதிர்பார்க்க வேண்டாம்)
தொழில்: G.A.Q படித்துக் கொண்டிருக்கிறார்.
காதல் அனுபவம்: கவிதைகளைப் படித்துத் தீர்மானித்துக்கொள் ளலாம்.
பொலிசி: டேக் இட் ஈஸி!
நேசிப்பது: கடவுளை- உறவுகளை- முரசை.
விரும்புவது: எழுதுவதை
முரசில் பிடித்தது: அனைத்தும்! குறிப்பாக தேன்கிண்ணம்.

### என்னங்க சௌக்கியமா?

முரசில் தொடர்ந்து ஆக்கம் வழங்கும் வளர்ந்துவரும் படைப் பாளிகள் தம்மை அறிமுகம் செய்ய ஆவலாயின், முரசு களம் தரும்.

ஆர்.

## கொஞ்சம் இருங்க மச்சான்

வேலவெட்டி தனை முடிச்சு
வேர்வையது தான் கலைய,
மாலபட்ட வேளையில
மனசு தொட்ட ஒரு குளிப்பு!
••
தேத்தா மரத்தடியில்,
தெரியாம ஒளிஞ்சு நிண்டு,
பாத்து என் அழகில்,
பசித்த்த சின்ன மச்சான்!
••
புத்தி தெரிஞ் செனக்குப்
போகவில்ல ரெண்டு மாசம்
இத்தன அவசரமா....?
இருங்க மச்சான் கொஞ்சக்காலம்!
••
காலம் நெருங்கி வந்தா
கைபிடிக்க ஏலும்மச்சான்
ஆலயடிப் பிள்ளயாரை
அனுதினமும் கேட்பன் மச்சான்!
••
'ஈச்சந் தீவு' வயல்
இந்த முறை விதைக்கயில்ல
சாப்பாட்டு நெல்லுக்கூட
சத்தியமா இல்ல மச்சான்!
••
சம்மதத்த கேட்டீங்களே,
சந்தேகமா எந்தன் மேல?
மண்ணுக்குள்ள போகு மட்டும்-
மாறாதிவள் சொந்தப் புத்தி!
••
கலியாணம் கட்டு றெண்டா,
'காளிராசா' மச்சானத்தான்
புலிவந்து தடுத்தாலும்,
போடும் மால உங்களுக்கே!

**ஜீ.மோகநேஸ்வரி-ஈச்சந்தீவு**

## ஆயுள் கைதி நிரபராதியாவாளா?



நீ இங்கு
வரப்போவதாக
வசந்தம் சொன்னது!
–o–
இந்தப்
பாலைவனம்
பசும் பட்டாடை
புனையப் போகிறதா?
–o–
சாவின் விளிம்பில்
பாதங்கள்
தரித்து நிற்பவளுக்காகச்
சவப்பெட்டி
சுமந்து வருவாயா?
–o–
என் தலைக்கு மேலே
தொங்கும்
தூக்கினைக்
கணையாழியாக
மாற்றுவாயா?
–o–
பரிவாரம் சூழ
நீ....
புறப்பட்டு வரவிருப்பதை எண்ணி
பியந்து போன மனம்
பூரிப்பில் ஆடுகிறது!
–o–
ஏமாற்றமாய்ப் போனால்
இந்த நாட்டியத்தின்
இறுதியில்
என்னுயிரே
அறுந்து விழும்!
–o–



ரோஜாவே...
முள் ஏந்தி வராதே!
என் கண்ணீரைத்
தடுத்து நிறுத்த
முத்தங்கள்
சுமந்து வா!
–o–
ஏராளமாக
ஒத்தடங் கொடுக்கக்
கைக்குட்டைகள்
கொண்டு வா!
–o–
அவர்களோடு
நீயும் இங்கு வா!
பேச்சு வார்த்தைகளும்
இறுதித் தீர்வும்
பெரியோர் கையில் ...
ஓர் சமாதானக்
குழு போலவாவது
சகாக்களோடு
சமூகம் கொடு!

**செல்வி.பஹீமா ஜஹான்**
**ஸவாஹிர்**
**மெல்சிரிபுர.**

## பதினேழு வசந்தக்காரி

கிளிகள்
ஆரம்பித்து வைத்த
ஈரமான இருட்டு
என்–
கண்ணுக்குள் விழுந்து
கரிக்கின்றது.
++
நிலா வருவதற்கு
நேரமிருக்கு.
++
அதற்குள்
உன்னைத் தேடவேண்டிய
சூழ்நிலை.
++
இருட்டுக்குள்
சிக்கி...
ஒரு கம்பத்தில்
முட்டிக் கொண்ட
நான்–
பவுடர் சிறையிருந்த
உன்–
புத்தகத்திற்குள் புகுந்து
முகம்
கழுவப்பட்டேன்.
++
எனக்குச் சில
என்றது.
++
அதற்குள்
உன்
தாவணித்தலைப்பு
காணாமல் போய்விட்டது.
++
ஏனென்றால்
நீ
பர்தாவும் கப்டானும்
அணியும்
பதினேழுவசந்தக்காரி

**பௌர்ணமிநிலா-பொத்துவில்**

## மனிதனே...



மனிதனே ...
எழுந்து வா!
எழுந்து முடங்கிய
மனித நேயத்தை
இழுத்தெடுப்போம்!

தேசமெங்கும்
நாசக்கொடியோடு
படர்ந்திருக்கும்
விரோதக்களையையும்
ஒன்று சேர்த்து
பெயர்த்தெறிவோம்!

அகால
இறப்புக்களை
மண்டியிடவைத்து
மனித உயிர்களை
மீட்டெடுப்போம்!

கறுத்த பொழுதுகளுக்குள்
கண்ணீர் விடும்
மனிதச் சிலைகள்
மீட்புப்பெறட்டும்!

தேசத்துக்குள் விழும்
நாசங்களை
வேட்டை செய்வோம்!

குருதிப் புனலால்
புவி– நனைந்து
புனிதமிழந்தது போதும்!
எழு...
நம்
மண்காப்போம்!

**ஹப்புத்தளையூர்-எப்.லெனாட்குமார்**



## இந்த வாரம் உங்கள் பலன்
(10.09.95 முதல் 16.09.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்-தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| புதன்- உறவினர் உதவி, மனப்பயம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், வீண் கவலை. | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் நட்பு, துயர் நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய் அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் நிலை மந்தம், பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்-துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய நட்பு, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| வெள்ளி- பொருள்வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| சனி- அந்நியர் பகை, கௌரவக் கேடு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனக்கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் அலைச்சல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வியாழன்- காரிய சித்தி, கௌரவம். | காலை 6 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், மனக்கவலை. | பி.ப. 1 மணி |
| சனி- ஆடம்பரச் செலவு, பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, காரிய சித்தி . | காலை 6 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பயனற்ற செயல். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- புதிய நட்பு, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் நட்பு. | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| செவ்வாய்-தொழில் மந்தம், கடன் படல். | மு.ப. 9 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி-அந்நியர் உதவி, பயனற்ற செயல். | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள் செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| சிம்மம் | - சூரியன் |
| கன்னி | - புதன்.வெள்ளி |
| துலாம் | - இராகு, செவ்வாய் |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

சந்திரன்-கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச்செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- புதிய தொழில், காரிய சித்தி. | காலை 8 மணி |
| வெள்ளி- வீண் கவலை, தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, காரிய சித்தி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- துயர்நீங்கும், பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| செவ்வாய்-உயர்ந்த எண்ணம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மனப்பயம். | பி.ப 1 மணி |
| வியாழன்-தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி-இடமாற்றம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, கடன் படல். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- பயனுள்ளசெயல், கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்-அந்நியர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | காலை 7 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| சனி- வீண் செலவு, பொருள்நட்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் இழப்பு, மனக்கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், பணக்கஷ்டம். | பி.ப. 2 மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், கடன் படல். | பகல் 12 மணி |
| வியாழன்- பொருள் பேறு, பயனற்ற செயல். | காலை 7 மணி |
| வெள்ளி-உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- அந்நியர் பகை, கௌரவக் கேடு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பணவரவு. | மு.ப. 9 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் மனஸ்தாபம், கௌரவம் குறைவு. | பகல் 11 மணி |
| புதன்- காரியத்தடை, மனக்கவலை. | காலை 7 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், கௌரவக் கேடு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, வீண்குறை கேட்டல். | மு.ப. 9 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- மனக்கவலை நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. 9 மணி |
| சனி- பயனற்ற செயல், உயர்ந்த எண்ணம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்-காரியக் கேடு, உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| புதன்- இனசனவிரோதம், மனக்வலை. | பகல் 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, துயர் நீங்கும். | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- புதிய நட்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6


படிப்பகம்



காற்றை யடைப்பது மனதாலே-இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையிலே,
சோற்றைப் புசிப்பது வாயாலே-உயிர்
துணிவுறுவது தாயாலே.

சுப்பிரமணிய பாரதியார்.



## எழுந்து போங்களேன்!

எருமைகளே எருமைகளே
எழுந்து போங்களேன்-சாலை
இருமருங்கும் நின்று கொண்டால்
எங்கே போவது?

எட்டி நின்று விரட்டுகையில்
எழுந்து நிற்கிறீர்-மெல்ல
தட்டி நின்று விரட்டுகையில்
தலையை அசைக்கிறீர்!

சற்றுலா வீதியென்றா
சுகமாக நிற்கிறீர்? - ஊரில்
வற்றியதோ குட்டையெல்லாம்
வழியை மாற்றினீர்!

தின்ன வரும் சுவரொட்டி
தீர்ந்து போச்சுதோ? - நெஞ்சில்
என்ன வைத்து இந்த மறியல்?
எழுந்து போங்களேன்!

கவிதாசன்.

## பாப்பா முரசு சிறு கதை

# ஆட்கொல்லி

காட்டின் வழியே நடந்து சென்று கொண்டிருந்த ஒரு துறவியின் கண்களில் புதையல் ஒன்று தென்பட்டது. பெரிய செப்புக்குடம் ஒன்றில் தங்க நாணயங்களும், தங்க நகைகளும் நிரம்பி வழிந்தபடி ஒரு மரத்தின் அடியில் கிடந்தன.

அதைப் பார்த்த துறவி திடுக்கிட்டு நின்றார். அடுத்த வினாடி ஏதோ பேயைக் கண்டவர் போல் அந்த இடத்திலிருந்து தலை தெறிக்க ஓட ஆரம்பித்தார்.

அப்பொழுது எதிர்த்திசையிலிருந்து இரண்டு பணக்காரச் சகோதரர்கள் தங்கள் வேலையாளுடன் வந்து கொண்டிருந்தனர்.

தலைதெறிக்க ஓடி வரும் துறவியைப் பார்த்த அவர்கள், துறவியைப் பார்த்து,


"ஐயா! எதற்காக இப்படி ஓடி வருகிறீர்கள்? ஏதேனும் காட்டு விலங்குகள் தங்களைத் துரத்துகிறதா?" என்று கேட்டனர்.

"இல்லை இல்லை. அதோ.... அந்த ஆலமரத்தின் அடியே ஒரு ஆட்கொல்லி கிடக்கிறது. அதைப் பார்த்துப் பயந்துதான் ஓடிக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி விட்டுத் தனது ஓட்டத்தைத் தொடர்ந்தார் துறவி.

அந்தச் சகோதரர்களும், அவர்களுடன் வந்த வேலைக்காரனும் ஆலமரத்தின் அடியில் வந்து புதையலைப் பார்த்தனர்.

அவர்கள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"அட புதையல்! இதைப் பார்த்தா அந்தக் கிழவன் ஆட்கொல்லி என்று பயந்து ஓடுகிறான்? பிழைக்கத் தெரியாதவன் போல் இருக்கிறது" என்றான் ஒரு சகோதரன்.



"பிழைக்கத்தெரியாதவன் மட்டுமல்ல, சரியான பைத்தியக்காரனாகவும் இருக்க வேண்டும்" என்றான் இரண்டாவது சகோதரன்.

"ஆமாம்! ஆமாம்! அவன் உண்மையாகவே ஒரு பைத்தியக்காரனாக இருக்க வேண்டும் எஜமான்" என்றான் அவர்களது வேலைக்காரன்.

இரண்டு சகோதரர்களும் தங்களது நம்பிக்கைக்குரிய வேலைக்காரனிடம் "மாரிமுத்து இந்தப் புதையலில் உனக்கும் பங்குண்டு. இதைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். நாங்கள் அருகில் இருக்கும் குளத்தில் குளித்து விட்டு வருகிறோம்!" என்று சொல்லி விட்டு அருகில் இருந்த குளத்தை நோக்கிச் சென்றனர்.

அவர்கள் ஆனந்தமாகக் குளித்துக் கொண்டிருந்த சமயம்.....,

நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் எனப் பேசப்பட்ட வேலைக்காரனான மாரிமுத்துவின் மனதில் அந்தப் புதையல் பேராசையையும், சபலத்தையும் ஏற்படுத்தி விட்டது.

அதன்படி தன் எஜமானர்களாகிய இரண்டு சகோதரர்களையும் கொன்றுவிட்டு அந்தப் புதையல் முழுவதையும் தானே சொந்தமாக்கிக் கொள்ள நினைத்தான்.

உடனே அருகில் இருந்த அரளிச் செடியிலிருந்து சில காய்களைப் பறித்து அதிலிருந்து விஷத்தன்மையுள்ள விதைகளை எடுத்தான். பிறகு அவற்றைக் கற்களால் தட்டி எஜமானர்கள் சாப்பிடுவதற்காகக் கொண்டு வந்திருந்த குழம்பில் கலந்து விட்டான். பிறகு ஒன்றும் தெரியாதவன் போல் அமர்ந்து கொண்டான்.

குளித்து விட்டு வந்த இரு சகோதரர்களும் தங்களது வேலைக்காரனைப் பார்த்து "மாரிமுத்து! நாங்கள் குளித்து விட்டோம். நீயும் குளித்து விட்டு வா. உணவருந்தி விட்டு புதையலை எடுத்துக்கொண்டு செல்வோம்" என்றனர்.

சிறிது நேரத்தில் இறக்கப் போகும் தனது எஜமானர்களின் கடைசி விருப்பத்தை நிறை வேற்றுவோம் என்று நினைத்துக் கொண்டு குளிக்கச் சென்றான் மாரிமுத்து.

அவன் குளத்தில் மூழ்கிக் குளித்துக் கொண்டிருந்த சமயம்-

'வேலைக்காரனுக்கும் ஒரு பங்கு கொடுக்க வேண்டுமே. அவனைக் கொன்று விட்டால் புதையல் எம் இருவருக்கும் தான்!' என்று ஏற்கெனவே திட்டம் தீட்டி வைத்திருந்த அந்த இரு சகோதரர்களும் பதுங்கிப் பதுங்கி குளத்திற்குச் சென்றார்கள்.

மாரிமுத்து நீரினுள் மூழ்கியிருந்த சமயம், இருவரும் குளத்தில் இறங்கி பாய்ந்து சென்று அவனை மேலும் நீரில் அமிழ்த்தினர்.

மாரிமுத்து துடித்தான். அவர்களோ விடுவதாய் இல்லை. மிகவும் மூர்க்கத்தனமாக மாரிமுத்துவை நீரினுள் அமிழ்த்தினார்கள். சிறுது நேரத்தில் மாரிமுத்து மூச்சுத் திணறி இறந்து விட்டான்.

"அப்பாடா ஒழிந்தான்" என்று சொல்லிக்கொண்டே இருவரும் புதையல் இருந்த இடத்திற்கு வந்தார்கள்.

இருவருக்கும் ஒரே பசி. உணவருந்தி விட்டு பிறகு புதையலை எடுத்துக்கொண்டு செல்லலாம் என்று முடிவு செய்த சகோதரர்கள், உணவு உண்ண பாத்திரத்தைத் திறந்தனர்.

குழம்பில் விஷம் கலக்கப் பட்டிருப்பதை அறியாத அவர்கள், அந்தக் குழம்பை, சோற்றில் விட்டுப் பிசைந்து சாப்பிட்டனர்.

சிறுது நேரத்தில்,

இருவரும் நுரையாய் வாந்தி எடுத்து, இறந்து போனார்கள்.

புதையலை, ஆட்கொல்லி என்று துறவி சொன்னது சரிதானே!

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப் படுகின்றன. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

'பாப்பா முரசு'
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 16.09.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 107
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 105

பரிசுக்குரியவர்:
அ.அ.முஹம்மத் அஸாம்
ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| கே. செந்தூரன்<br>திருத்துவ கல்லூரி, கண்டி. | சிவா திலீபன்<br>உவர்மலை, திருகோணமலை. |
| அ.ஜெனார்த்தனன்<br>கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்பு-04. | செ. சதீஸ்குமார்<br>5ம் வட்டாரம், துறைநீலாவணை. |
| ஏ.எஸ்.எம். இம்கான்<br>அல்-ஹம்றா வித்தியாலயம், தர்கா நகர். | நவ்பர் நபீஸ்<br>க/ஜப்பார் மத்திய கல்லூரி, கலகெதர. |
| எம்.ஜே. அமீன்<br>ஸாம் ஸாம் வீதி,மருதமுனை-03, கல்முனை. | எம்.எம். நிலோஜன்<br>சரிகமுல்ல, மொரட்டுவ. |
| வடிவேல பாரதி<br>மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | சா. முரளிதாஸ்<br>இராமகிருஷ்ண மிஷன் மகா வித், அக்கரைப்பற்று-0" |

## வாரம் ஒரு நாடு



### ஜேர்மனி

**தலைநகர்:** பொன்
**பரப்பளவு:** 3,57,020 சதுர கிலோமீற்றர்
**மக்கள்தொகை:** 8.06 கோடி
**மொழி:** ஜேர்மன்.
**எழுத்தறிவு:** 99%
**சமயம்:** கிறிஸ்தவம்.
**தனிநபர் வருமானம்:** 22,215 டொலர்.
**அமைவிடம்:** வடமத்திய ஐரோப்பாவில் அமைந்துள்ளது.வடகடல் மற்றும் பால்டிக் கடலில் கடற்கரைப் பரப்பைக் கொண்டுள்ளது. இதன் மேற்கே பெல்ஜியம், லக்சம்பேர்க் மற்றும் நெதர்லாந்தும்; வடக்கில் டென்மார்க்கும்; கிழக்கில் செக்கோஸ்லாவாக்கியாவும்; தென் கிழக்கில் ஒஸ்டிரியாவும்; தெற்கில் சுவிற்ஸர்லாந்தும்; தென் மேற்கில் ஃபிரான்சும் எல்லைகளாக அமைந்துள்ளன.
**வரலாறு:** உலகப் போருக்குப் பின் 1945இல் அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன், ஃபிரான்ஸ் எனும் நான்கு நாடுகளும், ஜேர்மனியை நான்கு பகுதிகளாக்கி ஆண்டன. 1948இல் பிரிட்டன், ஃபிரான்ஸ் மற்றும் அமெரிக்கா தங்களுடைய பகுதிகளுக்கு ஒரு மத்திய அரசை உருவாக்கத் தீர்மானித்தன. சோவியத் யூனியன் 1949ல் கிழக்கு ஜேர்மனியை தன்னுடைய பாகமாக்கிக் கொண்டது. 1955இல் மேற்கு ஜேர்மனி சுதந்திர நாடானது. கிழக்கு ஜேர்மனியில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி. 1989இல் மக்கள் மேற்கு ஜேர்மனிக்கு இடம்பெயரத் தொடங்கினர். தொடர்ந்து கடுமையான சட்டங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன. கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத்துவம் குறைந்தது. 1990 அக்டோபர் மூன்றில் கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிகள் ஒன்றிணைந்தன. புதிய பெயர் பெடரல் ரிபப்ளிக் ஒவ் ஜேர்மனி ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு) 1990இல் பொதுத் தேர்தல் நடைபெற்றது.
**பொருளாதாரம்:** தொழில் வளர்ச்சியில் உலகில் முதலிடத்தில் உள்ளது. இரும்பு, உருக்கு, வாகனங்கள், இயந்திரங்கள், கப்பல் கட்டுதல் போன்ற தொழில்கள் பெருவளர்ச்சியடைந்துள்ளன. கோதுமை, பார்லி முக்கிய விளைபொருட்கள். இங்குள்ள கரும்புக்காடுகள் உலகப்புகழ் பெற்றவை.

## அதிசயம் ஆனால் உண்மை!



★ இன்று பாவனையிலுள்ள கோடரி, பண்டைய காலத்தில் வாழ்ந்தவர்கள் பயன்படுத்திய மிருக வேட்டைக்கான ஆயுதங்களின் சாயலையே கொண்டிருக்கிறது.



★ மத்திய ஐரோப்பாவில் 30,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பெரிய மிருகங்களின் எலும்புகளால் குடிசைகளை அமைத்து மிருகங்களின் தோல்களால் வேய்ந்து அவற்றுள் வசித்து வந்துள்ளனர்.

★ முன்னாளில் வாழ்ந்த மனிதர் தங்களுடைய உணவுக்கான பச்சை இறைச்சியை தற்செயலாக நெருப்பில் வீசியிருப்பர். தீயில் வெந்த இறைச்சி பச்சை இறைச்சியைவிட உருசியாக இருந்தமையினால்தான் உணவு சமைத்து உண்ணும் பழக்கம் தோன்றியிருக்கலாம்.





★ மனித வர்க்கத்தின் மிக நெருங்கிய பிராணிகள் கொரில்லா (மனிதக்குரங்கு), சிம்பான்சி மற்றும் ஓராங்-உட்டான் என்பனவாக இருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது.

## ஒரு வரிச் செய்திகள்



★ சீன மொழியைக் கற்க வேண்டுமானால் முதலில் 1,200 குறியீடுகளைக் கற்க வேண்டும்.

★ மார்ச் 08ம் திகதியை ஒவ்வொரு வருடமும் மகளிர் தினமாகக் கொண்டாடுகிறார்கள்.

★ உலகெங்கும் ஏறக்குறைய 12 ஆயிரம் தொழுநோயாளர்கள் இருக்கிறார்கள்.

★ அயர்லாந்து, ஐஸ்லாந்து, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் பாம்புகள் கிடையாது.

★ ரோமானிய பேரரசர் ஜூலியஸ் சீசர்தான் பொதுமக்களுக்கு முதன் முதலாக பொது நூலகங்களை அமைத்தவர்.

★ உலகில் சணல் அதிகம் உற்பத்தி செய்யும் நாடு இந்தியா.

★ முதன் முதலில் சோதனைக் குழாய் குழந்தை பிறந்த ஆண்டு 1978.

★ 1914ல்தான் முதல் உலகப் போர் மூண்டது.

## செய்து பாருங்கள்

### வாழ்த்து மடல் (Greeting Card)



ஓர் அகலமான ட்ரேயை எடுத்து அதில் நிறைய தண்ணீர் ஊற்றுங்கள். இப்போது நான்கு அல்லது ஐந்து எண்ணெய் வர்ணங்களை (ஓயில் பெயின்ட்) அந்த ட்ரேயினில் ஊற்றி சிறு தடியால் கலக்குங்கள். வர்ணங்கள் கலந்தும் கலக்காமலும் நீரில் மிதக்கும். கடதாசி அட்டை ஒன்றை அதற்குள் வைத்து, வர்ணங்கள் அட்டையில் தோய்ந்தவுடன் எடுத்து உலர வையுங்கள். உலர்ந்ததும் அட்டையைப் பாருங்கள். பலவித டிசைன்களில் அழகாக இருக்கும். இவற்றை எடுத்து அளவாக வெட்டி உங்களுக்குப் பிடித்த வகையில் வாழ்த்து மடல் தயாரித்துக் கொள்ளலாம்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஒரு நிமிஷ நிசப்தம் 9

'சபரி...! சபரி...! நீ... நீங்க.. தப்பிச்சுட்டு வந்த தூக்குத் தண்டனை கைதியா...? அதான் ரோட்ல நடக்கும் போது ட்ராபிக் கான்ஸ்டேபிளை பார்த்தாக் கூட ஒதுங்கிப் போனீங்களா...?'

அபிநயா கன்னத்தில் கை வைத்து பெருமூச்சு விட்டாள்.

ஏதோ ஒரு கண்டத்திலிருந்து தப்பித்த உணர்வு மனசு பூராவும் இருந்தது. சபரியோட சாவைப்பத்தின கனமான துன்பம் மெல்ல கரைய ஆரம்பித்தது.

"அபிநயா...."

"ம்..."

"இந்தக் கொலையில் ஒரு பெண் சம்பந்தப்பட்டிருக்கான்னு போலீஸ் மோப்பம் பிடிக்க ஆரம்பிச்சுட்டாங்க... நீ கொஞ்ச நாளைக்கு வெளியே போகாதேம்மா..."

தலையாட்டினாள் அபிநயா.

....

□□

ஆனால்.....

மூன்றாவது நாளே-அபிநயாவைப் பத்தி விசாரிப்பதற்காக இன்ஸ்பெக்டர் கன்னைய பிரசாத் சந்தானகிருஷ்ணனைத் தேடிக் கொண்டு வந்தார்.

....

உடம்பு பூராவும் நடுக்க ரேகைகள் ஓடினாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் உதட்டுக்கு ஒரு புன் சிரிப்பைக் கொடுத்து "வாங்க இன்ஸ்பெக்டர்" என்றார் சந்தான கிருஷ்ணன்.

ஆபீஸ் அறையில் ஏ.ஸி. முழு வேகத்தில் செயல்பட்டாலும் வேர்த்தார்.

"ஐயாம் கன்னைய பிரசாத்... இன்ஸ் பெக்டர் ஆப் போலீஸ்..." கையை நீட்டினார் க.பி.

"ப்ளீஸ்ட் டு மீட் யூ...."

உட்கார நாற்காலியைக் காட்டினார் சந்தானகிருஷ்ணன்.

கையோடு கொண்டு வந்திருந்த ப்ரீப்கேஸை மேஜையின் ஓரமாய் வைத்துவிட்டு சந்தானகிருஷ்ணனை புன்னகையோடு பார்த்தார் கன்னைய பிரசாத்.

"மிஸ்டர் சந்தானகிருஷ்ணன் உங்க டாட்டர் பேர் அபிநயாவா...?"

"ஆமாம்...."

"அழகான பேரா வெச்சிருக்கீங்க...."

"தேங்க் யூ..."

"அபிநயா வீட்லதான் இருக்காளா....?"

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

"ஆ.... ஆமா...."

"அபிநயாவுக்கு துணிச்சல் ரொம்பவும் அதிகமா....?"

"வாட்டுயூ மீன் இன்ஸ்பெக்டர்?"

"துணிச்சல் இல்லாமே இருந்தா... மருதமலை ரோட்ல அந்த பொட்டு காட்டுல தன்னந்தனியா பாறைமேல உட்கார்ந்திட்டிருக்க முடியுமா.....?"

"இ..இ.. இன்ஸ்பெக்டர்..."

குமுறிக் கொண்டே எழுந்தார் சந்தான கிருஷ்ணன்.

"உட்காருங்க..." கையமர்த்திய கன்னைய பிரசாத் அவர் உட்கார்ந்ததும் கேட்டார். அந்நேரத்துக்கு அந்த இடத்துக்கு அபிநயா எதுக்காக போனா..?"

சந்தானகிருஷ்ணன் சுதாகரித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

"இன்ஸ்பெக்டர்! நீங்க யாரையோ போய் விசாரிக்க வேண்டிய கேள்வியெல்லாம் என்கிட்ட வந்து கேட்டிட்டிருக்கீங்க... எதுக்காக அபிநயாவைப் பத்தி விசாரிக்க வந்திருக்கீங்கன்னும் எனக்கு தெரியலை.... விபரத்தைச் சொன்னா பரவாயில்லை..."

கன்னைய பிரசாத் தோள்களைக் குலுக்கிக்கொண்டார்.

"உங்களுக்கு விபரம் தெரிஞ்சிருந்தாலும் தெரியாத மாதிரி கேட்கறீங்க . ஓ.கே. சொல்றேன். வேங்கடநாராயணா என்கிற சபரியை மருதமலை ரோட்ல யாரோ கொலை பண்ணியிருக்காங்க... கொலைக்கான காரணம் தெரியலை. கொலை செஞ்சது யார்ன்னு புரியலை.. கொலை நடந்த அன்னிக்கு ராத்திரி அந்த ஸ்பாட்டுக்குப் பக்கத்திலிருந்த ஒரு பாறை மேல ஒரு பொண்ணு உட்கார்ந்திட்டிருந்ததா ஆடு மேய்க்கிற மாதய்யன் சொல்லிருக்கான்.... அந்தப் பொண்ணு உங்க டாட்டர் தான்னு நான் சந்தேகப்படறேன். மிஸ்டர் சந்தான கிருஷ்ணன்! அபிநயா அன்னிக்கு ராத்திரி அங்கே இருந்தாளா...?"

சந்தானகிருஷ்ணன் வலுக்கட்டாயமாகச் சிரித்தார். "அபிநயா எதுக்காக அந்த இடத்துக்கு போகணும்...? நீங்க சொல்ற ராத்திரியில அவ வீட்டுலதான் இருந்தா..."

"பொய்?"

"இன்ஸ்பெக்டர்! இந்த கோயமுத்தூர்ல என்னை தெரியாதவங்க கம்மி. எல்லா சோஷியல் வெல்பேர் அஸோஸியேஷனிலும் மெம்பராவோ தலைவராகவோ இருக்கேன்.... நான் பொய் சொல்ற ஜாதியில்லை..."

"ஸாரி மிஸ்டர் சந்தானகிருஷ்ணன்; மறுபடியும் நீங்க பொய் சொல்றீங்க. நான் பொய் சொல்ற ஜாதியில்லைன்னு பொய் சொல்றீங்க. இனி மேலும் பொய் பேச நான் உங்களை அனுமதிக்கப் போறதில்லை... இது யாரோட டம்பப்பையின்னு சொல்ல முடியுமா?"

ப்ரீப்கேஸைத் திறந்து அந்த டம்பப் பையை வெளியே எடுத்தார் கன்னைய பிரசாத்.

சந்தானகிருஷ்ணன் நீளமான அதிர்ச்சிக்குப் போனார்.

டம்பப்பையை பார்த்த மாத்திரத்திலேயே புரிந்தது.

அது அபிநயாவின் டம்பப்பை.

கன்னைய பிரசாத் புன்னகைத்தார். "அவசரப்பட்டு இது அபிநயாவோட டம்பப்பை இல்லைன்னு அநாவசியமா பொய் சொல்லிடாதீங்க சந்தானகிருஷ்ணன்.. டம்பப் பைக்குள்ளே இருக்கிற வஸ்துவையும் ஒரு பார்வை பார்த்துடுங்க...."

டம்பப்பையை எடுத்து-ஜிப்பைப் பிரித்து அந்த வஸ்துவை எடுத்து மேஜையின் மேல் வைத்தார் கன்னைய பிரசாத்.

பிஸ்டல்-அபிநயா கையோடு கொண்டு போயிருந்த பிஸ்டல்.

இன்னும் அதிர்ந்தார் சந்தானகிருஷ்ணன்.

அவருடைய லைசென்ஸ்ட் பிஸ்டல்.

"இது உங்களோட பிஸ்டல் இல்லைன்னு சொல்லிட முடியாது சந்தானகிருஷ்ணன். இந்த பிஸ்டலோட நம்பரையும் லைசென்ஸ் நம்பரையும் கலெக்ரேட் ஆபீஸ்ல வெரிபை பண்ணின பிறகுதான் நான் உங்ககிட்ட வர்றேன்.. உங்க பேர்ல நீங்க லைசென்ஸ் வாங்கியிருக்கிற பிஸ்டல்"

சந்தானகிருஷ்ணன் சாக்பீஸாய் வெளுத்தார்.



கன்னைய பிரசாத் தொடர்ந்தார்.

"இந்த டம்பப்பையை அபிநய கொண்டு வந்திருக்கா. அவ உட்கார்ந்திருந்த பாறைத் திட்டுக்குப் பக்கத்துல இது கிடந்திருந்தது... ஆள் நடமாட்டம் இல்லாத அந்த பாறைப் பகுதியை இன்னிக்கு நான் பார்க்க கிளம்பின நேரம் நல்ல நேரம்.

இல்லைன்னா நாலைஞ்சு நாள் ஆகியும் யார் கண்ணிலேயும் படாத அந்த டம்பப்பை என்னோட கண்ணுல மட்டும் படுவானேன்..?"

"இ...இன்ஸ்பெக்டர்..." பேச்சு வராமல் சிரமப்பட்டார் சந்தானகிருஷ்ணன். கன்னைய பிரசாத் கேட்டார். "இப்ப... சொல்லுங்க... அபிநயா அந்த கொலை நடந்த ஸ்பாட்ல இருந்தாளா இல்லையா....?"

"இருந்தா..."

"இது அவளோட டம்பப்பைதானே?"

"ஆமா...."

"பிஸ்டல் உங்களோடது தானே?"

"ஆமா...."

"எல்லாத்தையும் ஒத்துக்கிட்டீங்க: இதையும் ஒத்துக்கிட்டா தேவலை சந்தான கிருஷ்ணன். அபிநயா எதுக்காக சபரியை கொன்னா....?"

"நோ... இன்ஸ்பெக்டர் அவ கொலை செய்யலை..."

கன்னைய பிரசாத் புன்னகைத்தார். "அவ கொலை செஞ்சாளா இல்லையான்னு கோர்ட் தீர்மானிக்கட்டும்" சந்தான கிருஷ்ணன்... வீறிட்டார். "இன்ஸ்பெக்டர் அபிநயாவை அரெஸ்ட் பண்ணி ஸ்டேசனுக்கு கொண்டு போய் அவமானப்படுத்திடாதீங்க.... அந்தக் கொலையை அவ செய்யலை...?"

"பின்னே யார்?"

"நான் தான்... இன்ஸ்பெக்டர்..." தலை குனிந்தார் சந்தானகிருஷ்ணன்.

கன்னைய பிரசாத் கண்களில் அதிர்ந்தார்.

"நீங்களா?"

"ஆமா இன்ஸ்பெக்டர்... அது ஒரு துரதிர்ஷ்டமான சம்பவம்..." என்று ஆரம்பித்து அபிநயா-சபரி கடத்தல் நாடக விபரம் முழுவதையும் சொன்னார் சந்தான கிருஷ்ணன்.

"எனக்கு அது நாடகம்ன்னு தெரியலை இன்ஸ்பெக்டர். நிஜமாகவே அபிநயாவை யாரோ கடத்திட்டு போயிட்டதா நினைச்சேன்... அவன் சொன்னபடியே பத்து லட்ச ரூபாயோடு போனேன். சூட்கேஸை பாலத்துக்கு கீழே வெச்சிட்டு கார்ல திரும்பினேன்.. இருநூறு மீற்றர் தூரம் வந்ததும் காரை ஒரு மரத்துக்குப் பின்னாடி நிறுத்திட்டு நான் என்னோட சைலன்சர் ரிவால்வரோடு இருட்டுல ஒளிஞ்சு பாலத்துக்குப் பக்கமா வந்தேன்... அதே சமயம் சபரியும் சூட்கேஸை எடுக்கிறதுக்காக பாலத்துக்கு கீழே போனான். அவனோட முழங்காலைப் பார்த்து சுட்டேன்... ஆள் கீழே விழுந்ததும் போலீசுக்கு கொண்டு போய் ஹேண்ட் ஓவர் பண்ண நினைச்சேன். ஆனா அந்த இருட்டுல குறி மாறிடுச்சு இன்ஸ்பெக்டர். சபரியோட முழங்காலுக்கு குறி வெச்ச தோட்டா அவனோட நெஞ்சுல பாய்ஞ்சுடுச்சு... ஒரு நிமிஷம் நான் அப்படியே திகைச்சுப் போயிட்டேன்.... அப்புறம் சூட்கேஸை எடுத்துகிட்டு காருக்கு திரும்பி வீட்டுக்கு வந்தேன். வீட்டுக்கு வந்ததும் மனசுல ஒரு பயம். சுடப்பட்ட ஆள் உயிரோடு இருக்கிறானா? அப்படி அவன் இறந்து போயிருந்தா பாடியை டிஸ்போஸ் செய்ய நினைச்சு... கம்பெனியோட டெம்போவேனை எடுத்துக்கிட்டு வந்தேன். அப்படி வந்தப்பத்தான் பாலத்துக்குப் பக்கத்துல நின்னுட்டிருந்த அபிநயாவைப் பார்த்தேன். அவ இந்தக் கொலைப் பழியில் மாட்டிக்கக் கூடாதுங்கிற எண்ணத்திலும், சபரியோட கொலைக்குக் காரணம் நான் தாங்கிற நினைப்பு அவ மனசுல விழுந்து விடக் கூடாதுங்கிற எண்ணத்திலும் டெம்போ வேனிலிருந்த ஈடர் ஆல்கஹாலை கர்சீப்புல நனைச்சு-அபிநயாவை மயக்கத்துல ஆழ்த்தி வீட்டுக்கு கொண்டுட்டு வந்தேன்....."

"சபரியை சுட்டது நீங்கதான்னு அபிநயாவுக்குத் தெரியாதா?"

"தெரியாது இன்ஸ்பெக்டர்..."

கன்னைய பிரசாத் சிரித்தார்.

"இனிமே நீங்க தாராளமா சொல்லலாம் சந்தானகிருஷ்ணன்..."

சந்தானகிருஷ்ணன் குழப்பமாய் இன்ஸ்பெக்டரை ஏறிட்டார்.

கன்னைய பிரசாத் ப்ரீப்கேஸைத் திறந்து அந்த பழுப்பு நிற பைலை எடுத்து ஒரு பக்கத்தை எடுத்துக் காட்டினார்.

"ஸீ... மிஸ்டர் சந்தானகிருஷ்ணன்.... இது ஒரு ஷூட் அட் ஸைட் ஆர்டர். அஞ்சு வருஷங்களுக்கு முன்னாடி ஆந்திரா போலீஸ் பிரகடனப்படுத்தின ஆர்டர். பிணமாவோ உயிரோடவோ வேங்கடநாராயணனை போலீஸ் வசம் ஒப்படைக்கிறவர்களுக்கு அவார்டும் மென்ஷன் பண்ணியிருக்காங்க...."

"இன்ஸ்பெக்டர்....."

நாலைந்து நாட்களுக்குப் பிறகு.... அந்த நிமிஷம்தான் நெஞ்சு நிறைய சந்தோஷப்பட்டார் சந்தானகிருஷ்ணன்.


கன்னைய பிரசாத் தொப்பியை எடுத்து பொருத்திக்கொண்டார். "உங்ககிட்ட கொஞ்ச நேரம் விளையாடிப் பார்த்தேன். சந்தானகிருஷ்ணன். இந்தாங்க... உங்க பிஸ்டல். அபிநயாவோட டம்பப்பை..."

கையைப் பற்றி குலுக்கிவிட்டு...

வாசலில் நின்றிருந்த ஜீப்பை நோக்கிப் போனார் இன்ஸ்பெக்டர்.

● ● ●

(முற்றும்)



## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கிருஷ்ணகுமார் மார்க்கண்டு
வயது: 16
முகவரி: இல. 10, மத்திய வீதி, உவர்மலை, திருமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, ஓவியம் வரைதல்.



பெயர்: எம். நௌசாத்
வயது: 19
முகவரி: 18 பி, பெயார் லைன் வீதி, தெஹிவளை.
பொழுதுபோக்கு: பேனாநட்பு, பத்திரிகை, வானொலி.



பெயர்: என். மலர்
முகவரி: C/O MISS. SAWSON, BUILDING NO.04, 7th FLOOR, FLAT NO. 16, SHARQ, AL-SAWABER. KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எஸ். ரஸிக்கா
முகவரி: BLOCK NO. 08, STREET NO.01, MARKET NO. 145, SHOP NO. 03, AL.-ANDALOUS, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையானவை



பெயர்: பி. ஜெகன்
வயது: 21
முகவரி: HOF. STR.136, 8044 ZURICH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: டி.வி., பத்திரிகை, நண்பர் தொடர்.



பெயர்: அப்துல் வகாப்
வயது: 24
முகவரி: MARKAZ AOUILIYA. ALNA WAREYAU, MADEENA ROAD, MAKKAH, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கதைப்புத்தகம்.

பெயர்: செல்வராஜா சசிகுமார்
வயது: 18
முகவரி: காளிகோவில் வீதி மட்டக்களப்பு.
பொ.போ: பத்திரிகை, வானொலி

பெயர்: எம். சிஹான்
வயது: 18
முகவரி: 20, புதிய வீடமைப்புத் திட்டம், தில்லையடி, புத்தளம்.
பொ.போ: வழமையானவை,

பெயர்: எஸ். ரவி
முகவரி: P.O. BOX-8250, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு, டி.வி.

பெயர்: ஜ. பஷீர்
முகவரி: P.O. BOX-12327 , SHAMIYA, KUWAIT.
பொ.போ: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: கோபால் பூமிநாதன்
வயது: 25
முகவரி: எல்டொப் தோட்டம், பொகவந்தலாவ.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எம். நியாஸ்
வயது: 23
முகவரி: 645, கடற்கரை வீதி, அக்கரைப்பற்று- 01.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்.



படிப்பகம்

www.padippakam.com

# 41 தாய்

**"அவள் கூண்டுக்குள் அகப்பட்ட அணிற்குஞ்சு மாதிரி ஓடியாடி வேலை செய்வாள். சாப்பாடு தயாரிப்பாள்; பசைகாய்ச்சுவாள்; சுவரொட்டி விளம்பரங்களுக்கு மசி தயாரிப்பாள்."**

## மக்சீம் கார்க்கி

"அவன் மனம் என்னவோ சங்கடப்படுகிறது" என்று பெருமூச்சுடன் சொன்னாள் தாய்.

"அந்தச் சம்பவம் நடந்ததிலிருந்து நீ அவன் மீது அதிகமான அன்போடு நடந்துகொள்கிறாய். அதைப்பற்றி எனக்கு மிகுந்த சந்தோஷம்" என்றான் பாவெல்.

"நானா? எனக்கு அப்படி ஒன்றும் தெரியவில்லை. என்னவோ அவனை எனக்கு ரொம்பவும் பிடித்துப் போயிற்று. எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை"

"உனக்கு மிகவும் அன்பான மனம், அம்மா" என்று மெதுவாகச் சொன்னான் பாவெல்.

"நான் மட்டும் உனக்கு-உன் தோழர்கள் அனைவருக்கும்-உதவ முடிந்தால் - கொஞ்சமேனும், உதவி செய்ய முடிந்தால் - எப்படி உதவுவது என்பது மட்டும் தெரிந்தால்....?"

"கவலைப்படாதே, அம்மா நீ தெரிந்துகொள்வாய்."

"எனக்கு அது மட்டும் தெரிந்துவிட்டால்-அப்புறம் கவலையே இராது" என்று சிறு சிரிப்புடன் கூறினாள் தாய்.

"சரி, அம்மா. இந்தப் பேச்சை விட்டுவிடுவோம். ஆனால் ஒன்றுமட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள். உனக்கு நான் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டவன்.

அவள் பேசாது சமையலறைக்குள் சென்றாள். தன் கண்களில் பொங்கும் கண்ணீரை அவன் பார்த்துவிடக் கூடாதே என்ற அங்கலாய்ப்பு அவளுக்கு.

அன்று இரவு ஹஹோல் வெகு நேரம் கழித்துத்தான் வீடு திரும்பினான்; வந்தவுடனேயே அவன் படுக்கச் சென்றுவிட்டான்.

"நான் இன்றைக்கு பத்து மைலாவது நடந்திருப்பேன்."

"அதனால் பலன் இருந்ததா?" என்று கேட்டான் பாவெல்.

"தொந்தரவு பண்ணாதே, எனக்குத் தூக்கம் வருகிறது."

அவன் அதற்குப் பிறகு எதுவுமே பேசவில்லை.

சிறிது நேரம் கழித்து நிகலாய் வெஸோவ்ஷிகோவ் உள்ளே வந்தான். அவனது ஆடைகள் கிழிந்து கந்தல் கந்தலாய் இருந்தன. ஒரே அழுக்குமயமாகவும் அதிருப்தி நிறைந்தவனாகவும் அவன் வந்து சேர்ந்தான்.

"இஸாயை யார் கொன்றார்கள் என்று கேள்விப் பட்டாயா?" என்று பாவெலிடம் கேட்டுக்கொண்டே அவன் அறைக்குள் நடக்க ஆரம்பித்தான்.

"இல்லை" என்று சுருக்கமாக விடையளித்தான் பாவெல்.

"எவனோ ஒருவன் வேண்டா வெறுப்பாக இந்தக் காரியத்தில் முந்திவிட்டான். நானே அந்தப் பயலைத்தீர்த்துக்கட்ட வேண்டும் என்று இருந்தேன். நான்தான் அதைச் செய்திருக்க வேண்டும். அதற்கு நான்தான் தகுந்த ஆசாமி."

"அந்தப் பேச்சை விடு, நிகலாய்" என்று நட்புரிமை தொனிக்கும் குரலில் சொன்னான் பாவெல்.

"நான் நினைத்தேன்" என்று அன்போடு பேச ஆரம்பித்தாள் தாய். "உனக்கு மிகவும் மிருதுவான மனம் இருக்கிறது. நீ ஏன் இப்படி விலங்கு மாதிரி கர்ஜிக்கிறாய்?"

அந்தச் சமயத்தில் நிகலாயைப் பார்க்க அவளுக்குப் பிடித்திருந்தது. அவனது அம்மைத் தழும்பு விழுந்த முகம் கூடக் கவர்ச்சிகரமாகத் தோன்றியது.

"இந்த மாதிரிக் காரியங்களுக்குத் தவிர, வேறு எதற்கும் நான் லாயக்கில்லை." என்று தன் தோளை சிலுப்பிக்கொண்டே சொன்னான் நிகலாய். "நானும் நினைத்து நினைத்துப் பார்க்கிறேன். இந்த உலகில் என் இடம் எது என்று, ஆனால் எனக்கு ஒரு இடமும் இல்லை. ஜனங்களோடு பேசத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால் எப்படிப் பேசுவது என்பது எனக்குத் தெரியாது. எல்லாம் எனக்குப் புரிகிறது. மக்களுக்கு இழைக்கப்படும் அந்திகளை யெல்லாம் பார்த்து அனுதாபம் கொள்கிறேன். என்றாலும் அதை வாய்விட்டுச் சொல்லத் தெரிய வில்லை. நான் ஒரு ஊமைப் பிறவி."

அவன் பாவெலிடம் திரும்பினான்; உடனே தன் கண்களைத் தாழ்த்தி மேஜையையே துளைத்து விடுவதுபோல் வெறித்துப் பார்த்தான். பிறகு அவனது இயற்கையான குரலுக்கு மாறான மதலைக் குரலில் பேசத்தொடங்கினான்:

"தம்பி, எனக்கு ஏதாவது பெரிய வேலையாகக் கொடு. இந்தமாதிரி, எந்தவிதக் குறிக்கோளுமற்று என்னால் வாழ்ந்துகொண்டிருக்க முடியாது. நீங்கள் அனைவரும் உங்கள் வேலைகளிலேயே மூழ்கி யிருக்கிறீர்கள். உங்களது இயக்கம் எப்படி வளர்ந்து மலர்கிறது என்பதை நான் பார்க்கத்தான் செய்கிறேன். ஆனால் நான் மட்டும் ஒரு பக்கமாக ஒதுங்கி நிற்கிறேன். வெறுமனே மரங்களைச் சுமந்து திரிவதோடு முடிந்து விடுகிறது என் பிழைப்பு. இந்தப் பிழைப்பு ஒருவனுக்கு வாழ்வளித்து விடாது. எனக்கு வேறு ஏதாவது கடினமான பெரிதான வேலை கொடு."

பாவெல் அவனது கையை எட்டிப் பிடித்து அவனைத் தன்னருகே இழுத்தான்.

"சரி, தருகிறேன்."

இடையிலிருந்து- மறைவுக்கு அப்பாலிருந்து ஹஹோலின் குரல் கேட்டது.

"நான் உனக்கு அச்சுக் கோக்கிற வேலை சொல்லித் தருகிறேன், நிகலாய். உனக்கு அது பிடிக்குமா?"

நிகலாய் ஹஹோலிடம் பேசினான்:

"நீ மட்டும் எனக்கு கற்றுக் கொடுத்துவிட்டால் - உனக்கு நான் என் கத்தியைப் பரிசளித்து விடுகிறேன்" என்றான் அவன்.

"உன் கத்தியைக் கொண்டு உடைப்பிலே போடு" என்று கடகடவென்று சிரித்தவாறே கத்தினான் ஹஹோல்.

"இல்லை. அது ஒரு நல்ல கத்தி" என்றான் நிகலாய். பாவெலும் சிரிக்க ஆரம்பித்தான்.

"நீங்கள் என்னை பார்த்துச் சிரிக்கவா செய்கிறீர்கள்?" அறையின் மத்தியில் நின்றவாறே கேட்டான் நிகலாய்.

"ஆமாம் அப்பா, ஆமாம்!" என்று படுக்கையை விட்டு துள்ளி எழுந்தவாறே சொன்னான் ஹஹோல். "சரி வா. வயல் வெளிப்பக்கம் உலாவிவிட்டு வரலாம். நிலா அருமையாகக் காய்கிறது. வருகிறாயா?"

"சரி" என்றான் பாவெல்.

"நானும் வருகிறேன்" என்றான் நிகலாய். "ஹஹோல், உன் சிரிப்பு எனக்குப் பிடித்திருக்கிறது."

"நீ பரிசு கொடுப்பதாகச் சொல்வது எனக்குப் பிடித்திருக்கிறது." என்றான் ஹஹோல் சிரித்துக் கொண்டே.

அவன் சமையலறைக்குள் சென்று உடை உடுத்திக்கொண்டான்.

"மேலே ஏதாவது போர்வையைப் போட்டுக்கொள் என்று அவசர அவசரமாகச் சொன்னாள் தாய்.

அவர்கள் மூவரும் வெளியே சென்ற பிறகு அவள் ஜன்னலருகே சென்று அவர்கள் செல்வதையே பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு சுவரிலிருந்த விக்ர கத்தை நோக்கி வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டாள்:

"கருணையுள்ள கடவுளே! அவர்களுக்கு நல்லது செய். அவர்களைக் காப்பாற்று..."

□□



நாட்கள் வெகு வேகமாகக் கழிந்து சென்றன. அந்த வேகத்தில் மே தினத்தின் வரவைப்பற்றிச் சிந்திப்பதற்குக் கூட தாய்க்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனால் இரவில் மட்டும், பகல் முழுதும் ஓடியாடி, வேலை செய்து ஓய்ந்து களைத்துப் படுக்கையில் சாய்ந்த பிறகு மாத்திரம், அவள் இதயத்தில் இனந்தெரியாத ஒரு மங்கிய வேதனை லேசாக எழும்.

"அது மட்டும் சீக்கிரம் வந்துவிட்டால்..."

காலையில் ஆலைச் சங்கு அலறியது. அந்திரேயும் அவளது மகன் பாவெலும் சீக்கிரமே தங்கள் சாப்பாட்டை முடித்துவிட்டு வேலைக்குச் செல்வார்கள்; அவளுக்கு ஏதாவது பதிற்றுக் கணக்கான வேலைகளை விட்டுச் செல்வார்கள். பகல் முழுதும் அவள் கூண்டுக்குள் அகப்பட்ட அணிற்குஞ்சு மாதிரி ஓடியாடி வேலை செய்வாள். சாப்பாடு தயாரிப்பாள்; பசை காய்ச்சுவாள்; சுவரொட்டி விளம்பரங்களுக்கு மசி தயாரிப்பாள். திடீர் திடீரென்று எங்கிருந்தோ வந்து தோன்றி பாவெலுக்குப் பல செய்திகளை கொண்டுவந்து கொடுத்துவிட்டு, மாயமாக மறைந்து செல்லும் இனந் தெரியாத மனிதர் பலரை வரவேற்றாள். அவர்கள் வந்து சென்ற பிறகு அவர்களுக்கிருந்த பரபரப்பு அவள் மனதிலும் குடிபுகுந்து விடும்.

அநேகமாக ஒவ்வொரு நாள் இரவிலும், தொழிலாளரை மே தினக் கொண்டாட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளும்படி வேண்டிக்கொள்ளும் சுவரொட்டி அறிக்கைகள் வேலிப் புறங்களிலும் பொலிஸ் நிலையக் கதவுகளிலும் ஒட்டப்பட்டு வந்தன. ஒவ்வொருநாளும் அம் மாதிரியான அறிக்கைகள் தொழிற்சாலையிலும் காணப் பட்டன. காலையில் பொலிஸ்காரர்கள் தொழிலாளர் குடியிருப்பு வட்டாரத்துக்குள் வந்து, அந்த அறிக்கைகளைக் கிழித்தெறிவார்கள்; சுரண்டியெடுப்பார்கள். ஆனால் மத்தியானச் சாப்பாட்டு வேளையில் புதுப்பிரசுரங்கள் காற்று வாக்கில் பறந்து, போகிறவர் காலடியில் விழுந்து புரளும். நகரிலிருந்து துப்பறியும் குழுவினர் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் மூலைக்கு மூலை நின்று கொண்டு, சாப்பாட்டு வேளையில் தொழிற்சாலைக்கு உற்சாகமாய் போவதும் வருவதுமாய் இருக்கும் தொழிலாளிகள் ஒவ்வொருவருடைய முகங்களையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். நிலைமையைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் பொலிஸ்காரர்களின் பரிதாபகரமான நிலையைக் கண்டு ஒவ்வொருவரும் ஆனந்தப்பட்டார்கள். வயதான தொழிலாளர்கள் கூடச் சிரித்துக் கொண்டே தமக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள்:

"இவர்கள் செய்கிற காரியத்தைத்தான் பாரேன்!"

எங்கு பார்த்தாலும் தொழிலாளர்கள் கும்பல் கும்பலாக நின்று மே தின அறைகூவலைப்பற்றிக் காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள். வாழ்க்கை எங்கும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அந்த வசந்த பருவத்தில் வாழ்க்கை அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஏனெனில் எல்லோருடைய மனத்திலும் ஒரு புதிய உணர்ச்சி பூத்துக்கிளர்ந்தது. சிலருக்கு முன்னிருந்ததைவிட, பன்மடங்கான எரிச்சலும் புகைச்சலும் தான் மனத்தில் மூண்டது: அவர்கள் இந்தப் புரட்சிக்காரர்களை வாயாரச் சபித்தார்கள். சிலருக்கு ஒரு மங்கிய கவலையும் இனந்தெரியாத நம்பிக்கையுணர்ச்சியும் ஏற்பட்டன. சிலர்-அதாவது மிகவும் குறைந்த ஒரு சிலர் மட்டும்-தாம்தான் இந்த ஜனங்களைக் கிளறிவிட்டதற்குப் பொறுப்பாளிகள் என்ற உணர்வினால், உள்ளுக்குள் மிகுந்த பூரிப்பும் உற்சாகமும் கொண்டு திரிந்தார்கள்.

பாவெலுக்கும் அந்திரேய்க்கும் இப்போது எல்லாம் தூங்குவதற்குக்கூட முடியவில்லை. அவர்கள் காலை நேரத்தில்தான் திரும்பிவருவார்கள். வெளுத்துக் களைத்து என்னவோபோல வந்து சேர்வார்கள். ஊரின் ஒதுக்குப்புறங்களிலும் காடுகளிலும் அவர்கள் கூட்டங்கள் நடத்தி வந்தார்கள் என்பது தாய்க்குத் தெரியும். குடியிருப்பைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் குதிரைப் பொலிஸ்காரர்கள் இரவெல்லாம் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தார்கள் என்பதும், துப்பறியும் வேவுகாரர்கள் எங்கு பார்த்தாலும் ஊர்ந்து திரிந்து தனியாகச் செல்லும் தொழிலாளர்களை வழி மறித்து, அவர்களைச் சோதனை போடுவதும், கூட்டங் கூட்டமாக வரும் தொழிலாளர்களைக் கலைந்து போகுமாறு செய்வதும், சில சமயங்களில் சிலரைக் கைது செய்துகொண்டு போவதுமாக இருக்கிறார்கள் என்பதும் அவளுக்குத் தெரியும். எந்த நேரத்திலும் கைதாகக்கூடிய நிரந்தரமான அபாயத்தில்தான் பாவெலும் அந்திரேயும் இருந்தார்கள் என்பதும் அவளுக்குத் தெரியும். அவர்கள் அப்படிக் கைதாக நேர்ந்தாலும், அவள் அதையும் வரவேற்கத்தான் செய்வாள். பின்னால் வரப்போகும் பெரும் ஆபத்துக்கு ஆளாவதைவிட, இப்போதே கைதாகிவிடும் ஆபத்து மேலானது என்பது அவள் எண்ணம்.

என்ன காரணத்தினாலோ இஸாயின் கொலை விஷயம் மறைக்கப்பட்டு விட்டது. இரண்டு நாட்களாய் உள்ளூர்ப் பொலிஸ்காரர்கள் புலன் விசாரித்தார்கள். சுமார் ஒரு டஜன் தொழிலாளர்களைக் கண்டு விசாரணை செய்த பின்னர், அவர்களே அந்தக் கொலை வழக்கை விட்டு விட்டார்கள்.

மரியா கோர்சுனவா தாயோடு பேசியபோது, பொலிஸ்காரர்களின் அபிப்பிராயத்தை வெளியிட்டுச் சொன்னாள். மற்றவர்களோடு எவ்வளவு சுமுகமாகப் பழகிவந்தாளோ, அதே மாதிரி அவள் பொலிஸ் காரர்களிடமும் பழகிவந்ததால் அவர்களது அபிப்பி ராயம் அவளுக்கும் தெரிய நேர்ந்தது.

(தொடர்ந்து வரும்)

## கண்ணீரில் கரைந்த உண்மை

ஜெயந்தி ஜெய்சங்கர்

சீருடையில் வெண் தாமரைகள் பூத்திருக்க மண்டபம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. சல சலக்கும் நீரின் சப்தம் அடங்கியது போல அமைதி. அசெம்பிளி ஹோலில் ஆர்ப்பரித்த மாணவிகள் ஆங்காகங்கே ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து ஜாடை பேசிக்கொண்டனர். பிரின்சப்பல் இராஜதுரை மேடை ஏறிவந்து நின்றதும் மெல்லிய முறுவலுடன் நின்ற மாணவிகளின் முகம் அப்படியே இறுகிப் போனது. வலுக்கட்டாய ஆர்வத்தை வரவழைத்து அறிவுரைகளைக் காதில் வாங்க ஆயத்தப்படுத்திக் கொண்டார்கள்.

அப்பரோ.... சுந்தரரோ.... கபிலரோ.... காள மேகமோ... வள்ளுவரோ... இளங்கோவோ இல்லை... ஆராரோ தான் பாடுவாவோ யாம் அறியோம் பராபரமே..." என்று பின்வரிசையில் உட்கார்ந்திருந்த மாணவி ஒருத்தி சொல்ல சுற்றியிருந்தவர்கள் வந்த சிரிப்பை வாய்க்குள்ளேயே தொலைத்து விட்டு இரவு ரி.என்.எல். இல் போட்ட திரைப்படத்தைப் பற்றி விமர்சனம் செய்ய விடாமல் எத்தனை நேரம் அறிவுரை சொல்லி அறுக்கப்போகின்றாரோ என்று ஆதங்கத்தில் இருந்தார்கள். குரலைச் சரிப்படுத்திவிட்டு பேச ஆரம்பித்தவர் அழுத்தமாக, கோபமாக ஆத்திரத்தொனியில்- பெயர் குறிப்பிடாமல் மாணவி ஒருத்தி பற்றி விமர்சித்து ஏசியதைக் கேட்டதும் மாணவிகள் முகத்தில் அச்சமும் பயமும் - யாரென்ற ஆர்வமும் கேள்விக்குறியாய் கோடுபோட்டதால் மெல்லிய குசுகுசுப்பு.

மேசை மீது ஓங்கிக் கையால் அடித்தவர் மாணவிகளின் கவனத்தை தன் பக்கம் திருப்பினார். "கல்லூரிக்கு வரும்போது கல்விகற்பது மட்டும்தான் நோக்கமாக இருக்க வேண்டும். கண்ட கண்ட மாதிரி நடக்கிறதுக்கும் கல்லூரியின் பெயரைக் கெடுக்கிறதுக்கும் என்றே கங்கணம் கட்டிவருவதென்றால் ஸ்கூலைவிட்டே துரத்திடுவன். மகளிர் கல்லூரியின் மானம் மரியாதை கெடும் என்றால் அந்த மாணவியை நான் மன்னிக்க மாட்டேன். பகிரங்கமாகத் தண்டனை கொடுப்பேன்." என்று 'சரியான சுடுதண்ணி' என்று மாணவிகள் குறிப்பிடும் இராஜதுரை பிரின்சிப்பல் கோபமாகக் கூறிக்கொண்டே கையைக் காட்டி எழுந்துவரும்படி சொன்னபோது, கதவோரம்



இருந்த கலையரசி கால் தடுமாறி விழப்போனபோது கௌரிதான் தாங்கிக் கொண்டாள். நிமிர்ந்து கௌரியை நோக்கிய கலையரசியின் கண்கள் உள்ளத்தைக் காட்டியபோது கௌரி கலங்கிப் போனாள். அழகு, திறமை, ஆர்வம், கெட்டித்தனம் அனைத்தும் நிறைந்து உள்ள அவளை கலை வாணியாகவே பார்த்த கௌரிக்கு பிரின்சிப்பல் சொன்னது அபத்தமான - அப்பட்டமான பொய்யாகவே பட்டது. ஆத்திரம் முகத்தில் முகம்காட்ட முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள். கன்னத்தில் தொடர்ந்து வழிந்த கண்ணீரோடு தலை குனிந்தபடி கலையரசி அவமானத்தில் கூனிக்குறுகி நின்றாள். கேட்கமுடியாத வார்த்தைகள் நாராசமாய் காதில் வீழ்ந்தபோது கண்ணீர் தவிர வேறு வார்த்தைகள் அவளிடம் இருந்து புறப்படவில்லை.

வகுப்பறைக்குள் சென்றபின்பும் கலையரசி பற்றிய கதையைத் தவிர பாடங்கள் நடைபெற்றதாகத் தெரியவில்லை. எல்லோர் வாயிலும் கெட்டித்தனத்துக்கும் அறிவுக்கும் அழகுக்கும் கதாநாயகியாக விளங்கிய கலையரசி அவமானத்துக்கு நாயகியாகி எல்லோர் நாவிலும் நர்த்தனமிட்டுக்கொண்டிருந்தாள். கைகளால் முகத்தை மூடியபடி தாரைதாரையாக கண்ணீர் வடித்த கலையரசிக்கு கௌரி ஆறுதல் சொன்னபோதும் அவள் அழுகையை நிறுத்தவில்லை.

'லாஸ்ட் பீரியட் றெக்கோட் புக்கை' எடுத்துச் சென்ற கௌரி "மிஸ் உங்களிட்டை கொஞ்சம் பேசணும்" என்றாள். நிமிர்ந்து பார்த்த இராஜதுரை "ம்" என்றதும் "மிஸ்! கலையரசி அப்பிடிப்பட்ட 'கேள்' இல்லை. படிப்பிலையும், போட்டிகளிலும் பெருமைதேடித்தந்தவள் இப்பிடி அவமானத்தை ஏற்படுத்த அவளுக்கு சந்தர்ப்பம் கூட இல்லை மிஸ். அவளின்ர வளர்ச்சியிலை பொறா மைப்பட்டவர்கள் வேண்டாத கதை கட்டியிருக்கலாம். அதை நம்பி அசம்பிளியில் அவ்வளவு பேருக்கு மத்தியிலை அவளை அவமானப்படுத்தியிருக்கக்கூடாது. தனிப்பட்ட ரீதியிலை கூப்பிட்டு கேட்டிருக்கலாம். அப்படி நடந்திருந்தால் திருந்துறதுக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்திருக்கலாம்!" அவள் சொல்லும் போதே இடை மறித்து "லுக்.... நீ என்ன அவளுக்கு வக்காலத்தா?" ஆத்திரத்தோடு கேட்டபோது "இல்லை மிஸ். கண்ணாலை பார்க்கிறதோ, காதாலே கேட்கிறதோ பொய்யாகலாம். நீங்க விசாரித்து விட்டு தண்டனை கொடுத்திருக்கலாம். ஏன் என்றால் கலையரசி என்னோடை நான் வார பஸ்ஸில்தான் வாறவள். ஸ்கூல் முடிந்துபோகும் போதும் என்னுடன் வந்து அதே பஸ்ஸில்தான் போவாள். அவள் காதலிக்கிறதுக்கோ.... கடிதம் கொடுத்து நீங்க சொன்ன மாதிரி மானங்கெடுகிற அளவுக்கு நடக்க அவளுக்கு சந்தர்ப்பமே கிடையாது மிஸ்." ஆணித்தரமாக அவள் எடுத்துக்கூறியபோது பிரின்சிப்பல் மெதுவாக யோசிக்க ஆரம்பித்தார். "ஆராயாமல் தவறுசெய்து விட்டேனோ", என்ற அச்சம் அவருள் மெல்ல முளைத்து எழுந்தது.

மறுநாள் காலையில் ஆர்வத்துடன் ஸ்கூல் வெளிக்கிட்டு பஸ்சுக்காய் காத்துநின்றாள் கௌரி. அதே பஸ் வந்தது. ஆனால் கலையரசி வரவில்லை. மனம் லேசாய் கனக்க ஆரம்பித்தது. எதை எதையெல்லாமோ மனம் எண்ணி எண்ணிக் கலங்க ஆரம்பித்தது. "நடக்காத நிகழ்வை நடந்ததாகக் கூறியதால் அவமானப்பட்டு அதைத்தாங்கும் சக்தி யற்று அவசரத்தில் ஏதாவது அசம்பாவிதமாக முடிவு எடுத்திருப்பாளோ.....?" என்று பலவாறாக சிந்தித்திருந்த கௌரியை 'ஸ்கூல் ஹாஃப் டே' என்ற செய்தி அதிர்ச்சிக்குள்ளாக்கியது. "கலையரசி தற்கொலை செய்துகொண்டாளாம்."

மாணவிகள் சோகத்துடன் அணிவகுத்துப் பார்த்துக்கொண்டு வந்தார்கள். எதை எப்படி எந்த இடத்தில்சொல்ல வேண்டும் என்பதை கணப்பொழுது கோபத்தில் கைவிட்டதனால் ஏற்பட்ட பாரிய இழப்பை ஏற்றுக்கொள்ள முடியாமல் பிரின்சிப்பல் இராஜதுரை தனியே இருந்து அழுதார். கண்ணீரில் உண்மை சொன்ன கலையரசியை புரியமுடியாதவர்கள் அவளுக்காக கண்ணீர் விட்டுக்கொண்டிருக்க, கண்மூடித் துஞ்சும் கலையரசியின் கண்ணியத்தை அவள் மூடிய விழிகளுக்குள் கண்டு கைகூப்பி நின்றாள் கௌரி.



படிப்பகம்

www.padippakam.com

# என்னவென்று சொல்வதம்மா?



ஷர்மிளா இஸ்மாயில் – கண்டி

மழை சாரலாகத் தூறிக் கொண்டேயிருந்தது. செடிகளும் மரங்கொடிகளும் ஆனந்தமாய் நனைந்த வண்ணம். முற்றத்து ரோஜா தண்ணீரின் கனம் தாங்காது இதழ்களை உதிர்த்தது.

ஜன்னலோரமாய் சஹானா. தூறல் போடும் வானத்தை வாழ்த்தியவளாய் மழையை இரசித்துக்கொண்டிருந்தாள்.

"சீ....என்ன மழையிது? ஒரே நசுநசுன்னு தூறிகிட்டு. ஒரு துணிமணி காய வைக்க முடியுதா? வெளில கால் வைக்கவே கஷ்டம். எப்ப தான் நிக்குமோ தெரியலை?" அம்மா கரித்துக் கொட்டினாள்.

"அட... என்னம்மா இப்படி சொல்றீங்க...? மழையின் அருமை கொளுத்தும் வெயிலில் புரியும். மழை இல்லேன்னா பூமியும் இல்ல, ஜீவராசிகளும் இல்லன்னு ஆயிடும். தெரியுமா?"

அம்மா முறைத்துப் பார்த்தாள். முணுமுணுத்தவாறே சமையலறைப் பக்கம் போய் விட்டாள். சஹானா சிரித்துக் கொண்டாள்.

"சின்னச் சின்ன தூறல் என்ன...
என்னைக் கொஞ்சும் சாரல் என்ன..."

சஹானா வாய்விட்டுப் பாடினாள். பாடல் வரிகள் சரிதானா என்பது சந்தேகம்.

"ம்...என்ன பாட்டுக் கச்சேரி பலமா நடக்குது போல....?" கேட்டவாறே குடையை பக்கமாக வைத்து வந்தவள் நண்பி ரவீனா.

சஹானாவின் முகத்தில் புன்சிரிப்போடு கால் கிலோ அசடும் தெரிந்தது. "ஏய்....சஹா, இன்னைக்கு மாலை மூன்று மணிக்கு நீ என்னோட வெளியில் போக வர்ரே. ஓ.கே?" கேட்டாள் ரவீனா.

"எதுக்குடி? எங்க போகப் போற?" சஹானா.

"டவுன் ஹோல்ல இன்னைக்கு ஒரு கருத்தரங்கு-பெண்களுக்கு ரொம்ப பயனுள்ளதா இருக்கும்னு சொல்றாங்க. அதான் போய்க் கலந்துக்கிடலாம்னு...." ரவீனா.

"எதைப்பற்றி....பெண்ணுரிமையா? சம உரிமையா?"

"அதில்லடி....குழந்தை வளர்ப்பு. குழந்தைபராமரிப்பு.... குழந்தை.... குடும்ப நிர்வாகம் போன்ற விஷயங்கள்...."

"ஐயோ... ஆளைவிடு. நமக்கெல்லாம் அது வேணாம். அனுபவம் வரவர எல்லாம் கத்துக்கலாம். குழந்தை வளர்ப்பு, குடும்ப நிர்வாகம் இதெல்லாம் படிச்சுத்தெரிகிற விஷயமில்ல. பட்டுத்தெரியணும். நான் வர மாட்டேன். நீ போ." சஹானா மறுத்திட்டாள்.

ரவீனா கெஞ்சினாள். வாதாடினாள். கோபித்தாள். "போய்த் தான் பாரேன். இவ்வளவு சொல்லுறா அந்தப் பொண்ணு." அம்மா உத்தரவிட்டாள்.

மாலை மழை கூட நின்று போனது சோகமே. ஹோலில் சனக்கூட்டம் பரவாயில்லை. பெண்கள் தாம். கருத்தரங்கு ஆரம்பம் முதல் முடிவுவரை விறுவிறுப்பாகவும் பயனுள்ளதாகவும் உணர்ந்தாள் சஹானா.

அதிலும் அங்கு உரையாற்றிய திருமதி நவீனாவின் பேச்சில் மயங்கிப் போனாள். எவ்வளவு விவேகம், அனுபவம் சார்ந்த அற்புத உரை! அதிசயித்துப் போனாள். குழந்தை வளர்ப்பும், குடும்ப நிர்வாகமும் சம்பந்தமாக எவ்வளவு பாந்தமாக-அருமையாக விளக்கினார்.

சஹானா அதிசயித்தாள். ஆர்வப் பட்டாள். இன்னும் இன்னும் கேட்டுத் தெரிய வேண்டும் போல் ஆவல் பற்றிக் கொண்டது. ஆனால் சந்தர்ப்பம் வாய்க்க வில்லை. தவித்துப் போனாள்.

"அவங்கட அட்ரஸ் தெரிஞ்சா அவங்க வீட்டுக்கே போய் நல்லா கதைச்சிட்டு வரலாம். இன்றைய பேச்சுக்கு பாராட்டும் தெரிவிக்கலாம் இல்லையா?" ரவீனாவிடம் சொன்னாள்.

ரவீனா தட்டுத்தடுமாறி திருமதி. நவீனாவின் முகவரி பெற்றுக் கொண்டாள்.

இன்னுமொரு அழகிய காலை. முற்றத்து ரோஜா மீண்டும் புதிதாய் மலர்ந்திருந்தது. சஹானாவும் ரவீனாவும் புறப்பட்டனர்.

திருமதி.நவீனாவின் இல்லம். சின்ன அழகிய பங்களா. அழகான பூந்தோட்டம் சகிதம் அமர்க்களமாய்த் தெரிந்தது.

அழைப்பு மணி இனிய நாதம் எழுப்பிற்று. கதவைத் திறந்தவளை ஆவலோடு நோக்கினாள். வயோதிபப் பெண். விஷயத்தை சொன்னதும் உள்ளே அழைத்தாள். "தூங்கறாங்க. எழுப்பினா கோபிப்பாங்க. எழும்புமட்டும் காத்திருக்க முடியுமா?" கேட்டாள். சஹானா கைக்கடிகாரம் பார்த்தாள். 10 மணியும் 5 நிமிடமும். மனதுக்குள் எதுவோ நெருடியது. "ம்...... பரவாயில்ல". ரவீனாதான் பதிலிறுத்தாள். "என்னடி பத்துமணியாகுது. இன்னும் தூக்கமா?" குசுகுசுத்தாள்.

குஷன் மெத்தையில் வசதியாக அமர்ந்து காத்திருந்த நிமிஷங்களில் சின்னப் பையனொருவன் மெதுவாய் வந்து பார்த்து நின்றான். சஹானாவும், ரவீனாவும் ஒரு சேர புன்னகைத்தார்கள். திருமதி.நவீனாவின் மகனாயிருக்க வேண்டும். அவர்களை முறைத்தவன் குஷனில் வந்து தொம்மென விழுந்தான். எழுந்து திரைச்சீலையைப் பற்றி இழுத்து 'டார்ஸான்' போனான். அடுக்கிலிருந்த தினசரிகளை இழுத்துக் கவிழ்த்தான். பூச்சாடியின் பூக்களில் இதழ்களைப் பிடுங்கினான்.

தன்னைக் கவனிக்கிறார்கள் என்று தெரிந்ததும் மேலும் மேலும் அவன் விளையாட்டுக்கள் தீவிரமாயின. இறப்பர் பந்தை வீசியெறிய கண்ணாடி யன்னல் 'கிலிங்' என நொறுங்கியது.

"சனியன் காலையிலேயே உன் ஆட்டத்தை ஆரம்பிச்சிட்டியா? டியூசனுக்கு போய்த் தொலையறது தானே?" அறையுள் இருந்து நவீனாவின் தூக்கங்கலந்த குரல் எரிச்சலாய் ஒலித்தது. தொடர்ந்து "ஆயா.... எங்க போய் தொலஞ்சீங்க....? எனக்கு டீ கொண்டு வரலியா.....? இந்த வீட்டுல எல்லாமே தலை கீழ்தான்... நாசமாப் போக.... டூத் பிரஷ் வெச்ச இடத்துல இருக்குதா?...." ஆவேசமாய் ஒலிக்க ...சஹானாவும் ரவீனாவும் வாசலைத் தாண்டி வெளியேறினர்.

# ஆசை!



எம். சுரேஷ்

ஏதேதோ குற்றச்சாட்டுக்கள் சுமத்தி அவனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. அவனுக்காக வாதாட எந்த வழக்கறிஞரும் வந்திருக்கவில்லை. சொந்த முயற்சியில் ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள அவனுக்கு வசதியில்லை. சுருக்கமாகச் சொன்னால் அவன் சிறையில் இருப்பதும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதும் அவன் குடும்பத்தினருக்குத் தெரியாது.

எப்படியோ அவனுக்கு தண்டனை வழங்கப்பட்டு விட்டது. இன்று அவனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படப்போகும் நாள். அவன் பதட்டப்படவில்லை. தான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று அவனின் உள்மனம் சொல்லியது. தான் தன் மனச் சாட்சிக்கு நேர்மையாக இருப்பதில் அவனுக்குப் பரம திருப்தி...எதையோ நினைத்து இலேசாகச் சிரித்தான். நேரமாகியது.

இரண்டு காவலர்கள் அவனைத் தூக்கு மேடைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அவனுக்கு கறுத்த ஆடைகள் அணிவிக்கப் பட்டன. அவன் இன்னும் நிதானமாகவே இருந்தான். தூக்கில் மாட்டுவதற்கு எல்லா ஆயத்தங்களையும் செய்து முடித்தபின் ஒரு சிறை அதிகாரி கேட்டார்:

"ஏய்! உன் கடைசி ஆசை என்ன?"

அவன் சிறிது நேரம் யோசித்தான், பெருமூச்சுவிட்டான். பின் மிக நிதானமாகச் சொன்னான்:

"சில நிமிடங்கள் தமிழில் சத்தமாகப் பேச ஆசையாக இருக்கிறது. அனுமதிப்பீர்களா?!"

# டாக்டர் எங்கே?



கனகசபை தேவகடாட்சம்

இரவு சுமார் ஏழு மணியிருக்கும். திடீரென கோவிந்தன்-புஸ்பாவின் ஆறுமாதக் குழந்தை வீரிட்டு அழத் தொடங்கியது. இருவரும் செய்வதறியாது பதறிக்கொண்டிருந்தனர். நேரமும் இரவு! 'சென்றி'களால் தாண்டி எவ்வாறு வைத்திய சாலைக்கு பிள்ளையை கொண்டு செல்வது என்பது பற்றி தீவிரமாக கோவிந்தன் யோசித்துக் கொண்டிருந்தான். "என்னங்க! புள்ள கத்திறது காதில் விழல்லையா?" என்று ஆத்திரத்துடன் கணவன் கோவிந்தனில் பாய்ந்தாள் புஸ்பா. சிந்திக்க இடமில்லை. கூச்சலிட்டு அழும் குழந்தையுடன் புஸ்பாவை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பறந்தான் கோவிந்தன்.

வைத்தியசாலையில் குழந்தையின் அழுகுரல் நாலா பக்கமும் எதிரொலித்த வண்ணம் இருந்தது. ஆனால் வெளிநோயாளர் பகுதியில் ஒரு வைத்தியசாலை ஊழியரும் இல்லை. கோவிந்தனும் புஸ்பாவும் குழந்தையுடன் ஒவ்வொரு அறையாக பார்த்துத்திரிந்தனர். அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது-வியாழக்கிழமை அன்று! இரவு ஏழு மணி தொடங்கி ஏழரை மணி வரை தொலைக் காட்சியில் 'விஸ்வாமித்திரர்' படம் நடைபெறுவதும், அது முடியும்வரை வைத்திய சாலை பணிகள் இடைநிறுத்தப் படுவதும்!

ஒருமாதிரியாக 'விஸ்வாமித்திரர்' விமர்சனத்துடன் டாக்டர் அம்மா வெளியில் வந்து கோவிந்தனின் பிள்ளையை வேண்டா வெறுப்புடன் சோதித்துவிட்டு வாட்டில் அனுமதிக்க உத்தரவு கொடுத்தார்.

விடிந்தும் விடியாத காலைப் பொழுது! கையில் தேனீர் போத்தலுடன் கோவிந்தன் 'வாட்'டிற்கு ஓடினான். குழந்தை அழுத களைப்புடன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. "என்ன புஸ்பா! டொக்ரர் புள்ளைய பார்த்தாங்களா?" என்று கேட்டான் கோவிந்தன்.

"இல்லிங்க! ஒருவரும் பார்க்கல்ல" என்றாள் சோகத்துடன் புஸ்பா.

"சரி–சரி.....காலையில டொக்ரர் வருவார். விபரமாக என்னண்டு கேள்" என்ற கோவிந்தன், வைத்தியசாலையை விட்டு நகர்ந்து, தன் மேசன் வேலை செய்யும் தலத்தை நோக்கி நடந்தான். மதியம்! தன் பிள்ளையை வைத்தியசாலை சென்று பார்க்க முடியாத அளவு கோவிந்தனுக்கு கட்டிட 'கொங்கீறீட்' வேலை தடுத்துவிட்டது.

மாலை ஐந்து மணி! கோவிந்தன் ஓட்டமும் நடையுமாக வைத்தியசாலை வாட்டிற்குள் சென்றான். தனது குழந்தையின் கட்டிலைச் சுற்றி சிலர் நின்றிருந்தனர். புஷ்பா தலையில் அடித்து அழுது கொண்டிருந்தாள். கோவிந்தனுக்கு முழுவதும் புரிந்துவிட்டது. "ஐயோ! இஞ்ச பாருங்கோ! நம்ம செல்வம் செத்துப் போச்சு" என்று கோவிந்தனைத் தாவி கட்டிப்பிடித்து அழுதாள் புஸ்பா.

உலகமே இருண்டு வந்தது கோவிந்தனுக்கு! "ஐயோ! இது வரைக்கும் ஒரு டொக்ரரும் வந்து பாக்கல்ல. சேஜனும் லீவாம். என்ட பிள்ளையை இந்த ஆஸ்பத்திரி தான் கொண்டது" என்று பலத்த சத்தத்துடன் கத்தினாள் புஸ்பா.

கோவிந்தனால் எதுவுமே செய்ய முடியாத நிலை. ஆனால் ஒன்றுமட்டும் அவன் மனம் உறுதியாகக் கூறியது!

இங்குள்ள டாக்ரர்கள் அனைவரும் சட்டப்படி 'தூக்கில் இடப்படவேண்டியவர்கள்!'

புஸ்பாவின் ஓலம் ஓயவில்லை. அதுவும் வைத்தியர்களுக்கு எதிராக! மெதுவாக இறந்த தன் பிள்ளையை கையில் ஏந்தினான், கோவிந்தன்! அவ்வேளை பக்கத்து கட்டிலில் இருந்த அனுபவம் மிக்க பெண் ஒருவர் கூறியது கோவிந்தனின் காதில் தெளிவாகக் கேட்டது.

"டொக்ரர்மார் எல்லாம் 'பிறைவற்'றாக வைத்தியம் செய்யத் தொடங்கி நல்லா உழைச்சிக் கண்டிட்டினம். ஆஸ்பத்திரியை கவனிக்கிறதே இல்லை. இப்படியான ஏழைகளுக்கு இதுதான் கதி"

கையில் உள்ள பிணக் குழந்தையுடன் அப் பெண்ணை ஒரு பார்வை பார்த்தான். 'உண்மை' என்று மனம் கூறியது.

# சொந்த பூமி

**பகலின் மீது இருள் கசியத் தொடங்கியபோது நாங்கள் புறப்பட்டோம். எங்கே செல்கிறோம்? என்ன செய்யப் போகிறோம்?**



ஒரு முஸ்லிம் சகோதரனின் உண்மைக் கதை

1990ம் ஆண்டின் வசந்தகாலமொன்றின் இறுதிப்பகுதியின், ஒரு காலைப்பொழுதில் ஒன்றுமேயறியாத நான், எனது பிறந்த மண்ணிலிருந்து நிர்ப்பந்தமாக துரத்தியடிக்கப்பட்டேன். எனது கண்களும், எனது காதுகளும், எனது நெஞ்சமும் நெருப்பாய் எரிந்தன. எதுவும் புரியவில்லை. எதற்காக நாம் எமது மண்ணிலிருந்து செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறோம், என்பதை யாரிடமும் கேட்டுப் புரிந்துகொள்ள சந்தர்ப்பமும் இருக்கவில்லை. துப்பாக்கியும் கொடூரமும் நிறைந்தவர்கள் எங்களை திருப்பி அனுப்புவதிலேயே கண்ணாய் இருந்தார்கள். வார்த்தைக்கு பதில் வார்த்தை கூறக்கூட நாம் அனுமதிக்கப்படவில்லை. மூச்சுவிடுவதற்குக்கூட அவர்களையே கேட்கவேண்டியிருந்தது. உடுத்தியிருந்த ஆடைக்கு மாற்று ஆடை எடுப்பதற்கு நாங்கள் அனுமதிக்கப் படவில்லை. எனது நேசத்துக்குரிய எனது சிறிய வீடு துண்டு துண்டாக உடைத்து சிதறடிக்கப் பட்டதாகவும், எனது வீட்டிலிருந்த பொருட்கள் பங்கிடப்பட்டதாகவும் பின் நாட்களில் நான் அறிந்தேன்.

1990ம் ஆண்டின் ஒரு காலைப் பொழுதில் எனது கனவுகளும் இளமையும் சிதைந்து போனது. எதுவுமே புரியவில்லை. நான் மட்டுமல்ல ஆயிரக்கணக்கான மக்கள் என் நிலையை விட மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். குழந்தைகள், முதியவர், பெண்கள், இளைஞர்கள் உட்பட உலகமே சூனிய வெளியான பிரமையால் அனைவருக்கும் திக்குத் தெரியாமல் கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தனர்.

உறவுகளைவிட மேலான எனது நண்பர்கள், எனது அயலவர்கள் இந் நிலையை ஒரு போதும் அனுமதிக்க வில்லை. எங்களைப் பற்றிய கடந்தகால நினைவுகளை இப்பொழுதும் சோகமாக நினைவுகூர்வதாக நான் அறிந்தேன். ஆயிரமாயிரம் கண்கள் எங்கள் பிரிவின் மேல் சோகம் கப்ப அசையாது இருந்ததை நான் மறந்து விடவில்லை. இன்று நேற்று ஏற்படுத்திய பிணைப்பா இது? எனது தகப்பன், தகப்பனின் தகப்பன் எனது மூதாதையர்கள் அந்த மண்ணிலேயே பிறந்தார்கள். வளர்ந்தார்கள். ஆணிவேர் அறுத்த மரமாக நீண்டநாளைய உறவை, உணர்வை இழந்தவர்களாக நாம் காணப்பட்டோம்.

ஆயிரமாயிரம் வேதனைகள் ஆத்மா மேல் கனக்க வழிதெரியாது என்னுடன் இருந்தவர்கள் காணப்பட்டார்கள். எனக்கோ நான் பிறந்த வீடு, எனது சுற்றம், நான் பாதம் பதித்து நடந்த மண், நான் படித்த பாடசாலை, என் பால்யகாலம் முழுவதும் என்னுடன் கைகோர்த்து வந்த எனது நண்பர்கள். இவைகளை மறக்க நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். இவைகளை நான் எப்படி மறக்கலாம்? எனது ஆத்மாவை நான் மாற்றலாமா? எனது இரத்தமும், எனது உணர்வுகளும், நான் பெற்றிருக்கும் கல்வியும், இந்த மண்ணிலிருந்து இந்தக் காற்றையே சுவாசித்தே நான் பெற்றேன். எப்படி நான் இந்த மண்ணை விட்டுப் போவேன்....? இதுவே எனக்கு ஏக்கமாக இருந்தது....

சில மணி நேரத்திற்குள் ஆயிரமாயிரம் மக்கள் மந்தைகள் போல குவிக்கப் பட்டோம். ஏதோ சொன்னார்கள். துப்பாக்கியும் கொடூரமும் நிறைந்த அவர்கள் அப்பாவியான மக்களின் பேரால், மக்களுக்காகவே போராடுவதாக சொன்னார்கள். இன்னும் ஏதேதோ சொன்னார்கள். யாரும் அழுவதைத் தவிர வேறொன்றுமே செய்யமுடியாதிருந்தனர்.

"எல்லோருமே இன்னும் ஒரு மணி நேர அவகாசத்தினுள் புறப்படணும்" என்ற கொடூரமிக்க கட்டளை வந்ததும் எனது ஆத்மா மீது இடிவிழுந்தது. நான் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதியைப் போல், உலகமே என் பாகங்களைவிட்டு நழுவியது போல், பாதாள உலகில் முகங்குப்பற நான் காத்திருப்பது போல், உணர்ந்தேன். எனது இளமை வாழ்வில் வேதனைமிக்க துன்பகரமான இச்சூழலை எதிர்கொள்ள வேண்டுமென நான் ஒரு போதும் எண்ணியிருக்கவில்லை. எந்த இளைஞனும்-யுவதியும் இந்நிலையை வாழ்வில் அனுபவிக்கக்கூடாது, என்பதே எனது பிரார்த்தனையாகும்.

பகலின் மீது இருள் கவியத் தொடங்கிய போது எனது மண்ணைவிட்டு நாங்கள் புறப்பட்டோம். எங்கே செல்கிறோம்? என்ன செய்யப்போகிறோம்? எதிர்கால வாழ்வு எப்படியிருக்கும் என்று தெரியாத நிலையில்! அனைத்தும் இருண்டு போய் இருளின் ஊடே எங்கள் பயணம் தொடர்ந்தது.

இன்று எமது மண்ணிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள பிரதேசத்தில் அகதியாக அல்லல் படுகிறோம். இருப்பதற்கு இடமில்லை, உண்பதற்கு உணவில்லை, துன்பங்கள், அவலங்கள் எங்கள் மேல் கவிந்திருக்கிறது. எங்களை வெளியேற்றியவர்களை அந்த மண்ணில் இருப்பவர்கள் இன்னும் வெறுக்கிறார்கள் என்பதை நான் சந்திக்கும் சகோதரர்கள் இன்னும் வெளிப்படுத்துகிறார்கள்.

எனது நம்பிக்கை இதுதான். எனது வாழ்வின் முடிவு எனது மண்ணிலேயே முடியவேண்டும். "எப்போதாவது ஒரு நாள் எனது பாதம் பட்ட பூமியை முத்தமிடுவேன்" அதுவரை என் உயிர் போய் விடக்கூடாது. இது எனது நம்பிக்கை மட்டுமல்ல ஆயிரமாயிரம் எம்மவர்களின் நம்பிக்கையும்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# முள்ளான கனவு

'நள்ளிரவுதான் - ஆனால்-நல்லிரவல்ல! மஞ்சத்தில் கிடந்த பூஞ்சரம் மனதுக்குள் சொல்லிக் கொண்டது.

துடியிடை துவண்டு கிடந்தது- ஆனால்- தூக்கம் வந்து தொட்டுத் தழுவ மறுத்தது.

கண்களை மூடினாள்.

ஆலிலை போன்ற வயிற்றில் அவன் விரல்களால் விஷமம் செய்தான். விரல்கள் பட்ட இடம் குளிர்ந்தது. படாத இடமெல்லாம் தணலாய் கொதித்தது. முகம் செம் மாம்பழமாய் சிவந்தது.

"பூங்குழலி!" என்றான், ஆலிலை வயிற்றில் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்த காளை.

"என்ன" என்றாள், அவன் முகம் நோக்க வெட்கப்பட்டுக் கொண்டே அந்தப் பூமாலை.

"இயற்கையா செயற்கையா?"

என்றான். ஏதோ விஷமமான கேள்வி என்று மட்டும் தெரியும். எதைக் கேட்கிறான் என்று மட்டும் தெரியவில்லை. அவனது இடது கரம் வயிற்றில் இருந்து நழுவி, வாழைத் தண்டுகளில் ஒன்றைத் தொட்டபோது புரிந்தது. வியக்கின்றான் என்பது மனதுக்குள் இனித்தது. பொய்யான வியப்போ என்று மனதின் ஓரத்தில் ஒரு சந்தேகம் எட்டிப்பார்த்தது.

"காரியம் ஆகவேண்டுமானால்

# இலக்கிய நயம்

## தருவது- ரசிகன்

கால்பிடிக்க வேண்டும் என்று கற்று வைத்திருக்கிறீர்கள்".

பூங்குழலி சொல்ல காளை நகைத்தான்.

"கால்கள் என்று நீ சொல்லித்தானே தெரிகிறது."

"இல்லாவிட்டால் தெரியாதாக்கும்"

மெல்ல, மெல்ல கரம் இறக்கியபடி காளை சொன்னான்:

"வாழைத் தோட்டத்திற்குள் வந்து விழுந்து விட்டேனோ என்று நினைத்து விட்டேன். ஆனாலும், ஒரு ஆச்சரியம்!"

"ம் ஹூம் ... என்ன ஆச்சரியம்?"

"கீழே வாழை, மேலே தென்னை. அது எப்படி?"

"புலம்பல்!"

"எது புலம்பல், வாழைத்தண்டுகள் தாங்கும் மேனியில் செவ்விளநீகள் வந்தது எப்படி? செப்படி வித்தையோ? சொக்குப் பொடி போட்டு, புதிர் வளர்த்து, தப்ப முடியாத கிடுக்கிப் பிடியில் ஆண்களை சிக்கவைப்பதன் பெயர்தான் பெண்மையோ?"

காளையை நோகாமல் தள்ளிவிட்டு, பூங்குழலி மஞ்சத்தில அசைந்து விலகினாள்.

"நாங்கள் பொடியும் போடவில்லை. பிடியும் போடவில்லை. குழைவீர்கள். குற்றம் சொல்வீர்கள். வழிவீர்கள். பின்னர் பழிப்பீர்கள். இந்த ஆண்களே இப்படித்தான்."

பொய்க் கோபத்தில் தோய்த்தெடுத்த வார்த்தைகள். அதனால் சூடிருக்கவில்லை. சுவையிருந்தது. பொய்யாக விலகிய போதும் அவன் மீண்டும் நெருங்கிவர வேண்டும் என்று எதிர்பார்ப்பு இருந்தது.



விலகுவது போல் ஒரு நடிப்பு. விஷமம் தாங்க முடியவில்லை என்பது போல் பொய்யாக ஒரு துடிப்பு.

மேனி எழில் வியக்கப்படுவது கண்டு மனதுக்குள் ஒரு ரசிப்பு. வியக்கப்படுவதை விரும்பாதது போல முகத்தில் ஒரு பொய் முறைப்பு.

அணைக்கும் போது நழுவும் மீன் போல பொய்யாக ஒரு மறுப்பு. அணைக்கப் பட்ட பின்போ வலை இறுக வேண்டும் என்று விருப்பு.

கூடலில் பெண்களின் குணமே அதுதான் என்று தன் நண்பன் ஒருவன் சொன்னதை நினைத்துக் கொண்டான் காளை. அதனால் சிரித்துக் கொண்டான்.

"என்ன சிரிப்பு?"

"கைக் கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்று ஏமாந்து போனவனின் சிரிப்பு."

"ஓ... ஹோ.... வைத்தியமோ என்று நினைத்து விட்டேன்."

என்று சொல்லி குறும்பு நகை வீசினாள். 'அருகில் வருவதற்கென்னவாம்' என்று மனதுக்குள் நினைத்தாள். அவன் வருவதாகத் தெரியவில்லை. ஆசை வெட்கமறியுமோ? அவளே மீண்டும் அவனை நோக்கி நகர்ந்தாள். அவன் இடது கரத்தை எடுத்து தன் நெஞ்சில் வைத்துக் கொண்டாள்.

தானாக நெருங்கி வந்ததற்கு ஒரு காரணம் சொல்ல வேண்டாமோ? சொன்னாள்.

"பாவமாக இருக்கிறது உங்களைப் பார்க்க. வாயைக் கொஞ்சம் அடக்கி வைத்தால் என்னவாம்? வாயடிப்பதும் ஏன், பின்னர் வாடி இருப்பதும் ஏன்?" பேச்சையே காணவில்லையே, கோபந்தானே?

"கோபமா? எனக்கா ஏன்?"

"நான் தள்ளிப் போனதால்-கிள்ளிப் போட்ட பூப்போல முகம் வாடி விட்டது."

"ஆமாம் வாடிவிட்டது. வாடிய செடிக்கு வைத்தியம் என்ன?"

"வைத்தியம்... ஆ... நீரூற்ற வேண்டும்."

"எனக்கு தேனூற்ற வேண்டும்."

"ஆசை அதிகம் உங்களுக்கு!"

"தேவைக்கு மேலே தேடுவதுதான் பேராசை. தேவைக்கு ஏற்பவே தேவதை நீ வரம் கொடுக்கவில்லையென்றால் என் ஆசை நிராசை! நிறைவேறுமா என் ஆசை?"

விடை அவன் சொல்லவில்லை. சொந்த வீணையை மீட்ட எதற்கு அனுமதி? வீணை அவன் வசமானது.

கண்களைத் திறந்தாள் பூங்குழலி. இனிய நினைவு நெஞ்சு முழுக்க முட்டிக் கொண்டிருக்கிறது.

நெஞ்சில் முட்டி கண்கள் வழியே நினைவு வழிகிறது. கிண்ணத்தில் நிறைந்த மது அருந்திவிட்டால் மறைந்து போகும். எண்ணத்தில் நிறைந்த நினைவு, நினைக்க நினைக்க வளர்ந்து செல்லும். மனதால் அருந்த, அருந்த நிறைந்து போகும்.

மது வெறியூட்டும். நினைவும் வெறியூட்டும். நினைப்புக்கு உரியவன் அணைப்புக்குரிய தூரத்தில் இல்லையென்றால் வலியூட்டும்.

பூங்குழலிக்கு மனது வலித்தது. கனவு முள்ளாய் குத்தியது.

வாளேந்தி களம் சென்றவன் கரம் விரித்துக் கொண்டு, அவளை சரமாக சூடும் நாள் வரும்வரை கனவுகள் முட்களாய் மனதைத் தைக்கும்.

பூங்குழலி பெருமூச்செறிந்தாள்.

'என் காதலா, எரிக்கிறதே இந்த நள்ளிரவு நிலா! கனவுகளில் முட்களா? என் காதலா, உனக்கும் இப்படித்தான் அங்கும் கனவுகளால் காயமா?'

பூங்குழலி கண்களை மூடப் பயந்து நினைவுகளை கவிதை மயமாக்கினாள்.

'பாவம் இந்த இரவு. தனித்திருக்கும் இரவுக்கு துணை யார் சொல்லவா? காதலன் வரவுக்காக காத்திருக்கும் நான்தான் அல்லவா!'

'சேர்ந்திருக்கும் போது இரவு போர்வையாகிறது. தனித்திருக்கும் போது இரவு துணையாகிறது. அந்தப் பொல்லாத நிலா மட்டும் எட்டிப் பார்த்து கேலி செய்கிறது. இரக்கமற்ற நிலா!'

பூங்குழலிக்கு சோகம் ஒரு பாறாங் கல்லாய் அழுத்தியது. புரண்டு படுத்தாள். திரண்ட சோகம் தீரவேயில்லை.

'இன்பக் கடல் இதுவென்று களித்திருந் தோமே. இப்போது பிரிவு கடலைவிட பெரிதாக விரிந்து வருத்துகிறதே! இது என்ன கொடுமை'

என்று மனம் வினா தொடுத்தது. வினாவுக்கு மனமே விடையும் சொன்னது.

"ஆசை என்பது வெள்ளம். வெள்ளத்தில் வீழ்ந்தால் கரை சேருவதே இன்பம். வெள்ளத்தில் வீழ்ந்ததும் உண்மை. நீந்திச்



சென்றதும் உண்மை. கரை சேரவில்லையே இன்னும்! அதுதான் துன்பம்!"

மனதுக்குள் விவாத அரங்கம். விடை சொன்ன மனதை வேறொரு கேள்வியால் விசாரித்தாள் பூங்குழலி.

"எப்படிச் செல்கிறாய் மனமே. கரை சேரவில்லை என்று?"

"காதலரோடு இருந்தபோது வெள்ளத்தில் நீந்தினாய். இப்போதோ நள்ளிரவு, நீயோ தனித்திருக்கிறாய். ஆகவே கரையை நீ காணவில்லை. அதுதானே கலங்குகிறாய்!"

விடைகேட்ட பூங்குழலிக்கு திருக்குறள் ஒன்று நினைவுக்கு வந்தது.

**"காமக் கடும் புனல் நீந்திக் கரை காணேன் யாமத்தும் யானே உளேன்"**

குறள் - 1167. அதிகாரம் - 117

## குறுக்கெழுத்துப் போட்டி இல-117

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | ■ | 3 |
| | ■ | | ■ | 4 | 5 | |
| 6 | | | | ■ | | |
| | ■ | | ■ | 7 | ■ | |
| ■ | 8 | | 9 | | | |
| 10 | | | | | ■ | ■ |
| 11 | | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

01. இங்கு முழுக்க முழுக்க மணல்தான் உள்ளது.
04. இது ஊளையிடும்.
06. தாய் மொழியைப் பேசும்போது இப்படி பேச வேண்டும்
09. மனிதனின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை.
10. எமது நாட்டில் இதற்காகத்தான் அதிகம் பணம் செலவிடப்படுகின்றது.
11. பரீட்சை எழுதும் மாணவர்கள், குறிப்பிட்ட நேரத்திற்குள் விடையளிக்க வேண்டுமெனில் இது அவசியம்.
12. ஒரு வகைப்பூ.

### மேலிருந்து கீழ்

01. சைவ விருந்துகளின் போது இதுவும் பரிமாறப்படும்.
02. நடிகர் எம்.ஜி.ஆரை இப்படியும் அழைப்பார்கள்.
03. குழந்தைகளுக்கான போசாக்குள்ள சிறந்த உணவு இதுதான்.
05. இந்தப் பறவை ஒரு மாமிசபட்சணி.
07. இதைக்காட்டி குழந்தைகளுக்குச் சோறூட்டுவார்கள்.
08. தமிழுக்குச் சங்கம் அமைத்த எமது அண்டைநாட்டிலுள்ள ஊர்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 16.09.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-117
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-115ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ஊ | ■ | 2 ச | ன் | னி | 3 யா | 4 சி |
| 5 து | தி | க் | கை | ■ | ழ் | று |
| 6 வ | ர | க | ரி | 7 சி | ■ | க |
| ர் | ■ | ர | ■ | ப் | 8 கு | தை |
| த் | ■ | ம் | ■ | ப | த் | ■ |
| 9 தி | றை | ■ | 10 சி | ந் | த | னை |
| ■ | 11 கா | ர் | த் | தி | கை | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 115இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. கே. விஜய் ஆனந்த், கொழும்பு-13
2. பி. கலாதேவி, பூண்டுலோயா.
3. எம். பெரோஸ், சிலாபம்.
4. ஏ. பாத்திமா ஹில்மியா, ஏறாவூர்-06.
5. செல்வன். ஆர். அஜந்த், மடுல்சீம.
6. திருமதி. எஸ். தேவராணி, வவுனியா.
7. செ. சுதர்சனி, செட்டிபாளையம்.
8. எம். ஹகீம், உக்குவளை.
9. கே. செல்வவடிவேல், காலி.
10. திருமதி. நபீலா லாபிர், புத்தளம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.





தம்மைத்தாமே ஞானி என்று சொல்லிக் கொள்பவர்கள் பற்றி கூறுங்களேன்.

எச்.எம். ரஷ்தி, கெக்கிராவ.

'அவர் ஒரு ஞானி' என்று நாங்கள் சொல்லப்போவதில்லை என்பதை நன்கு அறிந்துகொண்டதால், சுய விளம்பரம் அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது. -பிரேமானந்தா மாதிரி.

□□

**ரஜினியின் எதிர்காலம் என்ன?**

எஸ்.நந்து-கொழும்பு - 13

அது ஆண்டவனுக்கு மட்டும்தான் தெரியும் என்று ரஜினி சொல்லியிருக்கிறார். ஆகவே சிந்தியா எப்படி பதில் சொல்ல முடியும் நந்து? (என்றாலும் உனக்கு அடக்கம் அதிகம் தான் சிந்தியா)

□□

**ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்ட 'விதி' படம் பார்த்தீரா? 'டைகர் தயாநிதி' என்று வரும் வசனங்களில் டைகருக்கு என்ன நடந்தது?**

என்.சஹாப்தீன்-ஒட்டமாவடி

கத்தரிக்கோலை ஏந்தி நடத்தப்பட்ட 'முன்னேறிப் பாய்ச்சல்' தொடக்கத்தில் வேகமாக இருந்தது. பாய்ந்து, பாய்ந்து வெட்டியும், சில டைகர்கள் கொரில்லாப் பாணியில் ஒலித்ததை தடுக்கமுடியவில்லை. சிறுபிள்ளைத்தனமான முயற்சி.

□□

**மலையகத்தில் தனிப்பிராந்திய சபை கேட்பது பற்றி தங்கள் கருத்தென்ன?**

எஸ்.கோடீஸ்வரன்-பொகவந்தலாவ.

கோரிக்கை என்றளவில் மட்டும் அது இருக்கும்வரை, கூடுதலாகக் கேட்டு குறைவாகப் பெறும் அரசியல் தந்திரம் என்றே கொள்ளப்படும். கோரிக்கைக்காக போராடும்போதே கருத்துச் சொல்லு மளவுக்கு கவனத்தை ஈர்க்கும்.

□□

### பார்வதியின் கடைசி அஸ்திரம்

**டியர் சிந்தியா! அந்தக்கால காதலுக்கும், இந்தக் கால காதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

ஏ.மாக்கஸ்-கொழும்பு 15

முத்தே, முத்தாரமே என்றார்கள் அன்று. முக்காலா, முக்காபுலா என்கிறார்கள் இன்று. இன்றைய காதலில் அவசரமும் சற்றுக் கூடுதல்.

□□

**நம்நாட்டு அரசியல்வாதிகள் பற்றிய ஒரு அபிப்பிராயம் சொல்லுங்கள் சிந்தியா?**

எஸ்.தேவிகா-கல்முனை

நிறையப்பேசுகிறார்கள்; குறைச்சலாகச் செய்கிறார்கள்.

□□

**ரஜினிகாந்த் தமிழக முதல்வரானால் வடக்கு-கிழக்கு நிலமை எப்படி இருக்கும்?**

வெ. சந்திரசிவா-பறக்கடுவ

வன்முறையே வேண்டாம் என்று சொல்லப்போய் வம்பில் மாட்டிக் கொண்டிருக்கிறார். நம் நாட்டிலோ வன்முறை மட்டும்தான் அமோகவிளைச்சலாகிறது. இங்கும் ரஜினி கருத்துச் சொல்ல வந்தால் பெரியவம்பாகிவிடும். பாவம் ரஜினி. அவருக்கு ஏன் தொல்லை.

□□

**பெண்களைப் போன்று ஆண்களும் உடை அணியலாமா? உங்கள் கருத்து என்ன?**

கு.ரதீஸ்குமார்-கொக்கட்டிச்சோலை.

அணியலாமே! பார்ப்பவர்கள் தான் ஒரு மாதிரியாக நினைப்பார்கள். பரவாயில்லையே. ஆண்களைப் போன்ற தோற்றத்தோடு பெண்களைப் போல நடந்துகொள்பவர்களுக்கு என்ன பெயர் என்று தெரியும் தானே ரதீஸ்!

□□

**மூன்றாம் உலகப் போர் வந்தால் எங்கு ஒளிவீர்கள்?**

ஏ.மகேந்திரன்-பிரவுன்ஸ்

நம் நாட்டில் தான் ஒளிக்க வேண்டும். வெளிநாட்டுக்கு ஓடியும் தப்பமுடியாதல்லவா?

□□

**ஓய்வு எடுத்துக்கொண்டு மீண்டும் ஆடவந்த மைக் டைசனின் முதல் வெற்றி குறித்து உங்கள் கருத்து?**

என்.எம்.அஜர்தீன்-ஹொறவ்பொத்தானை.

டைசன் ஒருக்கா குத்தினா, அது நூறு தடவை குத்தினமாதிரி.

□□

**என்.டி.ராமராவ் ராஜினாமாச் செய்து விட்டாராமே?**

கே.ரவிக்குமார்-ஹட்டன்.

வெளியே போ என்று துரத்தப்படுவதைவிட, நானே போகிறேன் என்று சொல்லிவிடுவது உத்தமம் அல்லவா? அதுதான்.

□□

**ராமராவின் மனைவி பார்வதி மன்னிப்புக் கேட்டது அவரது பெருந்தன்மை என்று சொல்லமுடியுமா?**

எம்.மகேஸ்வரன்-நுவரெலியா.

பதவியைக் காப்பாற்ற பிரயோகிக்கப் பட்ட கடைசி அஸ்திரம் என்று சொல்லலாம்.

□□

**ஜரிஸ் மோனா கப்பல் கடத்தப் பட்டிருக்கிறதே. இதனையெல்லாம் முரசு கண்டிக்காதோ?**

வி.எல்.நூர்தீன்-மாத்தளை

அவசரப்படுகிறீர்கள் நூர்தீன். பூரண தகவல் பெற்று செய்தி வெளியிடுவதற்காகவே கடந்தவாரம் அச்செய்தி பிரசுரமாகவில்லை. பூரண தகவலே இல்லாதபோது கருத்துச் சொல்வது எப்படி? இப்போது சொல்லலாம். பயணிகள் கப்பலைக் கடத்தியதால் பாதிப்பு அரசாங்கத்திற்கல்ல. பயணிகளுக்குத்தான். கண்டிக்கப்பட வேண்டிய நடவடிக்கையும் கூட.



படிப்பகம்

www.padippakam.com

# மகாபாரதம்

அங்கம் 93

இவ்வாரம் (10.09.95 ஞாயிறு மாலை 7.00 மணி) எம்.ரி.வி.யில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:**

மாநிடத்தின் மேன்மைகளை மாய்த்துவிட்ட போர்தனை
பார்த்திருந்து பாரினுக்குப் பகரும் பொறுப்பேற்றிருந்தேன்!
சீரழிந்து சிதைந்து விட்ட சிங்காரப் பெருமைகளின்
சிட்டத்தின் மத்தியிலே சிக்கித்தவிக்கின்றேன்!
பாரதப் போரின்று பாரில் முடிவெய்தவில்லை—
கோரவுருக் கொண்டு கோலங்காட்டும் நாளை!
கொடுமைகளின் எதிரொலியை என்றும் பறைசாற்றும்
அடுத்துவரும் பணியை அஸ்தினாபுரம் பார்ப்போம்!

—காட்சி தொடக்கம்—

திருதராட்டிரர் அரண்மனை- மன்னரிடம் விதுரர் வருகிறார்.

**திருத:** கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சிதரும் உன் அண்ணனைப் பார்த்தாயா? எனது துயரங்களில் பங்கேற்க வந்திருக்கிறாய் என்று கருதுகிறேன். உனக்கு நீண்ட ஆயுள் கிடைக்கட்டும் என்று வாழ்த்தட்டுமா தம்பி!

**விதுர:** வேண்டாம் அண்ணா!

**திருத:** அவ்வாறானால் உனது துயரத்தைத் தெரிவித்து விட்டுப் போய்விடு! என்னுடைய கண்ணீருடன் நான் தனியாகத் தவிக்கிறேன்! தம்பி விதுரா! துரியோதனனுடைய தொடையினை வீமன் உடைத்து அவனைக் கொன்றுவிட்ட செய்தி உனக்குத் தெரியாது போலும்!

**விதுர:** என்ன அண்ணா.....!

**திருத:** உன்னால் என் துன்பத்துக்காக வேனும் அனுதாபம் தெரிவிக்க முடியாதா? இறந்தவர்கள் எனது புதல்வர்கள் அல்லவா தம்பி விதுரா?

**விதுர:** அவர்கள் உங்கள் மைந்தர்கள் தான்; ஆனால் அவர்கள் அரசியல் சதுரங்கத்தில் பகடைக்காய்களாக இருந்தனர்! பகடைகளாகவே நகர்த்தப்பட்டார்கள்! அவர்களைப் பணயமாக வைத்து சதுரங்கம் ஆடியவர் தாங்களே! தோற்றதும் தாங்களே!

**திருத:** உன்னுடைய இதயத்தில் இன்னும் நீதிநெறி என்ற புத்தகம் தான் விரிக்கப்பட்டுக்கிடக்கிறதா? என்னுடைய கண்ணீர்கூட உன்னைக் கலங்கவைக்க முடியாத அளவு இரும்பு இதயம் படைத்தவனா நீ? இது தானா உன் வேத நெறி?

**விதுர:** தர்ம நெறிமுறைகளையிட்டு எதையும் பேசாதீர்கள் அண்ணா! சன்மார்க்க நெறிகள் அண்டசராசரம் அனைத்துக்குமே பொதுவானது. தங்கள் வசதிகளுக்கேற்ப அவற்றைப் பயன்படுத்தலாகாது. சுத்தமான சுவாசத்துக்காக காற்றைத் தூய்மையாக வைத்திருப்பதும், பருகுவதற்காக நீரைப் பரிசுத்தமாக வைத்திருப்பதும், மரஞ்செடி கொடிகளைப் பாதுகாப்பதும் தூய நெறி முறைகளின் தன்மையோடிசைந்தவையே! இந்தப் போரில் உங்களை எதிர்த்துப் போரிட்டதே ஒரு வகையில் தர்மநெறியேயாகும்! பாண்டவர்கள் தங்கள் தர்மத்தைப் பாதுகாக்க எண்ணற்ற கொடுமைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆகவே அவர்கள் வாழ்த்துப் பெற வேண்டியவர்கள்!

**திருத:** நான் மட்டும்தான் பாவவாளியா?

**விதுர:** தர்மநெறிகளுக்கு மாறாக நீங்கள் இருந்திராவிட்டால் இன்று நீங்கள் உங்கள் புத்திரர்களுக்காகக் கலங்க வேண்டியிருக்காது. தாங்கள் ஒரு அரசன் என்பதனை மறந்து தந்தை என்ற நிலையினை மட்டும் கடைப்பிடித்தீர்கள்! இருதயங்களுக்கிடையே சுவரை எழுப்புவது, சுய இச்சைகளுக்கு அடிமையாவது ஆகிய இவை எதுவும் தர்மநெறிகளேயல்ல; ஆனால் இவற்றையே நீங்கள் கடைப்பிடித்தீர்கள்! தர்ம நெறிகள் உங்களைப் பொறுத்தவரை கசப்பான உண்மைகளாகவே தென்பட்டன; இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள்! நீங்கள் எல்லாவற்றையும் இன்னும் இழந்துவிடவில்லை அண்ணா!

**திருத:** கசப்பான வார்த்தைகளையே போற்றுகிறாய்! இன்னும் என்னதான் மீதமாகக் கிடக்கிறது? என் அன்புக்குப் பாத்திரமானவர்களின் சடலங்கள் மட்டும் தான் எஞ்சியுள்ளன!

**விதுர:** உங்கள் ஆன்மா! அந்த ஆண்டவனால் ஆட்சி செலுத்தப்படும் ஆன்மா- இன்னமும் இருக்கிறதே! அஸ்தினாபுரத்தின் மத்தியில் நின்று 'ஏ அஸ்தினாபுரமே! என்னை மன்னித்துவிடு' என்று உரக்கக் கூவுங்கள்....!

**திருத:** என்னுடைய புதல்வர்கள் இறந்தமைக்காக என்னுடன் சேர்ந்து வருந்தாத இந்த நாட்டிடம் நான் மன்னிப்புக் கோரத்தான் வேண்டுமா?

**விதுர:** உங்கள் துயரத்தில் இந்த நாடு ஏன் பங்கேற்க வேண்டும்? நீங்கள் உங்கள் 100 புதல்வர்களுக்காக வருந்துகிறீர்கள். ஆனால் அஸ்தினாபுரம் எண்ணிறந்த தன் மைந்தர்களைப் பறிகொடுத்திருக்கிறதே! உங்கள் மைந்தர்களும் அஸ்தினாபுரியின் புதல்வர்கள்தானே?

**திருத:** எனது பிள்ளைகளுக்காக நான் அழும் உரிமையும் எனக்கில்லையா? இதற்கும் தர்ம நெறிகள் இடம் தராதா?

**விதுர:** ஏன் இல்லை! தர்ம நெறிகள் ஆற்றைப் போன்றவை! அருகிலுள்ள வயல்களுக்கும், தொலைவிலுள்ள மக்களுக்கும் ஆறு நீரை வழங்கவே செய்யும்! ஆனால் அதற்கு எவரும் தனி உரிமை கோர முடியாது. ஒரு தந்தை தன் பிள்ளைகள் மீது அன்பு செலுத்தலாம். ஆனால், தர்ம நெறிகளுக்கு சொந்தம் என்பது கிடையாது. இதனை மனதில் கொள்ளாதிருந்து விட்டீர்கள். உங்கள் அபிலாசை என்னும் தீப் பந்தத்தை உங்கள் மகனின் கைகளில் கொடுத்தீர்கள்; அதனைச் சந்திரன் என்று கூறி நம்பவைத்தீர்கள். தந்தையின் வார்த்தைகளை மைந்தன் நம்பினான். மென்மேலும் அந்தத் தீக்கு எண்ணை ஊற்றி வளர்த்தீர்கள்! இந்தத் தீயே அவனை இறுதியில் ஆரத்தழுவி அவனை ஆகர்ஷித்துக் கொண்டது. அவனைக் குருச்சேத்திரமுனைக்கு இழுத்துச் சென்றதும் உங்கள் ஆசைகளே! இவற்றுக்கெல்லாம் உங்களையே வரலாறு காரணகர்த்தாவாகச் சுட்டிக்காட்டப்போகிறது!

**திருத:** விதுரா! எப்போதும் போல் இப்போதும் கசப்பான உண்மைகளைக் கூறி என்னைக் கண்கலங்க வைக்கிறாயே!

**விதுர:** நானே கண்கலங்குவதால் எனது வார்த்தைகளும் தங்களைக் கலங்க வைக்கின்றன அண்ணா! தங்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கவேண்டியிருக்கிறது.

**திருத:** எனக்குக் கட்டளையிடும் தகுதி உனக்கு மட்டும்தானே உண்டு தம்பி! என்ன செய்ய வேண்டும்? சொல்!

**விதுர:** வெற்றி பெற்ற பாண்டவர்கள் அஸ்தினாபுரிக்கு வந்துவிட்டார்கள். தங்களிடம் ஆசிகோர வருவார்கள். அவர்களுக்கு நல்லாசி வழங்கிவிட்டு தாங்கள் கானகம் ஏகவேண்டும்!

**திருத:** அஸ்தினாபுரம் கண்ணீர் விடும் கண்கள் நிறைந்த கானகம் போலுள்ளதே தம்பி!

**விதுர:** அண்ணா! தாங்கள் அஸ்தினாபுரியின் இறந்தகாலம்! நிகழ்காலத்தை வரவேற்பது தங்கள் கடமை! அதன்பின்னர் தாங்கள் இருளில் மறைந்துவிட வேண்டியதுதான்! ஆகவே உங்கள் துன்ப துயரங்களை மறந்து கானகம் ஏகத் தயாராகுங்கள். அண்ணிமார் காந்தாரியும், குந்தியும் தங்களுடன் கானகம் வரத்தீர்மானித்து விட்டனர்!

**திருத:** அவர்களை நான் எதிர்கொள்ள முடியாத நிலையிலுள்ளேன் விதுரா!

**விதுர:** அவர்களைச் சந்திப்பதில் தான் தங்கள் பாவவிமோசனம் தங்கியிருக்கிறது. அதுவே தங்களுக்கான தண்டனையும் பிராயச்சித்தமுமாகும். குருச்சேத்திரத்தின் இரு முனைகளிலும் அவர்களது தலைவிதியின் பிணக்கு வியலுடன் நின்ற தாய்மார்கள் அல்லவா அவர்கள்? இதனை நீங்கள் அவர்களுடன் ஒன்றாக இருக்கும் போதுதான் உணர்வீர்கள்!

அரண்மனைக்கு வெளியே பாண்டவர்களை வாழ்த்தி மக்கள் எழுப்பும் வாழ்த்தொலி கேட்கிறது.

**மக்கள்:** மாமன்னர் யுதிஷ்டிரர் வாழ்க...!

**விதுர:** தங்கள் கண்ணீரைத் துடைத்துவிட்டு வீரர்களாக வரும் தங்கள் புதல்வர்களை- ஒரு சத்திரியனைப் போல் வரவேற்கத் தயாராகுங்கள்!

கிருஷ்ணருடன் பாண்டவர்கள் அரண்மனைக்குள் பிரவேசிக்கின்றனர்.

**விதுர:** மகிழ்விழந்து கண்ணீருகுக்கும் இந்த மாளிகை உங்களை வரவேற்கிறது. பாண்டு புத்திரர்களே! மாமன்னர் யுதிஷ்டிரரே! வருக வருக...!

**யுதிஷ்:** தங்கள் பாதம் பணிந்து ஆசி பெற அனுமதிக்க மாட்டீர்களா சித்தப்பா?

**விதுர:** முதலில் உங்கள் பெரியப்பாவின் ஆசியைப் பெறுங்கள்! நான் இங்கே தானே இருப்பேன்! வாருங்கள் வாசுதேவரே!

**கிருஷ்:** மகாத்மா விதுரரே! எவ்வாறிருக்கிறீர்கள்?

**விதுர:** இத்தகையதொரு வினாவுக்கு இன்று அஸ்தினாபுரியில் எதுவித அர்த்தமுமில்லை வாசுதேவா! நான் எவ்வாறிருக்கிறேன் என்று எனக்கே தெரியாது. எனது இதயம் சொஸ்தப்படுத்த முடியாதபடி துன்பத்தில் துண்டாடப்பட்டிருக்கிறது என்பதனை மட்டும் நான் உணரக்கூடியதாக இருக்கிறது. நீங்கள் எல்லோரும் அண்ணன் திருதராட்டிரரை முதலில் பார்ப்பதே நலம். வாருங்கள்!

**திருத:** தயவுசெய்து ஒவ்வொருவராக வாருங்கள். அப்போது தான் உங்களை அடையாளம் காண்பது சுலபமாக இருக்கும்!

கிருஷ்ணர் முதலில் செல்கிறார்.

**திருத:** வாசுதேவா! இந்த உடைந்து-நொந்து போனவன் உம்மை வரவேற்கிறான்!



**கிருஷ்:** வாசுதேவ கிருஷ்ணனாகிய நான், அஸ்தினாபுரத்தின் மாமன்னனாகிய தங்களுக்கு எனது மரியாதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

**திருத:** (சிரிப்புடன்) எனது புதல்வர்கள் மாண்டுபோனமைக்காக அனுதாபம் தெரிவிப்பாய் என்று எண்ணினேன்.

**கிருஷ்:** அத்தகைய சம்பிரதாயங்களில் எனக்கு நம்பிக்கை கிடையாது மன்னவரே! இறந்து போனவர்களெல்லாம் தாமாகவே இத்தகைய முடிவினைத் தேடிக் கொண்டார்கள். நான் அனுதாபம் தெரிவிப்பதன் மூலம் தங்கள் துயரங்களை மீண்டும் நினைவூட்டுபவனாகிவிடமாட்டேனா மகாராஜா!

**திருத:** (சற்றுக் கோபமாக) மீண்டும் மீண்டும் மகாராஜா என்று ஏன் என்னை அழைக்கிறீர்? நான் போரில் தோற்றுப் போய்விட்டேன்! என் அன்புக்குப் பாத்திரவாளியான யுதிஷ்டிரன் தானே இனிமேல் அஸ்தினாபுரி மாமன்னன்! அன்று சமாதானத் தீர்வுத்திட்டத்துடன் நீர் வந்தபோது, "யுத்தம் ஏற்பட்டால் அதற்கு முழுப்பொறுப்பாளி நான் தான் என்று வரலாறு குற்றம் சாட்டும்" என்றீர்! அது உண்மையாகிவிட்டது.

**கிருஷ்:** யுத்தத்துக்கு காரணகர்த்தா தாங்கள் தான் என்பதால் வரலாறு தங்களையே முழுப்பொறுப்பாளி என்று சுட்டிக் காட்டத்தான் செய்யும் மகாராஜா!

**திருத:** மீண்டும் மீண்டும் என்னை ஏன் மகாராஜா என்று அழைக்க முற்படுகிறீர்? நான் அரசனாக வீற்றிருந்தபோது என் தாத்தா பீஷ்மர் இங்கு அமர்ந் திருந்தார். துரோணாச்சாரியார், குலகுரு கிருபாச்சாரியர், எனது அன்புமகன் துரியோதனன் ஆகியோர் சூழ்ந்திருந்தனர். எனது 100 புதல்வர்களும் சபையில் நிறைந்து பொலிவூட்டினர். இன்று எனது ராஜ்ஜியம் என்று எதனைக் கூற முடியும்? (சற்றுக் கோபமாக) உண்மையில் இந்த அரியாசனத்துக்கு உரித்துடையவன் நானேதான்! எனக்குப்பிறகு துரியோதனனுக்குச் சேர்ந்திருக்க வேண்டியது. இன்று போரில் தோல்விகண்டமையினால் சத்திரியனைப் போல் அரியணையிலிருந்து இறங்கிவிட்டேன். இதனால் எனது தம்பி மக்களுக்கு ஆசி வழங்க மாட்டேன் என்று அர்த்தம் கொள்ளலாகாது.

**யுதிஷ்:** வணக்கம் பெரியப்பா....!

**திருத:** இறைவன் அருள்பாலிப்பானாக! நீடித்த ஆயுளும் புகழும் பெறுவாய் மகனே! அஸ்தினாபுரத்தின் மாமன்னனே! இந்த மாளிகைக்கு உன்னை வரவேற்கிறேன்!

**யுதிஷ்:** பெரியப்பா! தாங்கள் தான் மகாராஜா....தாங்கள்....!

**திருத:** நான் உங்கள் பெரியப்பா! ஒரு சத்திரியனும்கூட. இந்த ராஜ்ஜியத்தை ஒரு தர்மம் போல் எனக்குத் திருப்பித்தர எத்தனிக்க வேண்டாம்! உனது தம்பிமார் பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோரை அழைத்து வா மகனே!

திருதராட்டிரரை பீமன் அணுகியதும் கிருஷ்ணர் சைகை செய்கிறார். அருகே இருந்த - பீமனைப் போன்ற சிலையினைச் சுட்டிக்காட்டுகிறார். அந்தச் சிலையை அரக்கிக் கொண்டுவந்து திருதராட்டிரர் முன் நிறுத்திவிட்டு குனிந்து அவரின் பாதங்களை தொட்டு வணங்குகிறான்.

**திருத:** எனது பாதங்களைத் தொடாதே! உன்னைக் கட்டி அணைக்கப் போகிறேன்.

மன்னருக்கு அருகில் பீமன் சிலையைத் தள்ளிவிடுகிறான். திருதராட்டிரர் அதனைக் கட்டி அணைத்ததும் சிலை நொருங்குகிறது. "துரியோதனா" என்று கோபத்துடன் கத்துகிறார். பின்னர் பீமனை நெரித்துக் கொன்றுவிட்டதாக அழுகிறார்.

**திருத:** ஓ அன்புத் தம்பி பாண்டு....! உன் மகன் பீமனை கொன்றுவிட்டேனடா..!

**கிருஷ்:** இல்லை மன்னவரே! தாங்கள் பீமனிடம் கடுங்கோபங் கொண்டிருப்பதை நான் அறிவேன். ஆகவே பீமனைத் தங்களிடம் நெருங்கி வராமல் நான் தான் தடுத்தேன்!

**திருத:** என்ன? பீமன் இன்னும் உயிருடன் இருக்கிறானா?

**பீமன்:** தங்களின் ஆசிக்காக நான் காத்து நிற்கிறேன் பெரியப்பா! இன்னும் தங்கள் கோபம் அடங்கவில்லையானால் இதோ என்னை அணைத்துக் கொல்லுங்கள்!

**திருத:** இல்லை மகனே! தனது மைந்தர்களையெல்லாம் இழந்த தந்தையின் குமுறலின் எதிரொலி அது! இனிமேலும் இளையவர்களை இழக்க நான் தயாராயில்லை!

**திருத:** தங்கள் மார்பிலேற்பட்ட காயங்களிலிருந்து வடியும் இரத்தத்தைத் துடைக்கட்டுமா பெரியப்பா!

**திருத:** நீடூழி வாழ்வாய் மகனே!

—காட்சி மாற்றம்—

வியாச முனிவர் காந்தாரியின் அந்தப்புரம் வருகிறார்.

**காந்தா:** மாமுனிவரே! தங்கள் வரவு நல்வரவாகுக! குருச்சேத்திரத்தில் எங்கள் நிலை எவ்வாறாகிவிட்டது என்று பார்த்தீர்களா...?

**வியாச:** உனது மகன் உண்மைக்குப் புறம்பாக நடந்துகொண்டிருந்தான் என்பதனால் அவனுக்கு வெற்றி கிட்டட்டும் என்ற வாழ்த்தினைத் தராதிருந்தாய்! அவ்வாறிருக்கும்போது பாண்டவர்களைச் சபிக்க உன்னால் எப்படி முடியும்?

**காந்தா:** தன் மகனை வாழ்த்தாதிருந்த காந்தாரி! அப்போது அஸ்தினாபுரத்தின் மகாராணி! பாண்டவர்களை சபிக்கக் கருதும் காந்தாரியோ, ஒரே யுத்தத்தில் தன் மைந்தர்கள் நூறு பேரைப் பறிகொடுத்தவள்.

**வியாச:** அபிமன்யு மற்றும் திரௌபதியின் ஐந்து புதல்வர்களின் பிரேதங்களை மூடிய துணிகளை எடுத்து உன் கண்களைத் துடைத்துக்கொள்! உண்மைக்கும் பொய்மைக்கும் இடையில் நடைபெற்ற இந்தப் போரில் உயிரற்ற சடலங்களை அடையாளம் காண்பதை விட்டுவிடு.

**காந்தா:** தர்மயுத்தம் என்று கருதப்படுவதானால், யுத்த தருமம் கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டாமா? துச்சாதனனின் மரணம்தான் எனக்கு மிகவும் வேதனை தருகிறது. அவனுடைய குருதியினை பீமன் பருகியிருக்கக் கூடாதல்லவா?

**வியாச:** யுத்தத்தைப் பற்றி பரிசீலனை செய்யவோ ஆராய்ச்சி செய்யவோ இது நேரமல்ல காந்தாரி! அதனை வரலாறு ஆய்வு செய்யட்டும்! சரித்திரம் எப்போதும் தவறிழைக்காது. ஆகவே அதனைவிட்டுவிடு. இப்பொழுது அவர்களை நீ சபிக்க நினைத்தால் அவ்வாறே செய்! அவர்கள் அதனை உனது வாழ்த்தாகவே ஏற்றுக்கொள்வார்கள்!

**பின்னணிப் பாடல்:**

அன்னையினுள்ளமே அன்பின் ஆழ்கடல்
அதற்கிணையானதோர் அற்புதம் வேறிலை
மன்னவராயினும் மதிப்புடைஞானியும்
மேனிலை எய்திட அன்னையே அருந்துணை!

பாண்டவர்கள் குந்தியுடன் காந்தாரியைக் காணச்செல்கின்றனர்.

**குந்தி:** வணக்கம் அக்கா! உங்கள் ஐந்து புதல்வர்களும் வாசுதேவனும் என்னுடன் வந்துள்ளனர் அக்கா!

**யுதிஷ்:** வணக்கம் பெரியம்மா!

**காந்தா:** என்றும் மகிழ்ச்சியாக வாழ்வாயாக மகனே!

**யுதிஷ்:** அத்தகைய மகிழ்ச்சியை என்னிடம் வா என்று கட்டளையிட முடியாத நிலையில் இருக்கிறேன் பெரியம்மா! எனது தம்பி பீமன், துச்சாதனனின் இரத்தத்தைக் குடித்ததையும் துரியோதனனின் தொடையினை உடைத்ததையும் எனது ஏனைய தம்பிமாருடன் நானும் அங்கீகரிக்கவில்லை!

**காந்தா:** அவன் தானிட்ட சபதத்துக்குக் கட்டுப்பட்டே அவ்வாறு செய்துள்ளான். திரௌபதியை மானபங்கப்படுத்தி, பாரத சமுதாயத்துக்கு மட்டுமல்லாமல் மனித வர்க்கத்தையே களங்கப்படுத்திய அவ்விருவருக்கும் பீமன் கொடுத்த ஆகக் குறைந்த தண்டனை அதுவாகும் மகனே! பீமன் அவர்களைக் கொல்லவில்லை; குற்றமிழைத்தவர்களைத் தண்டித்துள்ளான். இத்தண்டனை குற்றமாகாது மகனே!

**திருத:** காந்தாரி! உண்மையில் நானே குற்றவாளி! எனக்குத்தான் நீ சாபமிட வேண்டும்! அதன் பின்னர் நாம் இனி கானகம் செல்ல வேண்டும்!

**அர்ச்:** கானகமா? ஏன் நீங்கள் கானகம் ஏக வேண்டும்?

**குந்தி:** நிகழ்காலத்திற்கு இடங்கொடுப்பதற்காக இறந்தகாலம் வழி விட வேண்டும் அல்லவா? அப்போதுதான் நிகழ்காலம் உரிய இடத்துக்கு வர முடியும்!

**அர்ச்:** அம்மா! பெரியப்பா முதலானோருடன் தாங்களும் கானகம் ஏக வேண்டும் என்று கூறுகிறீர்களா?

**கிருஷ்:** அவரும் போகத்தான் வேண்டும் பார்த்தா! ஏனெனில் அத்தையும் இறந்த காலமல்லவா? எதிர்காலத்தில் ஒரு முதிர்ந்த மரத்தினை வெட்டிச் சாய்க்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அத்தகைய மரத்தின் கீழ் பெரியப்பா, பெரியம்மா காந்தாரி மற்றும் அத்தை குந்தி ஆகியோர் அமர்ந்து ஓய்வெடுத்திருப்பார்கள் என்பதனை நினைவில் வைத்திருங்கள்!

**விதுர:** வாசுதேவா! என்னையும் அவர்களுடன் சேர்த்துக் குறிப்பிட ஏன் மறந்துவிட்டீர்கள்?

**யுதிஷ்:** தாங்களும் எங்களை விட்டுச் செல்லப் போகிறீர்களா சித்தப்பா?

**விதுர:** நானும் கடந்த காலம் தானே?

**கிருஷ்:** மகாத்மா விதுரர் அவர்களே! எல்லோரும் மூத்தண்ணாவின் முடிசூட்டுவிழாவில் கலந்துகொண்டதன் பின்னர் தான் எங்காவது போக வேண்டும்! கடந்த காலத்தின் நல்லாசிகள் இல்லாமல் நிகழ்காலம் சிறப்பாக முடியாதல்லவா?

—காட்சி மாற்றம்—

முடிசூட்டுவிழா-யுதிஷ்டிரரின் தலையில் கிருஷ்ணர் முடியினைச் சூட்டுகிறார்

**விதுர:** சக்கரவர்த்தி சாம்ராட் யுதிஷ்டிரர்....!

**மக்கள்:** வாழ்க ! வாழ்க!

பலருக்கும் தானம் வழங்கப்படுகிறது....!

**யுதிஷ்:** என்னை மன்னனாக ஏற்ற அஸ்தினாபுரிக்கு முதலில் என் சிரம்தாழ்த்தி வணங்கி நன்றி கூறுகிறேன். அடுத்து எனது மூதாதையருக்கு வணக்கத்தைத் தெரிவிக்கிறேன். அநீதியைக் களைந்து நீதியை இந்நாட்டில் நிலை நிறுத்துவேன் என வாசுதேவனுக்கு இத்தருணத்தில் வாக்குறுதி அளிக்கிறேன். மனித வர்க்கத்தின் மேன்மைக்காகவே என்றும் உழைப்பேன் என உறுதி வழங்குகிறேன். மக்களின் நலத்தைப் பார்க்கிலும் எனது மகிழ்ச்சியை மேலாகக் கருதமாட்டேன் என்று குடிமக்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். பிதாமகர் துரோணாச்சாரியார், குலகுரு மற்றும் அங்கதேசத்துக்கதிபர் கர்ணன் ஆகியோர் வீற்றிருந்த ஆசனங்கள் இங்கு காலியாக உள்ளன. அவர்களுக்கும் சிரம்தாழ்த்தி வணங்குகிறேன். நடைபெற்ற யுத்தத்தில் பேரிழப்புக்களையே நாடும் நாமும் கண்டுவிட்டோம். இவற்றை மீண்டும் பெற இன்னும் எவ்வளவு காலமாகுமோ தெரியாது. இன்றைய நிலையில் எமக்கு வழிகாட்டி உதவுமுகமாக சித்தப்பா விதுரர் அவர்களையே பிரதம அமைச்சர் பதவியினை ஏற்க வேண்டும் என்று வேண்டுகிறேன். பீமசேனன் இளவரசனாகிறார்; அர்ச்சுனன் எல்லைகளைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்கிறார். நகுலனும் சகாதேவனும் எனது மெய்ப்பாதுகாவலர்களாக விளங்குவார்கள். எனது பெரியப்பாவின் பாதம் பணிகிறேன். எம்மிடம் எத்தகைய கசப்புணர்வும் கிடையாது. இந்நாட்டு மக்கள் இனிமேல் என்றும் மகிழ்ச்சியுடன் வாழ என்னாலானவற்றைச் செய்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

**பின்னணிப்பாடல்:**

தர்மத்தின் தலைமகனாம் தர்மராஜன் தலைமீது
தார்மீக நெறிபிறழா தனிக்கிரீடமேறியதே!

(அடுத்த இதழில் நிறைவு பெறும்.)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.



படிப்பகம்

அருள் ஜுவலர்ஸ்
AROL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11



## வாயும் -வயிறும் வேறுதான்

← தாய்லாந்திலுள்ள முதலைப் பண்ணையொன்றில் 1 மாத முதலைக்குட்டியொன்றின் வாயில் பச்சை நிறத் தவளை தாவிப்பிடித்துள்ளது. மரக்கிளையென்று நினைத்து இரைக்காகத் திறந்திருந்த முதலைக்குட்டியாரின் வாயில் தாவிப் பிடித்துள்ளார் தவளையார். அடுத்து வரும் ஆபத்தையறியாமல் தொங்குகின்றார். 'நுணலும் முதலை வாயால் கெடும்'

அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

இவ்வாறு சில ருசிகரமான விளம்பர உத்திகள் விழிகளுக்கு

## பொறுப்பதற்கு முடியவில்லை



▲ அன்றைய சஞ்சிகையில் மூழ்கியிருந்த வீட்டு எஜமானியை, சமையல்காரர் செய்த சூப்பின் வாசனை பொறுக்க முடியாமல் செய்து விட்டது.

ஆசை வெட்கமறியாதது. சமயத்தில் விவஸ்தையுமிருக்காது. சஞ்சிகையைப் பொத்துக் கொண்டு செல்லும் அளவுக்கு சூப்வாசனை தூக்கலாக இருக்கிறது. சூப் விளம்பரம் ஒன்றுக்காக மூளையைக் கசக்கி தயாரித்த விளம்பரம்தான் இது. வியாபாரத்தைப் பெருக்க எப்படியெல்லாம் அசத்தலாக சிந்திக்கிறார்கள் பாருங்கள். ஆனாலும் ரசிக்க முடிகிறதல்லவா?

## எரியும் எதிரி



➤ 'புகைத்தல் உடல் நலத்தைப் பகைக்கும்.' என்றெல்லாம் எழுதிப்போடுவதை யாரும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அதனால் ஒரு வித்தியாசமான எச்சரிக்கை.

அழகியின் முகத்தைச் சுற்றி எரிந்து முடிந்த சிகரெட் துண்டுகள். ரசிக்கக்கூடிய அழகு சகிக்க முடியாத சிறையில் சிக்கியிருக்கிறதே. மனம் பதைக்கிறது அல்லவா. அப்படித்தான் புகைத்தலும். புகைத்துவிட்டு, அந்த வாசனை அடிக்கக்கூடாதே என்று வாசனைத்திரவியங்களை உடைகளில் 'ஸ்பிறே' செய்கிறார்களாம். அப்படிச் செய்தாலும் சிகரெட் புகை நெடி உடையில் இருக்கவே செய்யும். நீங்கள் அழகாக இருந்தாலும், உங்கள் உதட்டில் எரிந்த சிகரெட் புகை வாசனை அடுத்தவரை முக்கு சுழிக்கச் செய்யும். ஆகவே எரியும் எதிரியை தொடாதீர்கள் என்று சொல்லத்தான் இந்த உத்தி. கில்லாடித்தனமாக இருக்கிறதல்லவா!

## அழகால் ஆதாயம்



➤ 'சேலை கட்டும் பெண்ணுக்கு ஒரு வாசம் உண்டு' என்பது வைரமுத்துவின் பாடல். சேலை கட்டும் பெண்ணுக்கு வசீகரமும் உண்டு. சேலைகள் என்று காட்டினால்தானே பார்ப்பார்கள் என்றால் மீது சேலையகட்டிப் பெண்கள். (சேலையகட்டி விழிகளை அகல விரித்து ... பொருள். உபயம் பட்டினத்தார்) சேலை விளம்பரத்திற்கு தோதாக பெண்களைப் பயன்படுத்துவது ... ஆனால், ரீவி ஆண்டனா விளம்பரத்திற்கெல்லாம் அழகு நங்கையரை ஏன் பயன்படுத்துகிறார்கள்?

வாரமலர் தினமுரசு

## வானத்தில் ஒரு வல்லவன்




◄ ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு விசேஷ திறமை இருக்கும். ஒருவர் நன்றாக பாடுவார். அவரால் நன்றாக ஆடமுடியாமல் இருக்கலாம். பிரபுதேவா பந்துபோல் துள்ளியாடினாலும் பாடமுடிய வில்லை. மனோ முக்காபுலா பாடலாம். ஆட முடியுமா? அப்படித்தான் போர் விமானங்களும். குண்டு வீச ஒரு விமானம். வானில் எதிரி விமானத்தோடு மோதுவதில் ஈடுபடக்கூடிய விமானம் என்றெல்லாம் தனித்தனியே இருக்கின்றன. இவ்வாறு தனித்தனியே இல்லாமல் சகல போர்த் தொழிலையும் செய்யும் சகலகலாவல்லவ போர் விமானம் ஒன்று தயாராகிவிட்டது.

உலகில் தற்போது அதி நவீன போர் விமானம் இதுதான். இதன் பெயர் ரொர்னாடோ ஜி.ஆர்.1

படத்தில் விமானத்தைச் சுற்றி ரொக்கட்டுக்கள், கிளஸ்ரர் குண்டுகள், மிகச் சிறிய ரொக்கட்டுக்கள் (2 அங்குலம் 58 மி.மீற்றர்) போன்றவை அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இவையனைத்தையும் ஒரே பயணத்தில் காவிச் சென்று தேவைக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ள முடியும். கம்யூட்டர் முறையில்தான் ஏவுகணைகள் ஏவப்படுவது லேட்டஸ்டாக இருந்தது. இப்போது லேசர் கதிர்மூலம் ஏவுகணைகளை இயக்கும் புதிய முறை வந்துவிட்டது. விமானத்திலிருந்தும் லேசர் கதிர் இயக்கத்தால் ஏவுகணைகள் பறந்துவரும். அந்த ஏவுகணைகள் நீருக்குள் உடலை மறைத்துக் கொண்டிருக்கும் நீர் மூழ்கிக் கப்பல்களையும் தாக்கியழித்துவிட வல்லவை. தரையில் உள்ள இலக்குகள் வானில் வரும் விமானம் என்பவற்றையும் வானிலிருந்தே 'ரொர்னாடோ ஜி.ஆர்.1' சங்காரம் செய்துவிடும். இதுதவிர மேலோட்டமான சண்டைக்கு உதவ துப்பாக்கிகளும் இதில் தயாராக இருக்கும். தரையில் எதிரிகள் நடமாடினால் குண்டுகளை விரயமாக்காமல், துப்பாக்கியால் சுடமுடியும். இந்த சகலகலா விமானத்தை நமது நாடு நினைத்துப்பார்க்க முடியாது. அத்தனை விலை. வாங்கினால் பாண் ஒரு இறாத்தல் நூறு ரூபாயாக விற்கவேண்டிவரும். செலவை தாங்கும் வல்லரசு நாடுகளுக்கே இது உபயோகம்.